தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்

பெரியார் பல்கலைக்கழக முனைவர் பட்டப்பேற்றிற்காக
அளிக்கப்பட்ட ஆய்வேடு

ஆய்வாளர்
கு. சீனிவாசன்

நெறியாளர்
முனைவர் பெ.முருகன்
இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
(பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
நாமக்கல் - 637 002.

மே - 2011

முனைவர் பெ. முருகன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
நாமக்கல் - 637 002.

சான்றிதழ்

"தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்" என்னும் தலைப்பில திரு. கு.சீனிவாசன் அவர்கள் முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காகச் செய்துள்ள இவ்வாய்வு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பட்டது என்றும் இவ்வாய்வேடு வேறு எவ்வகையிலும் பயன்படுத்தப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

நாமக்கல்

20/5/2011.

M. [signature] 20/5/11.
(பெ.முருகன்)

முனைவர் பெ. முருகன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
நாமக்கல் – 637 001.

கு. சீனிவாசன்
ஆய்வாளர்
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
நாமக்கல் - 637 002.

உறுதிமொழி

"தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்" என்னும் தலைப்பில் முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக எழுதப்பட்ட இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இவ்வாய்வேடு வேறு எவ்வகையிலும் பயன்படுத்தப்படவில்லை என்று உறுதியளிக்கிறேன்.

நாமக்கல்

20/5/2011.

(கு.சீனிவாசன்)

நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நான் முதுகலைப் பட்டப்படிப்பு பயின்றபோது சிறுகதைத் துறையில் எனக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்படச் செய்தவர் முனைவர் பெ. முருகன் அவர்கள். அப்போதே முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டால் இவரிடத்தில்தான் ஆய்வு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தேன். அதற்கான காலம் கனிந்த நிலையில் மறுப்பேதும் தெரிவிக்காமல் எனக்கு புதிய துறை ஒன்றை அறிமுகப்படுத்தி அதில் என்னை முனைப்புடன் ஆய்வு மேற்கொள்ளச் செய்த நெறியாளர் முனைவர் பெ. முருகன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

பெரியார் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரித் தமிழ்த்துறையில் "தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய முதல்வர் அவர்களுக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சு.நிர்மலா அவர்களுக்கும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் என் நன்றிகள்.

எனக்கு வாழ்க்கை மட்டுமல்லாது வளமும் வழங்கிவரும் திருச்செங்கோடு செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரி நிர்வாகத்தினர்க்கும் முதன்மையர் பேராசிரியர் ஆ.பாலதண்டபாணி அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இவ்வாய்வேடு செம்மையாய் வெளிவரப் பல நிலைகளில் உதவிய நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர்கள் முனைவர் பி.எழிலரசி, முனைவர் மு.நடராஜன், ஈரோடு மாவட்டக் கல்வி அலுவலர் ந.அருள்முருகன், செல்வம் கலை அறிவியல் கல்லூரி உதவிப்பேராசிரியர் ப.நல்லுசாமி, தமிழ்ப் பேரகராதியினையும் ஆய்வு சம்பந்தமான நூல்களையும் எனக்காக அன்புடன் வாங்கித் தந்தவரும் செம்மொழித் தமிழாய்வு மையத்தில் ஆய்வாளராகப் பணியாற்றுபவருமான முனைவர் முத்துசாமி, முனைவர் பட்ட ஆய்வாளர் ரெ.மகேந்திரன் ஆகியோர்க்கு என் இதயப்பூர்வமான நன்றிகள்.

என் தவறுகளைச் சுட்டிக்காட்டி என்னை எப்போதும் வழிநடத்தும் நண்பர்களான கா.முகமது நஜீப், செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் செ.ஆறுமுகம், திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் மு.பாலமுருகன், வேலூர் முத்துரங்கம் கலைக் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் வி.சிவக்குமார், சேலம் அரசு கலைக் கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் ச.சரவணகுமார், வரகூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுநிலைத் தமிழாசிரியர் சி.சந்திரன் ஆகியோர்க்கு இதயப்பூர்வமான நன்றியை என் இதயத்தில் கல்வெட்டாய்ச் செதுக்கியும் இங்கு எழுத்தில் வடித்தும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வேடு உருவாகத் தூண்டுகோல்களாய் இருந்து என் உயர்வுக்கு எப்போதும் உறுதுணையாய் இருக்கும் சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் மு.அனுசுயாதேவி, இராசிபுரம் திருவள்ளுவர் கலைக்கல்லூரி உதவிப்பேராசிரியர் முனைவர் இரா.கலைச்செல்வி, ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர்கள் கீர்த்தி, சுபலஷ்மி, செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் முனைவர் எஸ்.திருமூர்த்தி, இரா.பழனிவேல், உ.கன்னீஸ்வரி, நா.ப்ரீத்தா, உயிர்தொழில் நுட்பத்துறைத்தலைவர் முனைவர் எம்.ஜி.எபி, அலுவலகக் கண்காணிப்பாளர் திருமதி.வ.செல்வலட்சுமி, பொ.பிரகாஷ், ஆகியோர்க்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

“கூடு” ஆய்வுச் சந்திப்பின் வழி இலக்கிய வானில் புதிய புதிய தடங்களையும் பல்வேறுபட்ட அறிஞர்களின் அனுபவங்களையும் அவர்களிள் மூலமாகவே அறிமுகப்படுத்தும் கூடு வாழ் நண்பர்களுக்கும் நன்றிகள்.

என் குறிக்கோளுக்கு உரமும் உயிரும் தந்து இவ்வாய்வினை மிகச்சிறந்த முறையில் கணினியில் தட்டச்சு செய்து என்னை எப்போதும் இயக்கி வரும் என் துணைவி க.விஜயலெஷ்மி அவர்களுக்கும் எனது பெற்றோர்க்கும் என் மழலைச் செல்வங்களான வி.சீ.பிருதிவிராஜ், வி.சீ.பிரணவ்ராஜ், உறவுகளான திரு. ப.மோகன்குமார், திருமதி க.சாந்தி, திரு. கணேசன், திரு. க.இராஜசேகர், திரு. சி.முருகன், திருமதி ந.மலர் ஆகியோர்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நட்புகளுக்கும் என்றும் என் நன்றிகள்.

உள்ளடக்கம்

சுருக்க விளக்கம்

இடை.	--	இடையியல்
உரி.	--	உரியியல்
எச்.	--	எச்சவியல்
சீவக.	—	சீவகசிந்தாமணி
சூடா.	--	சூடாமணி
திவ்.	—	திவ்வியப் பிரபந்தம்
திவா.	—	திவாகரம்
தொ.ஆ.	—	தொகுப்பாசிரியர்
தொல்.	--	தொல்காப்பியம்
நன்.	—	நன்னூல்
நூ.	--	நூற்பா
ப.	--	பக்கம்.
ப.ஆ.	—	பதிப்பாசிரியர்
பக்.	—	பக்கங்கள்.
பிங்.	—	பிங்கலந்தை
மரபி.	—	மரபியல்
மு.ஆ.	—	முதன்மைப்பதிப்பாசிரியர்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் தலைசிறந்த அகராதியாகத் “தமிழ் லெக்ஸிகன்” (Tamil lexicon) எனப்படும் தமிழ்ப் பேரகராதியை வெளியிட்டது. இதில் தலைச்சொற்களின் பதிவாக மொத்தம் 1,24,405 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இச்சொற்கள் யாவும் ஜி.யு. போப் அவர்கள் சேகரித்த சொற்களோடு பழமையான இலக்கிய, இலக்கண நூல்களிலிருந்தும் பல்வேறு தரப்பு மக்களிடமிருந்தும் ஆர்வலர்களிடமிருந்தும் சேகரிக்கப்பட்டனவாகும். இதன் பதிப்பாசிரியராக எஸ். வையாபுரிப்பிள்ளை செயல்பட்டுள்ளார்.

இவ்வகராதி அருஞ்சொல் அகராதி போல் அல்லாது மிகச் சிறந்த சொற்களஞ்சியமாகத் திகழ்கிறது. இதில் பல அரிதான சொற்களும் சமயம், மருத்துவம், ஜோதிடம், இசை, பேச்சு வழக்கு, இழி வழக்கு, வட்டார வழக்கு, இலக்கிய வழக்கு, பிறமொழிச் சொற்கள் எனப் பலவும் காணப்படுகின்றன. ஆங்கில அறிவு சிறிதும் இல்லாதவருக்கும் பயன்படும் வகையில் இவ்வகராதி அமைந்துள்ளது. தமிழ்மொழி மற்ற மொழிகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதை உணர்த்துவதாகவும் உள்ளது. மேலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவருக்கும் தெளிவான, முழுமையான, மரபு வழிப்பட்ட, நவீன அகராதியாகத் திகழ்கிறது.

ஆய்வுத் தலைப்பு

“தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்” என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வு நோக்கம்

தமிழ்ப் பேரகராதியில் பதிவாக்கப்பட்டுள்ள வட்டார வழக்குச் சொற்களைத் தனியாகத் தொகுத்து அவற்றின் பதிவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள அகராதியியல் நெறிமுறைகளைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

முதன்மைச் சான்று

சென்னைப் பல்கலைக்கழகம் பின்னிணைப்புடன் ஏழு தொகுதிகளாகத் தயாரித்து வெளியிட்டுள்ள “தமிழ் லெக்ஸிகன்” என்னும் தமிழ்ப் பேரகராதியே இந்த ஆய்வின் முதன்மைச் சான்றாகும்.

துணைமைச் சான்றுகள்

வட்டார வழக்குத் தொடர்பாகத் தோன்றியுள்ள பல்வேறு வட்டார வழக்கு அகராதிகளும் அகராதி தொடர்பான ஆய்வு நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்விற்குத் துணைமைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

கருதுகோள்

1. தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குச் சொற்பதிவுகள் ஒப்பீட்டளவில் மிகுதி எனினும் வட்டார வழக்குச் சொல் வளத்தைக் காண்கையில் போதுமானவை அல்ல.
2. வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்ய வேண்டும் என்னும் அகராதிப் பதிப்புக் குழுவின் திட்டம் ஓரளவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இயல் பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களில் அமைந்துள்ளது.

இயல் - ஒன்று - தமிழில் அகராதிகளும் தமிழ்ப் பேரகராதியும்

இருபதாம் நூற்றாண்டு வரை தமிழில் தோன்றியுள்ள அகராதிகளின் அமைப்பு, பொது அகராதிகளின் அமைப்பு, தமிழ்ப் பேரகராதியின் தோற்றம், அமைப்பு மற்ற அகராதிகளிலிருந்து எவ்வகையில் தமிழ்ப் பேரகராதி வேறுபட்டுள்ளது என்பது குறித்து இவ்வியல் விளக்குகின்றது.

இயல் - இரண்டு - குறிப்பான்களும் குறியீடுகளும்

தமிழ்ப் பேரகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ள இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்கள் குறித்தும் பதினொரு குறியீடுகள் குறித்தும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. மேலும் இக்குறிப்பான்களைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள், அவை அகராதியில் தரப்பட்டுள்ள முறையில் ஏற்படும் சிக்கல்கள் ஆகியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன

இயல் - மூன்று – வட்டார வழக்குப் பதிவுகள்

தமிழ்ப் பேரகராதியில் தலைச்சொல்லாக இடம் பெற்றுள்ள 1,24,405 சொற்களில் வட்டார வழக்குப் பதிவாகக் காணப்படும் குறிப்பான்களில் உள்ள சொற்கள், அவற்றின் பதிவுகள், அகராதியில் வட்டார வழக்குச் சொல் பதிவின் அவசியம் ஆகியவை இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

இயல் - நான்கு - சிக்கல்களும் தீர்வுகளும்

இவ்வகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ள தலைச்சொற்களின் பொருளை அறிய அணுகும்போது ஏற்படும் சிக்கல்கள், குறிப்பான்கள் தரும் முறையில் நிலையான நெறிமுறையைக் கையாளாததால் ஏற்படும் சிக்கல்கள், மொழியின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியக் காரணியாக விளங்கும் சாதாரண மக்கள் பேசும் வட்டார வழக்கு, பேச்சு வழக்கு, உள்ளூர் வழக்கு முதலான சொற்களின் வேறுபாடு, அவற்றை அணுகும் போது ஏற்படும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் முதலியன இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

முடிவுரை

மேற்கண்ட நான்கு இயல்களில் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் முடிவுரையில் தொகுத்தளிக்கப்படுகின்றன.

ஆய்விற்குத் துணைநின்ற நூல்கள் துணைநூற் பட்டியலிலும் தமிழ்ப் பேரகராதி உருவான வரலாறு, தமிழ்ப் பேரகராதி வெளியீட்டு அட்டவணை, வட்டாரவழக்குக் குறிப்பான்கள் அட்டவணை, எழுத்துக்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட குறிப்பான்களின் அட்டவணை, ஊர், நாடு, ஜாதி, குழு, மொழி, இலக்கணம், துறை, பொது என்ற அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட அட்டவணைகள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

இயல் : ஒன்று

1. தமிழில் அகராதிகளும் தமிழ்ப் பேரகராதியும்

மொழியின் சிறப்பு அதன் சொல் வளத்தைப் பொறுத்தது. தமிழ்மொழி நீண்ட நெடிய வரலாறு உடையது. சங்க இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்களான காப்பியங்கள், பக்திப் பனுவல்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், இக்கால இலக்கியங்கள் எனப் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வளர்ந்துள்ளன. எனவே தமிழ்மொழியின் சொல்வளம் அளவிட முடியாதது.

இலக்கணமும் அகராதியும்

இலக்கணம் தனித்தனிச் சொற்களின் இயல்பு பற்றிப் பேசாமல் குறிப்பிட்ட இலக்கணக்கூறுகள் பற்றிய இலக்கணத்தை வரையறுக்கின்றது. தமிழ் இலக்கண மரபில் பெயர், வினை, இடை, உரிகளின் பொது இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இவற்றின் இயல்பு மீறியவை பற்றிக் கூறப்படவில்லை. இதைப் போலவே வினைகளின் சொல்விரிவுகளுக்கும் ஆக்கச் சொற்களின் உருவாக்க நெறிமுறைகளுக்கும் இலக்கண வரையறை செய்யப்படவில்லை. ஆனால் இவை அனைத்தும் அகராதியில் இடம்பெற்றுள்ளன. இலக்கணமும் அகராதியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன என்பதைத் தமிழ் மரபிலக்கணங்களில் சொற்பொருள் கூறும் பகுதி தனியாக இடம் பெற்றுள்ளதிலிருந்து அறியமுடிகிறது. இலக்கணம் விதிமுறைகளுக்கு உட்பட்டு எளிதில் சொல் விரிவுகளைப் படைக்கவல்லதாக உள்ளது. ஆனால் இலக்கண விதிமுறைகளுக்கு மாறுபட்ட சொல் விரிவுகளையும் ஆக்கச் சொற்களையும் தலைச்சொற்களாய் அகராதிகள் கொண்டுள்ளன. அதாவது அகராதி விதிமுறைகளுக்கு உட்படாத வரையறுத்துக்கூற இயலாத வடிவங்களை உள்ளடக்கியது.

இலக்கணம் சொல் பற்றியது. அகராதி சொற்பொருளைத் தருவது. இலக்கணம் முடிவுறும் அமைப்புடையது (Closed end). அகராதி திறந்த அமைப்புடையது (Open end). இலக்கணம் பெயர், பெயரெச்சம், வினை, வினையெச்சம், வினைமுற்று என்னும் பிரிவுகளையும் (Classes) அகராதி தளியன்களையும் (Members) சார்ந்தன. இலக்கணம் சொல் வடிவங்களில் கவனம் செலுத்த, அகராதி பொருளில் கவனம் செலுத்துகின்றது. இலக்கணம் கட்டுடையது (Bound). அகராதி கட்டிலாதது (Free). எனவே புளூம்ஃபீல்டு (Bloomfield) அகராதியை “இலக்கணத்தின் பின்னிணைப்பு”[1] என்கிறார். முற்காலத்தில் தமிழ்ச்சொற்களைச் செய்யுள் வடிவிலான நிகண்டுகள் வகைப்படுத்தித் தொகுத்தன.

அதற்கு முன்னரே தொல்காப்பியத்திலேயே சொற்களின் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. அகராதி வளர்ச்சி வரலாற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம் [2] என்கிறார் வ.ஜெயதேவன். இப்பிரிப்பு மிகவும் பொருத்தமானது. அவை:

1. நிகண்டுகளுக்கு முற்பட்ட காலம்
2. நிகண்டுக் காலம்
3. அகராதிக் காலம்.

1. நிகண்டுகளுக்கு முற்பட்ட காலம்

தமிழில் கிடைக்கப்பெறும் மிகவும் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில் உள்ள இடையியல், உரியியல், பொருளதிகாரத்தில் உள்ள மரபியலில் சொற்பொருள் கூறும் அகராதிக் கூறுகள் அமைந்துள்ளன.

சொல்லதிகாரம் இடையியலில் மொத்தமுள்ள நாற்பத்தெட்டு நூற்பாக்களில் மன், தில், கொன், உம், ஓ, ஏ, என, என்று, தில்லை, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர், குரை, மா, மியா, இக, மோ, மதி, இகும், சின், அம்ம, ஆங்க, யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, ஆக, ஆகல், என்பது, ஔ, எனா, என்றா, ஒடு முதலிய நாற்பத்து இரண்டு இடைச்சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார்.

உதாரணமாக,

'மன்' என்னும் இடைச்சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை என்னும் மூன்று பொருள் உடையது என்பதை,

கழிவே யாக்கம் மொழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (தொல் - இடை – 4)

என்னும் நூற்பா காட்டுகிறது.

அதேபோல், 'கொன்' என்னும் இடைச்சொல்லிற்கு அச்சம், பயமின்மை, காலம், பெருமை என்றும் 'மன்ற' என்னும் சொல்லிற்குத் தேற்றம் (தெளிவு) என்றும் 'தஞ்சம்' என்பதற்கு எண்மை (எளிமை) என்றும் 'அந்தில்' என்பதற்கு ஆங்கு என்னும் இடப்பொருளையும் கூறி விளக்கியுள்ளார்.

உரியியலில் உள்ள 100 நூற்பாக்களில் உறு, தவ, நனி, உரு, புரை, குரு, கெழு, செல்லல், இன்னல், மல்லல், ஏ, உகப்பு, உவப்பு, பயப்பு, பசப்பு, இயைபு, இசைப்பு, அலமரல், தெருமரல், மழ, குழ, சீர்த்தி, மாலை, கூர்ப்பு, கழிவு, கதழ்வு, துனைவு, அதிர்வு, விதிர்ப்பு, வார்தல், போகல், ஒழுகல், தீர்தல், தீர்த்தம், கெடவரல், பண்ணை, தட, கய, நளி, பழுது, சாயல், முழுது, வம்பு, மாதர், நம்பு, மேவு, ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய், புலம்பு, துவன்று, முரஞ்சல், வெம்மை, பொற்பு, வறிது, ஏற்றம், பிணை, பேண், பனை, படர், பையுள், சிறுமை, எய்யாமை, நன்று, தா, தெவு, தெவ்வு, விறப்பு, உறப்பு, வெறுப்பு, கம்பலை, கம்மை, கலி, அழுங்கல், கழுகு, செழுமை, விழுமம், கருவி, கமம், அரி, கவவு, துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல், இலம்பாடு, ஒற்கம், ஞெமிர்தல், பாய்தல், கவர்வு, சேர், வியல், பேம், நாம், உரும், வய, வாள், துயவு, உயா, உசா, வயா, கறுப்பு, சிவப்பு, நொசிவு, நுழைவு, நுணங்கு, புனிறு, நனவு, மதவு, யாணர், அமர்தல், யாண், பரவு, பழிச்சு, கடி, ஐ, முனிவு, வை, எறுழ் என்னும் 120 சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார்.

உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப (தொல் - உரி. - 3)

என்ற நூற்பாவில் உறு, தவ, நனி, என்னும் மூன்றும் "மிகுதி" என்னும் பொருள் தரும் என்கிறார்.

மல்லல் வளனே — (மல்லல் - வளம்) ---- (உரி. - 7)
பயப்பே பயனாம் — (பயப்பு — பயன்) --- (உரி. - 10)
பசப்பு நிறனாகும் — (பசப்பு — நிறம்) --- (உரி. -11)
இசைப்பு இசையாகும் — (இசைப்பு - இசை) -- (உரி. - 12)
தடவும், கயவும், நளியும் பெருமை — (தட,கய,நளி — பெருமை) — (உரி. - 24)
மழவும், குழவும் இளமைப் பொருள் — (மழ, குழ - இளமை) — (உரி. - 15)

கடி என்னும் உரிச்சொல்லிற்கு, வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்னேற்று, ஐயம், கரிப்பு எனப் பன்னிரண்டு பொருள்களைத் தரும் தொல்காப்பியர்,

கடியென் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்சம் முன்னேற் றாயீரைந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே

ஐயமுங் கரிப்பும் ஆகலும் உரித்தே (தொல் - உரி. – 87, 88)

என்னும் நூற்பாக்களில் கூறியுள்ளவை குறிப்பிடத்தக்கவையாகும்.

'கடி' என்னும் சொல்லிற்குக் 'கடித்தல" என்றும், 'மாலை' என்பதற்கு 'இயல்பு' என்றும் தொல்காப்பியர் பொருள் கூறியுள்ளார். 'கடித்தல்' என்பது வினைச்சொல்லாகும். வரைவு, கூர்மை, புதுமை என்பது கடி என்னும் உரிச்சொல்லுக்குப் பொருளாகும். 'மாலை' என்பதற்கு 'மாலை நேரம்" என்ற பொருளும் வழக்கில் உண்டு. இது காலப் பெயர்ச் சொல்லாகும்.

மரபியலிலும் சொற்பொருள் கூறும் முறை அமைந்துள்ளது. 'மரபு' என்றால் 'தொன்று தொட்டு', 'வழிவழியாக' எனலாம். தொல்காப்பியத்தில் வழிவழியாய் வழங்கி வரும் சொற்பொருள்களைக் கூறியுள்ளார். உதாரணமாக, நாயின் குட்டியை நாம் 'நாய்க்குட்டி' என்றும் அணிலின் பிள்ளையை 'அணில் பிள்ளை' என்றும் அழைப்பதே மரபு. அதைவிடுத்து நாய்க்குட்டியை நாய்க்குஞ்சு எனவும், அணிலை 'அணிற்குஞ்சு' எனவும் அழைப்பது தவறாகும்.

தொல்காப்பியர் மரபியலில் பார்ப்பு, பிள்ளை என்னும் இரு பெயர்களையும் பற்றி,

பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை (தொல் - மரபி. - 4)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மூங்கா வெருகுஎலி மூவரி அணிலொடு

ஆங்கவை நான்கும் குட்டிக்கு உரிய (தொல் - மரபி. - 6)

பறழ் எனப்படினும் உறழாண் டில்லை (தொல் - மரபி. - 7)

மேற்கண்ட நூற்பாக்களில் குட்டி, பறழ் என்பவை மூங்கா(கீரி), வெருகு(பூனை), எலி, அணில் ஆகிய இந்நான்கிற்கும் வழங்கப்படும் இளமைப்பெயர்கள் எனக் குறிப்பிடுகிறார்.

நாய், பன்றி, புலி, முயல் ஆகியவற்றிற்குக் 'குருளை' என்றும் ஆடு, குதிரை, புள்ளிமான், உழை என்பவற்றிற்கு 'மறி' என்றும் குரங்கிற்குக் 'குட்டி' என்றும் யானை, குதிரை, கழுதை, மான் ஆகியவற்றிற்குக் 'கன்று' என்றும் கூறியுள்ளார். இவ்வாறே மற்றவற்றிற்கும் இளமைப் பெயர்களைத் தந்துள்ளார்.

நாயே பன்றி புலி முயல் நான்கும்
ஆயுங் பாலைக் குருளை என்ப (தொல் - மரபி. - 8)
நரியும் அற்றே நாடினர் கொளினே (தொல் - மரபி. - 9)
குட்டியும் பறழும் கூற்றவண் வரையார் (தொல் - மரபி. - 10)

ஆகிய நூற்பாக்களின்வழி இதனை அறியலாம்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார். ஓரறிவு என்பது தொடு உணர்வு, ஈரறிவு என்பது அதனுடன் சுவையுணர்வு, மூவறிவு என்பது அவற்றொடு வாசனையுணர்வு, நாலறிவு என்பது அவற்றொடு கண்ணறிவு, ஐந்தறிவு என்பது அவற்றொடு செவியுணர்வு, ஆறறிவு என்பது அவற்றொடு மனம் என்று குறிப்பிடுகிறார். இதனை,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (தொல் - மரபி. - 27)

என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார்.

மரம், புல், முதலியன ஓரறிவு உயிர்கள் என்றும் நந்து (நத்தை), முரள்(இப்பி), முதலியன ஈரறிவு உயிர்கள் என்றும் சிதல்(கரையான்), எறும்பு முதலியன மூவறிவுயிர்கள்

என்றும் நண்டு, தும்பி, முதலியன நான்கறிவுயிர்கள் என்றும் மா(விலங்கு), புள்(பறவை) முதலியன ஐந்தறிவு உயிர்கள் என்றும் மக்கள், ஒரு சில அறிவுடைய விலங்குகள் ஆறறிவு உயிர்கள் என்றும் குறிப்பிடுகிறார். இதனை,

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல் - மரபி. - 28)
மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல் - மரபி. - 33)
ஒருசார் விலங்கும் உளவென மொழிப (தொல் - மரபி. - 34)

ஆகிய தொல்காப்பிய நூற்பாக்களின்வழி அறியலாம்.

சொற்களை அகர வரிசையில் அமைத்துப் பொருள் கூறுவது அகராதிகளில் பெரும்பாலும் காணப்படுகிறது. ஆனால் தொல்காப்பியர்,

எழுத்தெனப்படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்ப.்.தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே (தொல்-எழுத்து-நூல்மரபு-1)

என அகரம் முதல் னகரம் ஈறாகத் தமிழ் நெடுங்கணக்கின் அகர வரிசையைக் குறிப்பிட்டுள்ளார். உயிர்மயங்கியலிலும் அகர ஈறு தொடங்கி ஔகார ஈறு ஈறாக அகரவரிசையில் கூறியிருப்பதை,

அகர இறுதிப் பெயர் நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் க ச த பத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்று இடைமிகுமே (தொல்-எழுத்து-உயிர்மயங்கியல்-203)

என்னும் நூற்பாவழி அறியலாம்.

தொல்காப்பிய இடையியல், உரியியல், மரபியல் ஆகிய மூன்று இயல்களில் சொற்பொருள்கள் தரப்பட்டுள்ளன. இடையியல், மரபியலைக் காட்டிலும் உரியியல் முழுக்க முழுக்கச் சொற்பொருள் கூறும் அகராதியாகவே திகழ்கிறது. இவையன்றியும் நூல் முழுமையும் ஆங்காங்கே பொருள் உணர்ந்து கொள்ளுமாறு சொற்பொருள்களைக் குறிப்பிடுகின்றார். ''ஆண்'' என்னும் அ.்.றிணைப் பெயர் ''அம்மு''ப் பெற்று முடியும் என்பதைப் புள்ளிமயங்கியலில்,

''ஆண் மரக் கிளவி யரைமர வியற்றே'' (தொல்-எழுத்து-புள்ளிமயங்கியல்-304)

எனக் குறிப்பிடுகிறார்.

அம்முப்பெரும் நிலையை வரையறுக்கும் தொல்காப்பியர் ஆணும் அரையும் மரங்களைக் குறிப்பன என்றும் இவ்வாறு தொல்காப்பியத்தில் இருபத்து ஐந்து நூற்பாக்களில் பொருள் விளக்கியுள்ளதாக வ. ஜெயதேவன் குறிப்பிடுகிறார்[3].

உரியியல் முழுமையிலும் 120 சொற்களுக்குப் பொருள் விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கடுமையான சொற்களுக்கு மட்டுமே பொருள் விளக்குகிறார். தெளிவான சொற்களுக்குப் பொருள் கூறவில்லை என்பதை,

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா

வெளிப்பட வாரா உரிச்சொல் மேன [4] (தொல்-உரியியல்-783)

எனக் குறிப்பிட்டு அருஞ்சொற்களுக்கு மட்டுமே பொருள் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்தில் அகர நிரல் கருத்து இருப்பினும் அது பொருள் கூறுவதற்காய் இல்லாமல் மனனம் செய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது [5] என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் உரியியலில் 120 சொற்களையும் அவற்றிற்குப் பல்வேறு பொருள்களாகப் பல சொற்களையும் கூறிவிட்டு, இறுதியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார். ‘‘எடுத்துக் கூறியுள்ள சொற்களைப் புரிந்து கொள்வதற்காக அவற்றின் பொருள்களாகச் சொல்லப்பட்டுள்ள சொற்களும் சிலருக்குப் புரியவில்லையென்றால், அவற்றிற்கும் நான் பொருள் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. அப்படிச் சொல்வதானால் அதற்கு எல்லையிராது. எனவே ஒருவனுக்குப் பொருள் புரியவில்லையென்றால் அவனுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் நன்றாகத் தெரிந்த வேறு ஓர் எளிய சொல்லின் துணைகொண்டு அல்லது கண்ணுக்குத் தெரியும் ஓர் உருவப் பொருளைக் காட்டி அதன் துணைகொண்டு விளக்கலாம். ஆசிரியர் எவ்வளவுதான் முயன்று உணர்த்தினும் கற்பவரின் உணரும் ஆற்றலையும் பொறுத்தே பொருள் புலப்பாட்டால் வெற்றி கிடைக்கும்’’ என்று தொல்காப்பியரே,

‘‘பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே’’ (தொல்-உரியியல்-874)

‘‘பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின் ’’ (தொல்-உரியியல்-875)

‘‘உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே ’’ (தொல்-உரியியல்-876)

ஆகிய நூற்பாக்களின் வழி உணர்த்துகின்றார்.

தொல்காப்பியர் அகராதி ஆசிரியரா?

தொல்காப்பியத்தின் இடையியல், உரியியல், மரபியல் ஆகிய மூன்று இயல்களில் சொற்பொருள்கள் தரப்பட்டுள்ளன. இடையியல், மரபியலைக் காட்டிலும் உரியியல் முழுக்க முழுக்கச் சொற்பொருள் கூறும் அகராதியாகவே திகழ்கிறது. இவற்றை உற்றுநோக்கினால் அனைவரும் அறிந்த பொருளைத் தொல்காப்பியர் தராமல் அரிய பொருளை மட்டும் விளக்கி இருப்பதை அறியலாம்.

இலக்கணத்தில் சொற்பொருளின் பங்கை அவர் உணர்ந்த காரணத்தினால் இலக்கணத்தின் ஒரு கூறாகக் கருதியுள்ளார் [6]

என்று க.பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார்.

ஒட்டுமொத்தத்தில் தொல்காப்பியர் அகராதிக் கலைஞராக மட்டுமின்றிச் சொற்பொருளியல் அறிஞராகவும் விளங்கியுள்ளார் [7] என்று பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் சொற்களுக்கான பொருள் அகரவரிசையில் வரிசைப்படுத்தித் தரப்படவில்லை. சொற்களைத் தொகுப்பது அவரின் பணியாகத் தெரியவில்லை. மாறாக கடினமான சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளாரே தவிர, அவர் ஒரு அகராதி ஆசிரியரா என்றால் இல்லை. இத்தகைய கடினமான சொற்களுக்குப் பிற்காலத்தில் எளிமையாக அனைவரும் பொருள் உணர்வதற்காகத் தந்திருக்கலாம். இதனால் தமிழ்ச்சொல் வளத்தினை அறிய முடிகிறது. எனவே இன்றைய அகராதியின் இலக்கணத்திற்கு வித்திட்ட முன்னோடி தொல்காப்பியர் எனக் கருதலாம்.

இலக்கணத்தின் ஒரு பகுதியாக இருந்த சொற்பொருள் கூறும் மரபு தனியொரு பிரிவாக நிகண்டாகப் பிற்காலத்தில் வளர்ந்தது.

2. நிகண்டுக்காலம்

தமிழ் அகராதி வளர்ச்சி வரலாற்றில் நிகண்டுகளின் பங்கு கணிசமானதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது. மனப்பாடம் செய்வதற்கும் எளிதில் நினைவில் வைத்துக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் நூற்பாவினால் இயற்றப்பட்ட சொற்பொருள் கூறும் முறையே நிகண்டு ஆகும்.

நிகண்டு என்னும் வடமொழிச் சொல்லிற்குச் சொற்றொகுதி என்று பொருளாகும். சொற்களின் தொகுதியாக கூட்டமாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டிருப்பதலால் நிகண்டு என்னும் பெயர் தரப்பட்டதாம்[8]

என்கிறார் சுந்தர சண்முகனார்.

நிகண்டு நூல்கள் எல்லாம் சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதித் துறையைச் சார்ந்தவையாகும். இன்று கிடைத்துள்ள தமிழ் நிகண்டுகளில் பழமையானது திவாகரர் இயற்றிய சேந்தன் திவாகர நிகண்டேயாகும். இது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பர். இது பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்கெல்லாம் வழிகாட்டியாகும். இதனைத் தொடர்ந்தே பிங்கலரின் பிங்கலந்தை, மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டு, காங்கேயரின் உரிச்சொல் நிகண்டு, ரேவண சித்தரின் அகராதி நிகண்டு, கயாதரரின் கயாதர நிகண்டு, பரமானந்த பாரதியின் பாரதி தீபம், ஆண்டிப் புலவரின் ஆசிரிய நிகண்டு, சுவாமிநாத கவிராயரின் பொதிகை நிகண்டு, கோபாலசாமி நாயக்கரின் அபிதான தனிச்சொல் நிகண்டு, கைலாசம் என்பவரின் கைலாச நிகண்டு சூடாமணி, அருமந்தை தேசிகரின் அரும்பொருள் விளக்க நிகண்டு, சுப்பிரமணிய பாரதியின் பொருட்டொகை நிகண்டு, சிவசுப்பிரமணியக் கவிராயரின் நாமதீப நிகண்டு, வேதகிரியாரின் வேதகிரியார் சூடாமணி நிகண்டு, இலக்கியத் திறவுகோல், நாநார்த்த தீபிகை, கந்தசுவாமியம், நவமணி காரிகை நிகண்டு, விரிபொருள் நிகண்டு, நேர்சொல் நிகண்டு தோன்றியுள்ளன.

திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு முதலிய நூல்கள் நிகண்டு என்னும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டது பிற்காலத்தில்தான். முற்காலத்தில் அவை உரிச்சொல் என்னும் பொதுப்பெயராலே அழைக்கப்பட்டன.

நிகண்டு தமிழில் தோன்றுவதற்கு முன்னர் சொற்பொருள் உரைக்கும் நூல்கள் உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்ற பொதுப்பெயரால் வழங்கப் பெற்று வந்தன என்று தமிழ் நிகண்டுகள் குறித்த ஆய்வில்'' சற்குணம் குறிப்பிடுகிறார்.[9]

சொற்பொருள் உரைக்கும் நூல்கள் தொடக்கத்தில் செய்யுள் நடையிலும் பிற்காலத்தில் உரைநடையிலுமாகச் செய்யப்பட்டன. செய்யுள் நடையில் ஆக்கப்பெற்ற நூல்கள் நிகண்டு என்றும், உரைநடையில் ஆக்கப்பெற்ற நூல்கள் அகராதி என்றும் வழங்கப் பெறுகின்றன.[10]

நிகண்டு நூல்கள் அகராதியைப் போல் தனித்தனிச் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்படாமல் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. எனவே சொற்களை முதலெழுத்து வாரியாக அகரவரிசையில் அமைக்க வேண்டுமென்ற உணர்வு அரும்பலாயிற்று[11]. இதைத் தொடர்ந்தே அகராதி நிகண்டு தோன்றியது.

அகராதி நிகண்டு

தமிழ்மொழியில் முதல் அகராதி என்று போற்றப்படுவது இரேவண சித்தர் இயற்றிய அகராதி நிகண்டேயாகும். இது 1594 ஆம் ஆண்டு தோன்றியது. தமிழ் நிகண்டுகளிலேயே முதன்முதலில் இந்நிகண்டில்தான் சொற்கள் அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. சொற்கள் அ, ஆ, இ, ஈ......என்ற அகர வரிசையில் முறைப்படுத்தப்பட்டிருப்பதால் இந்நிகண்டு அகராதி நிகண்டு என்று பெயர்பெற்றது. இதில் ஒரு பொருளுடைய சொல், இரு பொருளுடைய சொல் என நாற்பத்து ஆறு பொருளுடைய சொல்வரை பொருள் தொகை அடிப்படையில் பகுத்து 3368 நூற்பாக்களில் பொருள் விளக்கப்பட்டுள்ளது. அகராதி என்னும் சொல்லே இந்நூலில் தான் முதன்முதலில் கையாளப்பட்டுள்ளது. அகராதி என்று அழைக்கக் கற்றுக்கொடுத்ததே இந்நிகண்டுதான் என்று சுந்தரசண்முகனார் குறிப்பிடுகிறார். ஆனால் அகராதி என்னும் சொல் திருமந்திரத்திலேயே இடம் பெற்றுள்ளதாக[12] வ.ஜெயதேவன் குறிப்பிடுகின்றார்.

இது ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதியினைச் சார்ந்துள்ளது. திவாகர நிகண்டின் 11ஆம் தொகுதியைப் போன்றே அமைந்துள்ளது. இதனை மதுரைத் தமிழ்ச்சங்கம் 1921இல் பதிப்பித்துள்ளது.

3. அகராதிக் காலம்

ஐரோப்பியர் வருகைக்குப்பின் மொழியிலும் கல்வி முறையிலும் அறிவியலிலும் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகச் செய்யுள் வடிவிலிருந்த நிகண்டுகளும் மாற்றம் பெறலாயின. எதையும் மனப்பாடம் செய்யும் பழக்கம் நெகிழ்ச்சியுற்றுத் தேவையானபோது

தேவையானதைப் பார்த்து உணரத்தக்க வகையில் கருவி நூல்கள் தேவைப்பட்டன. இத்தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் 17ஆம் நூற்றாண்டில் அகராதிகள் தோன்றத் தொடங்கின.

17ஆம் நூற்றாண்டு அகராதிகள்

அகராதி மோனைக்கு அகராதி எதுகை, பத்துச்சொல் அகராதி, வைணவ விளக்க உரை அருஞ்சொல் அகராதி, தமிழ் போர்ச்சுகீசிய அகராதி முதலிய அகராதிகள் 17ஆம் நூற்றாண்டில் தோன்றியுள்ளன.

18ஆம் நூற்றாண்டு அகராதிகள்

ஐரோப்பிய மொழிகளோடு தமிழ் பிணைந்த மற்ற அகராதிகள் இந்நூற்றாண்டில் அதிகமாய்த் தோன்றத் தொடங்கின. திக்சியனரியம் தமுலிசம், தமிழ்-லத்தீன் அகராதி, லத்தீன்-தமிழ் அகராதி, பெஸ்கியின் சதுரகராதி, தமிழ்-பிரஞ்சு அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி, பெப்ரீஷியஸ் தமிழ்-ஆங்கில அகராதி, ஆங்கில-தமிழ் அகராதி போன்றவை இக்காலத்தில் தோன்றியுள்ளன.

சதுரகராதி

கிறித்தவச் சமயத்தைப் பரப்புவதற்காக இத்தாலியிலிருந்து 1710ஆம் ஆண்டு தமிழகம் வந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் மேலை நாட்டுக் கிறித்தவர் தமிழுக்குப் பல அளப்பரிய தொண்டுகளைச் செய்துள்ளார். இலக்கணம், இலக்கியம், உரைநடை போன்றவற்றோடு அகராதியையும் தமிழில் வெளியிட்டுள்ளார்.

தமிழில் தோன்றிய அகராதிகளுக்கெல்லாம் இதுவே முன்மாதிரியாக உள்ளது. அகராதியில் முதல் எழுத்து அல்லது இரண்டாம் எழுத்தோடு நின்று விடாமல் சொல்லின் கடைசி எழுத்துவரை அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சதுர் என்றால் நான்கு என்று பொருள். இவ்வகராதி பெயரகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் நான்கு பிரிவுகள் உடையதாகலின் சதுரகராதி என்னும் பெயர் பெற்றது. பெயரகராதி என்னும் பிரிவில் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

கி.பி 1732இல் எழுதப்பட்ட இவ்வகராதியினை முதன்முதலில் ஜே.வில்சன் என்பவர் பதிப்பித்துள்ளார். நான்கு தொகுதிகளையுடைய இவ்வகராதியின் பொருளகராதியினைத் திருச்சிற்றம்பல ஐயரின் உதவியோடு 1819இல் எல்லிஸ் (Ellis) என்பவர் பதிப்பித்துள்ளார். 1824இல் சென்னை கல்லூரி இயக்குநராகிய ரிச்சர்டு கிளார்க் (Richard Clarke) என்பவரின் ஆணைப்படி தாண்டவராய முதலியார், இராமச்சந்திரக்கவிராயர் ஆகியோர் மேற்பார்வையில் இதனைப் பதிப்பித்து

வெளியிட்டுள்ளார். 1835இல் ஜே.ஸ்மித் (J.Smith) இதன் இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார். 1860இல் விசாகப்பெருமாள் ஐயர், பொன்னம்பல முதலியார் ஆகியோரின் உதவியோடு பெர்சிவலின் மேற்பார்வையில் மூன்றாம் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று வ.ஜெயதேவன் குறிப்பிடுகிறார்[13]. 1928இல் நான்காம் பதிப்பும் வெளிவந்துள்ளது. இதுவரை பத்து பதிப்புகள் வெளிவந்துள்ளதாக சூ.இன்னாசி குறிப்பிடுகிறார[14].

இவ்வகராதியில் குறில், நெடில் வேறுபாடு சுட்டப்பட்டுள்ளதாகவும் சொற்களின் சிறுவிளக்கத்திற்கெல்லாம் பேச்சுவழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சூ.இன்னாசி குறிப்பிடுகிறார் [15].

தமிழ் அகராதி வரலாற்றில் இவ்வகராதிக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஏனைய அகராதிகளுக்கு இது வழிகாட்டியாக அமைவதோடு கடினமான சொற்களுக்குப் பொருள் கூறும் மரபையும், செய்யுளில் பொருள் கூறும் மரபையும் தவிர்த்து எளிய சொற்களுக்கும் உரைநடையில் பொருள் கூறும் நூலாக விளங்குகிறது.

அதனாலேயே இவ்வகராதி இயற்றப்பட்ட சில ஆண்டுகளில் பிரபலமாயிற்று. தமிழ் நாட்டில் தமிழ் வித்வான்களின் வீடுகளிளெல்லாம் இதன் ஏட்டுப் பிரதி காணப்படுகின்றது. தமிழ் அகராதியின் வரலாற்றில் இந்நூல் ஒரு முக்கிய நிலைபெற்று விளங்குகிறது என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார்[16]. இவற்றிலிருந்தே இதன் சிறப்பை நாம் அறியலாம். சொற்பொருள் கூறும் நூல்களுக்கு இன்று நாம் வழங்கும் அகராதி எனும் சொல் இப்பொருளில் முதன்முதலில் இவ்வகராதியில்தான் இடம் பெற்றுள்ளது.

19ஆம் நூற்றாண்டு அகராதிகள்

1807ஆம் ஆண்டில் ஆங்கிலம் தமிழ் சொற்றொகை (Vocabulary- English & Tamil) என்னும் அகராதி வெளிவந்துள்ளது. ஆனால் இவ்வகராதியைப் பற்றி எந்த விவரமும் கிடைக்கவில்லை. இதன் 6ஆம் பதிப்பு 1845இல் வெளியாயிற்று என்பர்.

பிலின் என்பவர் 1831இல் அகராதித் தமிழ் என்னும் அகராதியை வெளியிட்டார். இது 282 பக்கங்களில் இரு பகுதியாக உள்ளது. இதன் முதற்பகுதி பிரஞ்சுத்தமிழ் அகராதியாகவும், இரண்டாம் பகுதி தமிழ்-பிரஞ்சு அகராதியாகவும் விளங்குகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கக் கிறித்தவச் சங்கத்தின் முயற்சியால் 1833இல்

தமிழ்-ஆங்கில அகராதி, ஆங்கிலம்-தமிழ் அகராதி, தமிழ்-தமிழ் அகராதி ஆகியவற்றை நைட், திசரா பெர்சிவல் ஆகியோருடன் இணைந்து இதை வெளியிட முயன்றார். இவர் காலமானதால் இம்முயற்சி நிறைவேறவில்லை.

இராட்லர் அகராதி

சதுரகராதியை முன்மாதிரியாக வைத்து இராட்லர் என்பவரால் உருவாக்கப்பட்டது தமிழ்-ஆங்கில அகராதியாகும். இதன் நான்கு தொகுதிகள் 1425 பக்கங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

1842ஆம் ஆண்டு வின்சுலோ ஆங்கிலம்-தமிழ் அகராதியும், இதே ஆண்டில் தமிழ்ப் பழமொழிகளைக் கொண்டு பெர்சிவல் பழமொழி அகராதி ஒன்றும் வெளியிட்டுள்ளனர். தமிழ் அகராதியில் முதல் மிகப்பெரிய அகராதியான மானிப்பாய் அகராதியைத் திசரா, பெர்சிவல் ஆகியோரின் உதவியுடன் நைட் (Knight) தயாரித்து வெளியிட்டுள்ளார். இது 58,500 பதிவுகளைக் கொண்டுள்ளது. சதுரகராதியைவிட நான்கு மடங்கு பெரியது.

1873இல் தமிழ்ப் பழமொழிகளை ஆங்கில மொழிபெயர்ப்புடன் திருட்டாந்த சங்கிரகம் என்னும் அகராதியைப் பெர்சிவல் தொகுத்துள்ளார். இதுபோல் 1861இல் இவரே ஐரோப்பிய அலுவலர், இராணுவத்தினருக்கு உதவும் பொருட்டு ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1846இல், 1430 பக்கங்களைக் கொண்ட லத்தீன்-பிரஞ்சு-தமிழ் அகராதியை முசேட் (L.Mousset), துபே (L.Dupus) ஆகிய இருவரும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

1850இல் அசோக பெருமாள் ஐயரின் வழிகாட்டுதலில் முன்னாசாமிப் பிள்ளை ஒருசொல் பல்பொருள் விளக்கம் என்னும் அகராதியைத் தொகுத்துள்ளார்.

1851இல் டி.என். கிருஷ்ணசாமிப் பிள்ளை ஆங்கிலம்-தெலுங்கு-தமிழ் அகராதியை வெளியிட்டுள்ளார். இதே ஆண்டில் ஜெ.ஊச்டர்லனி (Captain J. Ouchterlony, F.G.S) என்பவர் ஆங்கிலம்-தமிழ் கையகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1852இல் இரண்டாம் பதிப்பாக எல்.எஸ். என்பவர் ஆங்கிலம்-தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார். இதேபோல் ஃஓப்ரோ (HAUBORE), ஸ்பெர்ஸ்நெய்டர் (SPERSH NEIDER) பிரதர்டன் (Rev. T. BROTHERTON) ஆகியோரால் ஆங்கிலம்-தமிழ் அகராதி இரு பகுதிகளாக [A - H, I – Z] வெளியிடப்பட்டுள்ளது.

1855இல் முசே, துபே இருவரும் தமிழ்-பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு-தமிழ் அகராதி இரண்டையும் புதுவையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

1859இல் ஜி.யு. போப் தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றைத் தொகுத்துள்ளார்.

1862இல் வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1867இல் குரிபாதிரியார் லத்தீன் அகராதி ஒன்றைத் தொகுத்துள்ளார்.

1877இல் தி.க. நாராயண ஐயர் கிரந்தம்-தமிழ் அகராதியை வெளியிட்டுள்ளார்.

19ஆம் நூற்றாண்டில் பல சொற்றொகை நூல்கள் வெளிவந்துள்ளன. வீராசாமி முதலியார் 1880இல் ஆக்கிய பில்டர் ஆங்கிலம்-தமிழ்ச் சொற்றொகை, முகமது கௌது இரங்கூனில் 1882இல் வெளியிட்ட (அ) இந்துஸ்தானி-தமிழ்ச் சொற்றொகை, (ஆ) பர்மா-தமிழ்ச் சொற்றொகை மற்றும் சவரிநாத நாயக்கரது ஆங்கிலம்-தமிழ்ச் சொற்றொகை (இரங்கன், 1882) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

1883இல் விஜயராகவ முதலியார் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் 3000 சொற்களைக் கொண்ட அகராதிச் சுருக்கத்தை வெளியிட்டுள்ளார்.

1888இல் விஸ்வநாத பிள்ளை தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

1894இல் லாசரஸ் தமிழ்ப் பழமொழிகளை ஆங்கில விளக்கக் குறிப்புகளுடன் சேர்த்துப் பழமொழி அகராதி ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

1897இல் பெப்ரீஷியஸ் அகராதியை அடிப்படையாகக் கொண்டு தரங்கம்பாடி அகராதி வெளிவந்துள்ளது. இது 1910இல் இரண்டாம் பதிப்பாக பெய்செனொ்சு (Rev. H. Beisenherz) என்பவராலும் 1933இல் மூன்றாம் பதிப்பாக பெக்செல் (Rev. D. Bexell) என்பவராலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

1897இல் ஹெர்மின் ஜென்சன் என்பவர் கடவுள் முதலான தலைப்புகளில் 3644 பழமொழிகளைப் பாகுபாடு செய்து பழமொழி அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

20ஆம் நூற்றாண்டு அகராதி

20ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியம், லத்தீன்-பிரெஞ்சு ஆகிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகளைவிடத் தமிழ் அகராதிகளும் தமிழ்-ஆங்கில அகராதிகளும் அதிகமாய் வெளிவந்துள்ளன.

1902இல் யாழ்ப்பாணத்திலிருந்து ஆ.முத்துத்தம்பி பிள்ளை அபிதான கோசத்தை வெளியிட்டுள்ளார். இது கலைக்களஞ்சியத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.

இந்நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நா.கதிர்வேல்பிள்ளை தமிழ்ப் பேரகராதி ஒன்று வெளியிட்டுள்ளார்.

சங்க அகராதி, தமிழ்ச்சங்க அகராதி என்று வழங்கப்படும் தமிழ்ச்சொல் அகராதி ஒன்றை இலங்கை சி.டபிள்யூ.கதிர்வேல்பிள்ளை வெளியிட்டுள்ளார். இது 1800 பக்கங்களில் 63,900 சொற்களைக் கொண்டுள்ளது.

1906இல் சதுரகராதியைப் போன்று நான்கு தொகுதிகளாக த.குப்புசாமி நாயுடு தமிழ்ப் பேரகராதி ஒன்றைப் பதிப்பித்துள்ளார்.

1908இல் தெய்வம், ஊர், புலவர் முதலான பல்வகைச் சிறப்புப் பெயர்களை விளக்கும் சிறப்புப் பேரகராதி ஒன்றை ஈக்காடு இரத்தினவேலு முதலியார் வெளியிட்டுள்ளார்.

1909இல் படங்களுடன் கூடிய தமிழ் அகராதி ஒன்றை பி.இராமநாதன் வெளியிட்டுள்ளார்.

1910இல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தால் ஆ.சிங்காரவேலுப்பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு அபிதான சிந்தாமணி என்ற கலைக்களஞ்சியம் வெளியிடப்பட்டுள்ளது. இது தமிழில் தோன்றிய முதல் கலைக்களஞ்சியம் ஆகும்.

1911இல் காரனேஷன் தமிழ் அகராதியை நாகலிங்க முதலியார் வெளியிட்டுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி இதுவரை வெளிவந்துள்ள அகராதிகளுள் அளவாலும் தரத்தாலும் சிறந்து விளங்குகிறது. இதனினும் மேம்பட்ட நிலையில் தமிழ் அகராதி வெளிவரவில்லை. தமிழ்-ஆங்கிலம்-தமிழ் அகராதியாகிய இது பின்னிணைப்புத் தொகுதி ஒன்றையும் சேர்த்து மொத்தம் ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் முதல் தொகுதியின் முதல் பகுதி 1924இல் வெளிவந்துள்ளது. பின்னிணைப்புத் தொகுதியின் இறுதிப் பகுதி 1933இல் வெளிவந்துள்ளது. மொத்தம் 1,24,405 சொற்பதிவுகளை இவ்வகராதி கொண்டுள்ளது. எஸ்.வையாபுரிப்பிள்ளை இவ்வகராதியின் பதிப்பாசிரியராக இருந்துள்ளார். இதன் சுருக்கம் ஒன்று 1955இல் வெளியிடப்பட்டுள்ளது.

பேரகராதி - விளக்கம்

தமிழ் லெக்ஸிகன் என்பதற்கு இணையான தமிழ்ப்பெயர் 'தமிழ் அகராதி' 'Tamil Lexicon' என இரு மொழிகளிலும் முதற்தொகுதியின் முதற்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது[17].

Lexicon என்பது குறிப்பாகக் கிரேக்க அகராதியைக் குறிப்பிடும் பெயராகும். ஆனால் Lexicon என்பது பேரகராதி என்ற சிந்தனை இங்கு நிலவுவதால் இவ்வகராதி பலராலும் பேரகராதி என்றே குறிக்கப்படுகிறது[18] என்று பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சியின்கீழ் வெளியான இவ்வகராதி 'Tamil Lexicon' என்று ஆங்கிலத்திலும், 'சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி'[19] என்று தமிழிலும் அழைக்கப்படும் என்று சுந்தர சண்முகனார் குறிப்பிடுகிறார்.

தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியரான எஸ். வையாபுரிப்பிள்ளை தமிழ் அகராதி குறித்துத் தம் நூலில் குறிப்பிடுகையில் தமிழ் லெக்ஸிகனைத் "தமிழ்ப் பேரகராதி" [20] என்றே குறிப்பிடுகிறார்.

1988ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதி, இதனைச் "சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி" [21] என்றே குறிப்பிடுகிறது. ஆனால் ஞா. தேவநேயப்பாவாணர் தம் நூலில் 'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி' [22] என்று குறிப்பிடுவது இங்கு நினைக்கத்தக்கதாகும்.

பொது அகராதிகளின் அமைப்பும் பயனும்

பொதுவாக அகராதிகள் சொற்களின் பொருள் வரையறையைத் தரும். இவை மொழிச்சார்புடையன. இவை மொழியில் உள்ள சொற்களையும் அவற்றின் தன்மைகளையும் கொண்ட நோக்கு நூல்களாகும்.

இவை பொதுவாகப் பதிவுச் சொற்களின் இலக்கணப்பொருள், ஒலிப்புமுறை, எழுத்துமுறை, சொல் விரிவு, சொற்பிறப்பு, ஒருபொருட் பலசொல், எதிர்ச்சொல், மேற்கோள், குறிப்பான்கள் என்ற அடிப்படையில் இடம்பெறும்.

தமிழ் அகராதி வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிலவகை அகராதிகளைத் தவிர எஞ்சிய ஒருமொழி அகராதிகள், பதிவுச்சொல், பொருள், எனும் இரு கூறுகளை மட்டுமே உள்ளடக்கியவையாக உள்ளன. இவ்வகை அகராதிகளில் இன்றுவரை இப்பதிவமைப்பே எல்லாவற்றிலும் பின்பற்றப்படுகிறது.

இருமொழி அகராதி மரபில் 1964இல் வெளிவந்த தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியிலும் தமிழ்ச்சொற்களுக்குப் போர்ச்சுகீசு, இலத்தீன் சொற்கள்

பொருட்சொற்களாய்த் தரப்பட்டுள்ளன. சொற்பொருளை மட்டுமே விளக்குவது இவற்றின் நோக்கமானதால் வேறு எந்தப் பதிவுக்கூறுகளும் தரப்படவில்லை. பின்னர் தோன்றிய இராட்லர், வின்சுலோ, பெப்ரீசியஸ் தமிழ் ஆங்கில அகராதிகள் பல்வேறு அகராதியியல் கூறுகளைக் கொண்டுள்ளன.

தமிழ்ப் பேரகராதி அமைப்பு

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பதிவுகளில்

1. தலைச்சொல் (THE WORD)
2. ஒலி பெயர்ப்பு (THE TRANSLITERATION)
3. இலக்கணக் குறிப்பு (THE PART OF SPEECH)
4. சொல்மூலம் (THE ORIGIN AND DERIVATION)
5. இனமொழிச் சொற்கள் (THE COGNATES)
6. சொற்பொருள் (THE MEANING)
7. மேற்கோளும் வருகையிடமும் (QUOTATION AND QUOTED BOOK)
8. சான்றுத் தொடர் (EXAMPLES)

என்னும் அடிப்படையில் அமைந்துள்ளன. இதில் ஒலிபெயர்ப்பு, இலக்கணக்குறிப்பு, சொல்மூலம், இனமொழிச்சொற்கள், மேற்கோளும் அதன் வருகையிடம், சான்றுத்தொடர் முதலியனவற்றைப் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

அகராதிப் பதிவின் பொது அமைப்பு

அகராதிப் பதிவு பொதுவாக இரு பகுதிகளைக் கொண்டது[23]. அவை:

1. சொல் விளக்கப் பகுதி (Lemma Part)
2. பொருள் விளக்கப் பகுதி (Explanatory Part)

சொல் விளக்கப் பகுதி (Lemma Part)

அகராதியின் சொல் விளக்கப் பகுதியில் தலைச்சொல், அதன் ஒலிபெயர்ப்பு, இலக்கணக்குறிப்பு போன்றவை இடம் பெற்றிருக்கும்.

தலைச்சொல்

அகராதிகளில் தலைச்சொல் பகுதி, பொருள்விளக்கப் பகுதி என்னும் இரு பகுதிகள் அமைந்துள்ளன. சொல் இடம்பெற்றிருக்கும் பகுதி தலைச்சொல் பகுதியாகும். தலைச்சொல்லிற்குரிய பொருள் விளக்கம் தரப்பெற்றிருக்கும் பகுதி பொருட்

பகுதியாகும். தலைச்சொல் பகுதி பல அகராதிக் கூறுகளை உள்ளடக்கியது. இப்பகுதியில் தலைச்சொல்லும் இலக்கணக்குறிப்பும் இடம்பெற்றிருக்கும். அகராதிகளில் தலைச்சொல் பகுதி பொருள் பகுதியிலிருந்து பல்வேறு நிலைகளில் வேறுபட்டிருக்கும். எழுத்தளவு,

பத்தியமைப்பு, குறிகள் முதலிய வேறுபாடுகள் அமைந்திருக்கும். மேலும் தலைச்சொல் இணைப்பு ஒப்புருச்சொல், இலக்கணக்குறிப்பு, ஒலிப்பு, எழுத்துப்பெயர்ப்பு போன்றவையும் இடம்பெற்றிருக்கும்.
உதாரணமாக,

அப்பம்[1] – appam, n.< apūpa. [T. appamu, K. Tu. Appa, M. appam]
1. Round Cake of rice flour and sugar fried in ghee, பண்ணிகார வகை. [திவ். பெரியாழ். 2, 4, 5] 2. Thin cake, Wafer,bread; அடை [பிங்.]

அப்பம்[2] – appam, n. cf. ambasthā. Indian Pareira. Sea வட்டத்திருப்பி (மலை.)

தமிழ் இருமொழி அகராதிகளின் தலைச்சொல் பகுதியில் தலைச்சொல், தலைச்சொல் இணைப்பு, எழுத்துப்பெயர்ப்பு, துணைப்பதிவு, ஒப்புருச்சொல், இலக்கணப்பொருள், தொடர்ப்பதிவு என்பன போன்ற உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன[24].

தமிழ்ப் பேரகராதியிலும் இத்தகைய முறையே பின்பற்றப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் இருமொழி அகராதிகளில் தலைச்சொல் தெரிவு காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளது. வினைச்சொல்லின் தலைச்சொற்களைத் தெரிவு செய்யுமிடத்து ஆரம்ப கால அகராதியில் பல்வேறு சொல் வடிவங்களைப் பதிவுகளாய்த் தந்துள்ளன.

தமிழ் இருமொழி அகராதியில் முதல் அகராதியான புரொயென்சாவின் தமிழ் போர்த்துக்கீசிய அகராதியில் 'செய்கிறது' வடிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனுடன் -தல், -த்தல் இணைந்த சொற்களும் சொல் விரிவுகளும் தரப்பட்டுள்ளன. பெப்ரீஷியஸ் அகராதியில் பெயர்ச்சொல் பெயரடியாகவும் வினைச்சொல் படர்க்கை ஒருமை நிகழ்கால வினைமுற்று வடிவமாகவும் தரப்பட்டுள்ளன. செய்கிறது என்னும் வாய்ப்பாட்டுச் சொல்லுடன் 'செய்யறது' என்னும் பேச்சு வழக்கு வடிவமும் சுட்டப்பட்டுள்ளது[25]. இராட்லர் அகராதியிலும் 'செய்கிறது' என்னும் வடிவம் தலைச்சொல்லாக உள்ளது. வின்சுலோ அகராதியில் 'செய்கிறது' என்னும் அடிப்படை

வடிவம் தெரிவு செய்யப்படவில்லை. மாறாகச் 'செய்' என்னும் வினையடி தலைச்சொல்லாக உள்ளது[26]. அதற்கான காரணமும் முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் அகராதிகளில் சொற்பிறப்பு ஆராயப்படவில்லை. பதங்கள் சமஸ்கிருதமா, தமிழா, வேர்ச்சொற்களா, மரபு மூலத்திலிருந்து தோன்றியனவா என்று ஆராயப்படவில்லை. சதுரகராதியைப் போலவே வினைகள் தொழிற்பெயர் வடிவத்திலேயே விளக்கப்பட்டுள்ளன. இம்முறை இலகுவானதெனினும் தவறான கருத்தைக் கூறுவதற்கும் வழிவகுக்கும். ஏனெனில், தொழிற்பெயர் சில சமயங்களில் வினையின் ஏனைய வடிவங்களுக்கு முரணான கருத்தைக் கொண்டதாக விளங்கும். ஏனைய பதங்களைப்போல் முதலில் வினைச்சொல்லின் வேரினைக்கண்டு அதனை முதலில் வைத்தால் ஏனைய வடிவங்கள் அதனைத் தொடர்ந்து விளக்கம் பெறும். வினைகளைப் பொறுத்த அளவில் வேராகக் கொள்ள வேண்டியது ஓரமை ஏவல் வினைமுற்றாகும். இந்த முறை முன்னர் அகராதி தொகுத்த ஒருவரினாலும் பின்பற்றப்படவில்லை [27].

வின்சுலோ அகராதியில் தலைச்சொல் பதிவானது கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

> அமை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, V.a.To Settle, compose, cause to yield, reduce to order, adjust, subject,of bring to a right state, adapt, prepare….
>
> அரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, V.a. To sift, separate larger and smsller bodies with the hand, sieve, riddle & c. கொழிக்க.
> 2.To separato rubbish from dried leaves with the hand…

வின்சுலோ அகராதியை அடுத்து வந்த அகராதிகள் மேற்காட்டிய 'செய்' வடிவத்தையே தலைச்சொல்லாகக் கொண்டன. வினையடியுடன் -தல், -த்தல், வடிவங்களை இணைத்து வழங்குமிடத்துச் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்ப்பேரகராதியில் மேற்சுட்டிய வடிவங்கள் சிறு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ப் பேரகராதி முன்னுரையில்,

> சிறு கோட்டுடன் -தல், -த்தல் விகுதிகள் சேர்க்கப்பட்டிருந்தாலும் வினைச்சொற்கள் தலைச்சொற்களாக வரும்பொழுது வேர்ச்சொல் வடிவிலேயே தரப்பட்டுள்ளன. இவை அகரநிரலில் இடம்பெறும் நிலையில் தொழிற்பெயர் வடிவங்களோடு இணைத்துக் குழப்பிக்கொள்ளக்கூடாது [28]

என்ற குறிப்பு உள்ளது.

இளி[1]-தல் ili -,4V.tr.1.To pluck; இணங்கு-தல். இளிந்த வீயும்(சீவக.1241).
2.To strip off; உரித்தல்.(சூடா.) -intr. To become low-spirited Because of being ridiculed by others; இகழப்பட்டு எளியனாதல் (தொல்.பொருள் 253. உரை)

இளி[2]-த்தல் ili, 11 V.cf. –[M.ili] tr.1.To disgrace, condemn;
2.To laugh, scorn,ridicule; அவமதித்தல்.(w).-intr. To grin; to show teeth, as incringing or in craving servilely; பல்லைக்காட்டுதல்.

தலைச்சொல் இணைப்பு

அகராதிகளில் ஒரு சொல் மட்டும் தலைச்சொல்லாகத் தரப்பெற்று அதன் பொருள் விளக்கப்படும். சில அகராதிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் குறியீடுகள் அல்லது இணைப்புச் சொற்கள் மூலம் தலைச்சொற்களாகத் தரப்பெறுவதுண்டு. இதைத் 'தலைச்சொல் இணைப்பு' என்றழைப்பர்.

தலைச்சொல்லின் மாற்றுவடிவங்கள் அல்லது ஒருபொருட் பன்மொழிகள் அடுத்தடுத்து இடம்பெறும் நிலையில் குறியீடுகள் அல்லது இணைப்புச் சொற்கள் மூலம் இணைத்துத் தரப்பெறுவது தலைச்சொல் இணைப்பு உத்தியாகும்.[29]

தமிழ்ப் பேரகராதியிலும் தலைச்சொல் இணைப்பு இடம் பெற்றுள்ளது. இவ்வகராதியில் மாற்று வடிவங்கள் பகர அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

அந்தரத்தில் நில்[ற்]-த[ற]ல் antarattil – nil –V.intr <id+ To be helpless..

ஆள்[ட்]புருஷம் al-purusam,n <id+ man's heigh, as a measure for the depth of water, ஒரு மனிதனுயரவளவு....

ஒப்புருச்சொல் (HOMONYM)

ஒத்த வடிவத்தையும் வேறுபட்ட பொருள்களையும் கொண்டன ஒப்புருச்சொற்களாகும். பொருள் வேறுபாடு, சொல்மூலம் போன்றவற்றை அறிந்து கொள்ள ஒப்புருச்சொற்கள் பயன்படுகின்றன. ஒத்த வடிவத்தையும் ஒத்த உச்சரிப்பினையும் கொண்ட ஒப்புருச்சொற்கள் ஆரம்பகால அகராதிகளில் தனித்தனித் தலைச்சொற்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒப்புருச்சொற்களுக்கு எண் தரும் நெறி பிற்காலத்தில் அறிமுகப்படுத்தபட்டுள்ளது. தமிழ் இருமொழி அகராதிகளில் ஒப்புருச்சொல் பதிவு முதலில் புரொயென்சா அகராதியில் இடம்பெற்றது. அவ்வகராதியில் ஒருசில பதிவுகளில் மட்டும் இடம்பெற்றுள்ளன[30].

எகுதல் Escarpeamento

எகுதல் Levantamento do pas-saro

எகுகை Oescrpear

எகுகை OLevantar do passaro

மேற்காணும் பதிவுகளில் எகுதல், எகுகை என்னும் சொற்கள் பொருள் வேறுபாட்டிற்கு ஏற்ப இரு பதிவுகளாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளன. பிற்காலத்து அகராதிகள் பெயர்ப்பொருள், வினைப்பொருள் சொற்பிறப்பு போன்றவற்றின் துணையோடு ஒப்புருச்சொற்களைத் தனிப்பதிவுகளாக அமைத்துள்ளன. ஒப்புருச்சொல் பதிவுகளுக்கு எண்கள் தரும் நெறியை முதன்முதலில் தமிழ்ப் பேரகராதி அறிமுகப்படுத்தியது. உதாரணமாக,

அங்கம் [1] ankam. n < anga 1. Limp, member, organ as of the body; உறுப்பு

அங்கம் [2] ankam n. <anka….
அங்கம் [3] ankam n. cf.paryanka…

ஒப்புருச் சொற்களைச் சொல்மூல உறவு அடிப்படையிலும் பெயர் -வினை, வினை-பெயர், பெயர்-பெயரடை, வினையடை என இலக்கணக்கூறு அடிப்படையிலும் மேலும் வழக்கு மிகுதி அடிப்படையிலும் சொல் உறவு அடிப்படையிலும் நிரல்படுத்தலாம்.. தமிழ்ச்சொற்களை முன்னும் பிற மொழிச்சொற்களைப் பின்னுமாய்த் தரலாம் [31] என பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

ஒலிபெயர்ப்பு

ஒருமொழியின் சொல்லைப் பிறமொழி எழுத்துக்களில் எழுதுவது எழுத்துப்பெயர்ப்பு அல்லது ஒலிபெயர்ப்பு எனலாம். இது பிறமொழியாளரின் பயன்பாட்டிற்காகச் சுட்டப்படுவதாகும். ஒருமொழியகராதிகள் அம்மொழி சார்ந்தவர்களுக்காக உருவாக்கப்படுவதால் இத்தகைய ஒலிபெயர்ப்பு இடம்பெறுவதில்லை.

Transliteration, Transcription என்னும் இரு கலைச்சொற்கள் மொழியியலில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரண்டில் Transcription முக்கியமானதும் பரந்துபட்டதும் ஆகும். Transliteration என்பது தமிழில் ஒலிபெயர்ப்பு, எழுத்துப்பெயர்ப்பு என்னும் இரு சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.[32]

ஏ.சிதம்பரநாத செட்டியாரின் ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் Transliteration என்பதற்கு எழுத்துப்பெயர்ப்பு என்பதே இணையான சொல்லாய்த் தரப்பட்டுள்ளது என்று பெ. மாதையனும் குறிப்பிடுகிறார்.[33]

Transliteration என்பதற்கு எழுத்துப்பெயர்ப்பு என்ற சொல்லையே வ.ஜெயதேவனும் பயன்படுத்தியுள்ளார்[34].

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் பயன்பாட்டாளர் குறிப்புகளைத் தரும் பகுதியில் Transliteration Table ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தமிழ் எழுத்துக்களுக்கேற்ற ஆங்கில எழுத்துக்களைக் குறிக்கும் அட்டவணை தரப்பட்டுள்ளது. தமிழ் அகராதி மரபில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில்தான் முதன்முதலாய் இம்முறை கையாளப்பட்டுள்ளது[35]. குறியீட்டுப் புள்ளிகள் (Diacritical marks) அமைக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு தமிழ்ச் சொற்கள் எழுத்துப்பெயர்ப்புடன் தரப்பட்டுள்ளன. அதை இவ்வட்டவணையில் காணலாம்.

அ	a	ஐ	ai	ஞ்	ñ	ர்	r	ஜ்	j
ஆ	ā	ஒ	o	ட்	t	ல்	l		š
இ	i	ஓ	ō	ண்	n	வ்	v	ஷ்	s
ஈ	ī	ஔ	au	த்	t	ழ்	l̲	ஸ்	s
உ	u	ஃ	k̲	ந்	n	ள்	!	ஹ்	h
ஊ	ū	க்	k	ப்	p	ற்	r̲	&	ks
எ	e	ங்	ṅ	ம்	m	ன்	n̲		
ஏ	ē	ச்		ய்	y				

தமிழ் இருமொழி அகராதியில் எல்லாத் தலைச்சொற்களின் பதிவுகளுக்கும் ஒலிபெயர்ப்பு தரப்பட்டுள்ள அகராதி இதுவொன்றேயாகும். இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்திப் பதிவுச்சொற்களை அடுத்து அழுங்கு-தல் a̲lunku, அவுஷதம் avusatam, அலறல் ala̲ral, அலாக்கு alākku, அவேளை avēlai என எழுத்துப்பெயர்ப்பு தரப்பட்டுள்ளது. இருமொழி அகராதிகளில் தொடக்க காலத்தில் ஒப்புருச் சொற்களை வேறுபடுத்திக் காட்டவே ஒலிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது[36].

சலம் (jalam) water, urine, சலதோஷம், di-temperavising from humers in the body..

சலம் (chalam) obstinacy, சலம்பிடிக்கிறது, சலமோட்டுகிறது to be firmly

resolved to pursue a work.. (மலபார் ஆங்கில அகராதி)

இதழி itali, n. <id. Cassia fistula; கொன்றை. (திவா.)

உவா[1] uva, n. <உவ- [M.uvd.] 1. Full moon; பௌர்ணிமை.

(தமிழ்ப் பேரகராதி)

இருமொழி அகராதியில் தரப்பெறும் இவ்வெழுத்துப்பெயர்ப்பு மூலமொழியின் எழுத்துமுறையை அறியாத ஒருவர் இவ்வெழுத்துப்பெயர்ப்பின்மூலம் குறிப்பிட்ட சொல்லைக் கண்டு பொருளறிய மிகவும் பயன்படுகின்றது. சான்றாக வடமொழி நெடுங்கணக்கை அறியாத ஒருவர் ஆங்கிலத்தில் உரோமன் எழுத்தில் தரப்பட்ட எழுத்துப்பெயர்ப்பை அடிப்படையாய்க் கொண்டு குறிப்பிட்ட சொல்லையும் அதன் பொருளையும் அறிய இயலும் என்று பெ. மாதையன் குறிப்பிடுகிறார். [37]

ஆனால் தமிழ்ப் பேரகராதியில் இவ்வெழுத்துப்பெயர்ப்புமுறை மாற்றொலியன்களை வேறுபடுத்திக் காட்டப் பயன்படாததாய் உள்ளது. கதை (katai), கதை (gatai) என்னும் இரண்டும் (katai) ஒன்றுபோலவே எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறே பலம் (palam) பலம் (balam) இரண்டும் (palam) ஒன்றுபோலவே தரப்பட்டுள்ளன. எனவே எழுத்துப்பெயர்ப்பில் இவ்வேறுபாட்டைக் காட்ட இயலாத நிலையில் ஒலிபெயர்ப்பே (Transcription) இதற்குத் துணைபுரிவதாய் அமைகிறது.

இலக்கணக் குறிப்பு

தலைச்சொல்லை அடுத்துச் சொல்லின் இலக்கணத்தை அறிய இலக்கணப் பொருள் தரப்பெறுகின்றது. பொதுவாக இலக்கணப் பொருள் இலக்கணக் குறிப்பான்கள் மூலம் சுட்டப்படுகின்றது.

அகராதிகளில் இலக்கணப்பொருள் தலைச்சொல் பதிவிலும் அல்லது பொருள் பகுதியிலும் தரப்படுவதுண்டு. இலக்கணச் செயல்பாட்டை அறிந்துகொள்ள உரியதாய் உள்ளதால் தலைச்சொல்லிற்கு உரியது என்றும் இலக்கணப்பொருள் தலைச்சொல்லின் பொருளை அறிந்துகொள்ளப் பயன்படுவதால் பொருள் பகுதிக்கு உரியது என்றும் கருதப்படுகின்றது. இவ்விரு கருத்துக்களையும் நோக்குகின்ற வேளையில் இலக்கணப்பொருள் தலைச்சொல் மற்றும் பொருள் பகுதிக்கு மட்டும் உரிய ஒன்றாகக் கருதப்பட வேண்டியதாக அமைகின்றது[38].

தமிழ் இருமொழி அகராதிகள் பிறமொழியாளர்களைக் கருத்தில் கொண்டு தொகுக்கப்படுவதால் இலக்கணக்குறிப்புகள் விளக்கமாகவும் விரிவாகவும் கொடுக்கப்படுகின்றன. இவ்வகராதிகளில் இலக்கணக் குறிப்பு பின்வரும் வகைகளில் அமைந்துள்ளது[39].

* படர்க்கை நிகழ்கால ஒருமை வாய்ப்பாட்டுச் சொல்லைத் தலைச்சொல்லாகத் தருதல்(செய்கிறது)
* படர்க்கை நிகழ்கால ஒருமை வாய்ப்பாட்டுச் சொல்லுடன் முக்கால விரிவுகளையும் திரிபுகளையும் பதிவில் கொடுத்தல்
* செய் என்னும் வினையடியைத் தலைச்சொல் பதிவாகத் தருதல்.
* செய் என்னும் வினையடியுடன் சொல் திரிபுகளையும் பதிவில் கொடுத்தல்.
* வினையடிகளை அடுத்து வினைவகைப்பாட்டு எண்ணைத் தருதல்.
* தன்வினை, பிறவினைப் பதிவுகள் அமைத்தல்.

மேலும் ஜி.யு. போப் அகராதி, வின்சுலோ அகராதி, பெப்ரீஷியஸ் அகராதி, தமிழ்ப் பேரகராதி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி முதலான அகராதிகளில் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினைக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. இராட்லர், வின்சுலோ அகராதிகளில் v.a (verbal act), v.n (verbal noun) எனும் குறிப்பான்களும் இவ்வகராதிகளுக்குப் பிறகு வெளிவந்த அகராதிகளில் v.i, v.t. (verb intransitive, verb transitive) என்னும் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. v.a என்பது v.t ஐயும் v.n என்பது v.i ஐயும் குறிக்கின்றன.

தமிழ்ப் பேரகராதியில் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை பொருள்கள் ஒரே பதிவில் தனித்துக் காட்டப்பட்டுள்ளன.

அடு[1] –த்தல் atu-, [T.antu, K. attu, M. atukka, Tu. Antu] 11 .V.intu.1. To be next, near; சமீபமாதல். அடுத்த நாட்டரசியல்புடைய(கம்பரா. விபீடண. 82) 2.To be fit.be coming, deserving ஏற்றதாதல். இ∴து உனக்கடுத்ததன்று. 3. To happen, occur; சம்பவித்தல் ஆவிநைந்திறவடுத்ததென்(கம்பரா. நகர்நீ.14) 4. To dance; கூத்தாடுதல்(பிங்.) **v.t.** 1 To join, சார்தல். முனிவர்யாரு மடுத்திடுமவைக்க ணெய்தி(கந்தபு. ததீசியுட்இ39) 5. To join together; சேர்த்தல் வெண்டுகிலடுத்து (சீவக. 617) 6. To approach, approximate to, come in contact with; கிட்டுதல்,

மயிலன்னாலிடுத்து வயமாருததியை (பாரத.மணிமா.3)7. To seek protection from; ஆதாரமாகப் பற்றுதல். அடுத்தவனைக் கெடுக்கலாமா? 8. To give; கொடுத்தல் வளைக்கரத்தார்க் கடுத்தோய் (திருக்கோ.357) 9. To press down அமுக்குதல் எழுத்தான் புயந்தன்னை யடுத்தார் மருதரை (தே.வா.447இ8) 10. To assign; ஒப்புவித்தல். (S.I.I.ii,250).

(தமிழ்ப் பேரகராதி)

மேலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதி ஏழு வகைப்பாட்டினைப் பன்னிரண்டு வகைப்பாடாய் விரிவு செய்துள்ளது. கிராலின் துணைப்பிரிவுகள் தனித்தனிப் பிரிவுகளாய் அமைக்கப்பட்டன. இவற்றுள் அடங்காது வரும் வா, தா, சா, நோ, போன்ற வினைகள் பதின்மூன்றாம் வகைப்பாடாய் அமைக்கப்பட்டுள்ளது.

அகை[1]-தல் akai -, 4 intr.1. To flourish

அகை[2] -த்தல் akai-, 11.V.intr. cause to அகை

(தமிழ்ப் பேரகராதி)

மேற்குறித்த பதிவுகளில் 4, 11 என்பன வினை வகைப்பாட்டு எண்களாகும்.

தன்வினை - பிறவினைப் பதிவுகள்

தொடக்ககால இருமொழி அகராதிகளில் தன்வினை, பிறவினைகளை வேறுபடுத்திக்காட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ப் பேரகராதியிலும் தன்வினை, பிறவினைகள் வினைப்பதிவின் கூறுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

அகை-த்தல் akai-11 V.intr. cause of அகை

ஆட்டு-தல் attu-,5.v.tr cause of ஆடு (தமிழ்ப் பேரகராதி).

பொருள் விளக்கப் பகுதி

தலைச்சொல்லிற்குரிய பொருளையும் அதனோடு தொடர்புடைய செய்திகளையும் விளக்கங்களையும் கொண்டிருப்பது பொருள் விளக்கப் பகுதியாகும். தலைச்சொல்லின் பொருளை எளிமையாகவும் விளக்கமாகவும் தருவது அகராதித் தொகுப்பாளரின் கடமையாகும். சொற்பொருள் விளக்கத்திற்கு அகராதிகளில் பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன.

பொருள் உத்திகள் 1. மொழித் தொடர்புடைய உத்திகள் (Linguistic Techniques) என்றும் 2. மொழித் தொடர்பிலா உத்திகள் (Extra Linguistic Techniques) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன [40] என்று எச்.சித்திரபுத்திரன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் இருமொழி அகராதிகளில் பொருள் விளக்கத்திற்குப் பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. தலைச்சொல்லின் பொருள் விளக்கும் இப்பகுதியில் பொருள் வரையறை (Definition), விளக்கப்படம்(picture), மேற்கோள்(Context), வழக்குப்புலக்குறிப்பு(Label) முதலியன இடம்பெறும்.[41]

இவையல்லாமல் சொல்மூலம், இனமொழிச்சொல், மேற்கோளும் அதன் வருகையிடமும் சான்றுத்தொடர் போன்றவையும் தமிழ்ப் பேரகராதியில் இடம்பெற்றுள்ளன.

பொருள் வரையறை

ஒரு சொல்லின் பொருளைச் சரியாக வரையறுத்துச் சொல்வது பொருள் வரையறையாகும். அகராதியில் பொருள் வரையறையானது

* அறுதியுடையதாக (specific) இருக்கவேண்டும் ; குன்றக்கூறல்(under specify) மிகையாய்க் கூறல் (over specify) ஆகிய குற்றங்கள் இல்லாதவாறு அறுதியுடையதாக இருக்க வேண்டும்.
* தலைச்சொல்லினும் எளிய சொல்லால் அல்லது சொற்களால் பொருள், பொருள் வரையறை அமைய வேண்டும்.
* பொருள் வரையறையில் இடம்பெறும் சொல் அல்லது சொற்கள் தலைச்சொற்களாக அவ்வகராதியில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
* பொருள் மயக்கம் தோன்றாதவாறு வரையறை சொல்லப்பட வேண்டும்.
* தலைச்சொல்லில் இடம்பெற்றுள்ள சொல் அல்லது சொற்கள் மீண்டும் பொருள் விளக்கத்தில் இடம்பெறக் கூடாது.[42]

இவ்வடிப்படையில் தமிழ் அகராதிகளைக் கூர்ந்து ஆராய்ந்தால் மிகப்பல அகராதிகள் குறையுடையனவாகவே உள்ளன என்பது தெளிவாகும். தமிழ்ப் பேரகராதியிலும் இவ்வகைக் குறைபாடுகள் நிறைந்திருப்பதைக் காணலாம்.[43]

மெட்டு 1.கௌரவம் Honour

2.இரிதீ Fashion,Style

3.பாட்டன் இராகப் போக்கு Tune or a song , rhythm

இம்மூன்று பொருள்களுள் இரண்டாவது பொருள் தெளிவாக விளக்குவதாக இல்லை. அருகில் உள்ள ஆங்கிலச் சொல்லால் பொருள் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. 'இரீதி' என்ற தலைச் சொல்லிற்கான பொருளாகப் 'பித்தளை' என்னும் பொருள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

'மெ' என்ற தலைச்சொல்லிற்குப் பொருளாக me. The compound of ம் and எ என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் பொருள் தரப்படவில்லை. பொருள் இல்லையென்றால் அது தலைச்சொல்லாகப் பதிவுசெய்ய அவசியமில்லை. அதேபோல் 'மே' என்ற சொல்லுக்கு,

1. ம் and ஏ
2. மேவு
3. மேம்பாடு

என்னும் மூன்று விளக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனவே தவிர அது ஒரு மாதத்தின் பெயர் என்ற விளக்கம் காணப்படவில்லை.

பொருள் விளக்கப் பகுதியில் சொல்லிற்கான பொருளைத் தமிழிலேயே விளக்காமல் பிறமொழிச் சொற்களும் கையாளப்பட்டுள்ளன.

உதாரணமாக,

மெக்கா – முகம்மதியர்க்கு முக்கிய ஷேத்திரமானதும் அரேபியாவில் உள்ளதுமான ஒரு நகரம்

(தமிழ்ப் பேரகராதி)

இதில் 'ஷேத்திரமானதும்' என்பதற்குப் பதிலாகப் 'புனிதமானதும்' என்னும் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம்.

சொல்மூலம்

தலைச்சொல்லாய்ப் பதிவுசெய்யப்பட்ட ஒரு சொல் எச்சொல்லின் அடியாய்ப் பிறந்தது என்பதைக் குறிப்புப் பொருள் பகுதியில் தருதல் உண்டு. எல்லா அகராதிகளிலும் இக்குறிப்பு இடம்பெறுவதில்லை. பெரும்பாலான ஆங்கில அகராதிகள் மட்டுமே இந்நெறியைப் பின்பற்றுகின்றன.

பல்பொருள் சொற்களையும் ஒப்புருச் சொற்களையும் வேறுபடுத்தி அறிவதற்கான அடிப்படைகளில் ஒன்று சொல்மூலம் அல்லது சொற்பிறப்பை அறிவதாகும். எனவே அகராதிகளில் இவ்விரு சொற்களையும் வேறுபடுத்திப் பதிவாய்த்தரப் பயன்படும் கூறு சொல்மூலமே ஆகும். ஒப்புருச் சொற்களைத் தனிப்பதிவாய்த் தரும் அனைத்து அகராதிகளும் சொல்மூலக் குறிப்பைத் தருவதில்லை. ஆனால் தமிழ்ப் பேரகராதி போன்ற மிகப்பெரிய அகராதிகளில் சொல்மூலக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

விண்ணப்பம் --- Vinnappam

விண்ணப்பித்தல் --- Vinnappi - , 11 v. intr.< விண்ணப்பம்

வையம் --- Vaiyam, n.prob. வை

வைரகரம் --- Vairakaram, n.< வைரகரன்.

தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாற்றில் ஆரம்பகால ஒருமொழி இருமொழி அகராதிகளில் சொல்மூலம் தரும் நெறி பின்பற்றப்படவில்லை.[44] இருப்பினும் வடமொழிச் சொற்கள் இவை என்பதைக் காட்டும் நிலையில் பதிவுச்சொல்லின் முன் நட்சத்திர உடுக்குறி இடும் வழக்கம் இருந்துள்ளது. பிறமொழிச் சொற்களைக் குறிக்க

* அப்பு
* அமலம்
* அமாவாசி

என்ற பதிவுகள் மலபார் ஆங்கில அகராதியிலும்

* அகலிங்கம்
* அகளம்

என்ற பதிவுகள் இராட்லர் அகராதியிலும்

* சிராவணம்
* சிரவம்
* சிராங்கம்

என்ற பதிவுகள் வின்சுலோ அகராதியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்ப் பேரகராதியில்,

* அங்கணி
* அங்கதன்
* ஆனந்தநித்திரை
* ஊற்றாணி

என்பன போன்ற வடமொழிச் சொற்களைக் குறிக்க நட்சத்திர உடுக்குறி முதல் தொகுதியில் பக்கம் 506 வரை மட்டுமே இடப்பட்டுள்ளன.

தமிழ்ப் பேரகராதியிலும் பதிவை அடுத்துச் சொல்மூலக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. ஒப்புருச் சொற்கள்

அகை[1]-தல் -- akai

அகை[2]-த்தல் -- akai

அகை[3] --- akai,n.< அகை (தமிழ்ப் பேரகராதி)

என்று பதிவு செய்யப்பட்டுள்ளன.

சொல்மூலம் பிறமொழிச் சொல்லாயின் அம்மொழியின் முதலெழுத்து அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை:

இலாசடி ilācaṯi, n.< myrb [T. aladzadi.]

உள்ளி uḷḷi,n [T. uḷḷi, K.M.Tu.uḷḷi]

எறி eṟi,n < எறி. [M.eṟi]

வரகு varaku, n. [T.varige, K.baragu, M.varagu]

சொற்பிறப்பு வரையறை உடன்பிறப்பு மொழிகளை ஒப்புநோக்கிச் செயல்படுவதால் சொற்பிறப்பு அகராதியிலேயே ஒப்பியல் பண்பும் அடங்கி நிற்கும். ஆனால் சில அகராதிகள் சொற்பிறப்பு குறித்து ஏதும் சுட்டாமல் ஒப்பியல் பண்பிற்கு மட்டுமே முதன்மை தரும். இத்தகு அகராதிகள் ஒப்பியல் அகராதிகள் எனப்படும். தமிழில் இவ்விரு அகராதிகளும் உள்ளன.

> சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியே தமிழ் அகராதிகளுள் சொற்பிறப்பியல் ஒப்பியல் பண்புகளைக் கொண்ட ஒரே அகராதியாகும் [45]

என்று வ.ஜெயதேவன் குறிப்பிடுகின்றார். ஆனால் சொற்பிறப்பியல் ஒப்பியல் நெறிமுறைகளும் முடிவுகளும் பொருத்தமற்றவை என ஞானப்பிரகாசரும் மற்றவரும் கருதுவதாக வ.ஜெயதேவன் குறிப்பிடுகிறார்.

இனமொழிச்சொற்கள்

ஒருமொழிச் சொல்லுக்கு இணையானதொரு பிறமொழிச் சொல்லை இனமொழிச்சொல் எனலாம். இருமொழிகளின் மொழியமைப்பும் வேறுபடுவதால் ஒரு மொழிச் சொல்லுக்கு இணையான மற்றொரு மொழிச் சொல்லை வழங்குதல் இயலாது.

கருத்துப்பொருள், குறிப்புப்பொருள், பயன்பாட்டெல்லை என மூன்று பொருள் கூறுகளிலும் ஒப்புமையுடைய இருமொழிச் சொற்களே இணைச்சொற்களாகின்றன[46]

என்று சுகுஸ்தா குறிப்பிடுவதாகச் சரளா ரங்கநாதன் குறிப்பிடுகின்றார்.

சொல்மூலமும் சொற்பிறப்பும் காட்டும் அகராதிகளில் இனமொழிச் சொற்களும் தரப்படும்[47]. எனவே இருமொழி அகராதிகளில் இனமொழிச் சொற்கள் இடம்பெறும்.

கடை[1] katai, n.[T.M.kada ,K. Tu.kade]

கலம்[1] kalem n. [K.kala, M.kalam, Tu.kara]

மீவிளக்க அகராதிகளிலும் வரலாற்று அகராதிகளிலும் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதிகளிலும் இவ்வகை இனமொழிச் சொற்கள் இடம்பெறும்.

சொற்பொருள்

ஒரு சொல்லுக்கான சரியான பொருளைத் தருவதே அகராதியின் நோக்கமாகும். காரணம் சொற்பொருளே அகராதியின் உயிர்நாடியாகும். இச்சொற்பொருளோடே பிற கூறுகளும் இடம்பெறுகின்றன. எனவே ஒரு சொல்லுக்கான பொருளை விளக்கும் அகராதிக் கலைஞர் சமூகத்திற்கு ஒவ்வாத, ஏற்கமுடியாத, மொழியில் இடம்பெறாத சொற்களைத் தரக்கூடாது. அதுபோலத் தன் விருப்பத்திற்கேற்றவாறு சொல்லின் பொருளைத் தர இயலாது. மொழிப் பயன்பாட்டில் உள்ள அனைவரும் அறிந்த, ஏற்றுக்கொள்ளும் சொற்பொருளாய் வழங்கவேண்டும். எனவே சமூக ஏற்புடைய பொருளை உணர்ந்து அதைத் தக்க இடத்தில் வெளிப்படுத்துவது அகராதியாளரின் கடமையாகும்.

சொற்பொருளைக் கூறும்போது சொல்லுக்கான பொருளை அறியாத சூழலில் யாவரும் அறிந்த பொருளை விளக்கவேண்டும். ஒருமொழி அகராதிகளில் ஒரு

சொல்லுக்கான பொருள் ஒன்று மட்டுமே தரப்பட்டது. ஆனால் தமிழ்ப் பேரகராதியில் ஒரு சொல்லுக்கான பொருள்கள் பல தரப்பட்டுள்ளன.

ஈடு ----- 1. இடுகை
2. பிறர்பால் ஒப்புவிக்கை
3. பிரதி
4. வதூவரர்களுடைய வயது வளர்ச்சிகளின் பொருத்தம்
5. தகுதி
6. ஒப்பு
7. அடைமானம்
8. பெருமை
9. வலிமை
10. நிலைமை
11. மனவருத்தம்
12. உள்ளீடான விஷயம்
13. உபாயம்
14. கவசம்
15. குழைவு
16. ஈடு முப்பதாயிரம்

'ஈடு' என்னும் ஒரு சொல்லுக்குப் பதினாறு பொருள்களைப் பதிவாகத் தமிழ்ப் பேரகராதி கொண்டுள்ளது.

மேற்கண்ட முறைகளில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி தந்தாலும் பல சொற்களுக்குப் பொருள்களை நேரடியாகத் தராமல் see என்று குறிப்பிட்டு வேறோரு இடத்தில் பொருளைப் பார்க்கவேண்டிய நிலையில் அமைந்துள்ளது.

பிரவோட்டம் --- See பிரவேணி

பிள்ளைப்பாட்டு --- See பிள்ளைத்தமிழ்

புத்திக்கட்டை --- See புத்தித்தாழ்ச்சி

போதிகை --- See போதிகைக்கட்டை

போதனம் ---- See போதனை

இத்தகைய இடங்களில் பொருளை அறிந்துகொள்ள பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கோளும் வருகையிடமும்

தலைச்சொல்லாய்ப் பதிவு செய்யப்பட்டு ஒரு சொல்லின் பொருள் விளக்கப்பட்ட பின் அச்சொல் எவ்விலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது என்ற சான்றும் அகராதிக் குழுவோ அல்லது அகராதிக் கலைஞரோ அச்சொல்லுக்கான ஒரு சான்றுத்தொடரை உருவாக்கியும் தந்துள்ளனர். ஒரு சொல்லின் பயன்பாட்டுச் சூழலைக்கொண்டே மேற்கோள் பகுதி அமையும்.

> ஒரு சொல் இன்ன பொருட்சூழலில் இன்ன காலத்தே இவ்விலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது என்பதையும் இத்தகைய பொருட்சூழலில் ஆளப்படவேண்டும் என்பதையும் அறிவிப்பனவாய் இம்மேற்கோள் தொடர்கள் அமைகின்றன[48].

தமிழ்ப் பேரகராதியில் பின்வருமாறு இலக்கிய மேற்கோளும் அதன் வருகையிடமும் அமைந்துள்ளன.

*இயந்திரம் iyantiram, n,< yantra. 1.machine. see யந்திரம். **இயந்திரப் படிவ மொப்பான் [கம்பரா. உருக்கா.78]** 2. car.chariot; தேர்[திவா.]

*உரவுநீர் uravu-nir, n.< உரவு^{2} +.see, being water in motion; கடல். **உரவுநீர்ப்பரப்பினூர் [சிலப் 4,79]** . 2. River, torrent; யாறு. **ஊரங்கணநீ ருரவுநீர் சேர்ந்தக்கால் [நாலடி.175]**

பதிவுச்சொல்லின் சொற்பொருளையும் இலக்கணப் பொருளையும் மேலும் விளங்கிக் கொள்வதற்கு ஏற்றவகையில் தரப்படும் மேற்கோள் தொடர்களைத் தெரிவு செய்து தருவதில் அகராதிக்கலைஞர் கவனம் காட்டவேண்டும். எவ்வகைச் சொற்களுக்கு மேற்கோள் தருவது, எவற்றுக்குத் தரவேண்டாம், மேற்கோள் தொடர் எவ்வளவு நீளம் இருக்க வேண்டும், மேற்கோள் தொடரை அகராதிக் கலைஞரே உருவாக்கித் தரலாமா, இலக்கிய மேற்கோளின் வருகையிடங்களும் தரப்பட வேண்டுமா, வட்டார வழக்குகளுக்கு எவ்வாறு மேற்கோள் தருவது, வரலாற்று அகராதிக்கான மேற்கோளை எவ்வடிப்படையில் தருவது, உருவக வழக்குகளுக்கு எவ்வடிப்படையில் மேற்கோளைத் தெரிவு செய்வது என்பன போன்ற பல்வேறு கேள்விகளையும் எழுப்பிக்கொண்டு அவற்றுக்கான விடைகள் தீர்மானிக்கப்பட்டாக வேண்டும். தரவுச் சேகரிப்பிற்கு முன்னமேயே இவை தீர்மானிக்கப்பட்டால்தான் வேண்டிய சொற்களுக்கு வேண்டியவாறு மேற்கோள் தொடர்களைத் திரட்டிக்கொள்ள முடியும். பதிப்புப் பணியின்போது இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.[49]

திருக்குறள், சிலப்பதிகாரம், சமயம், பாட்டு, தாமரை, காவிரி, சேரன் செங்குட்டுவன் முதலிய பெயர்ப் பொருள்களுக்கும் பயன்பாட்டுச் சொற்களுக்கும் மேற்கோள் தரவேண்டியதில்லை. ஆனால் இலக்கிய இலக்கணச் சொற்களுக்கு அவற்றின் வருகையிடங்களைத் தந்தாலே போதுமானதாகும்.

அகச்சுட்டு ---- அ..இ..உ... (நன்னூல் 66 உரை)

அகச்சுவை --- அகமார்கத்துக்குரிய சுவை (சிலப். 3, 12 உரை)

பொருள் வேறுபாட்டை அறிய தரப்படும் மேற்கோள் தொடர்கள் ஒப்புருச் சொற்களுக்குத் தரப்படும் நிலையில் மிகுந்த கவனத்துடன் மேற்கோள் தரப்படவேண்டும்.

பூண்[1] ---- அணிதல். பூண்பதுவும் பொங்கரவம் (திருவாச.12,1)

பூண்[2] ---- உலக்கைத் தடி முதலியவற்றில் முனையிற்செறித்த வளையம்.

பூண்செறிந்த தலையையுடைய தண்டுகோலை (புறநா,243,உரை)

தன்வினை, கூட்டுவினைச் சொற்களின் பதிவுகளிலும் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும். காரணம் கூட்டுவினையின் பொருளைத் தனிவினை தருவதில்லை. சான்றாக, 1.கரைதட்டு, 2.படம்பிடி, 3.பிடித்துக்கொள், 4.முடிந்துவிடு, 5.மூச்சுவாங்கு, 6.கால்வாங்கு, 7.வாங்குவாங்கு, 8.வைத்திரு போன்ற கூட்டுவினைகளில் 1.தரையில் மோதி நின்றுவிடுதல், 2.புகைப்படம் எடுத்தல், 3.மனத்தில் பதிய வைத்துக் கொளல், 4.சண்டை மூட்டிவிடுதல், 5.மூச்சு இரைத்தல், 6.'ா' என்னும் எழுத்தை எழுதுதல், 7.அடித்தல், 8.கொண்டிருத்தல், மதிப்பாய் நடத்துதல் என்னும் பொருட்களைத் தட்டு—தல், பிடி—த்தல், முடி—தல், வாங்கு—தல், வை—த்தல், என்னும் தனிவினைகள் தருவதில்லை. எனவே தனிவினைப் பதிவுகளில் கூட்டுவினைச் சொற்களை மேற்கோள்களாகத் தரக்கூடாது.

தட்டு[1]-தல் 2. மோதுதல். மரக்கலம் **கரைதட்டிப்** போயிற்று

முடி[1]-தல் 7. சண்டை மூட்டுதல். அவளுக்கும் இவனுக்கும் **முடிந்துவிட்டான்**

வாங்கு[1]-தல் 4. மூச்சு முதலியன உட்கொள்ளுதல். **மூச்சு வாங்குகிறான்**

8.வரைதல் ககரத்துக்குக் **கால் வாங்கினால்** காவாகும்

21.அடித்தல், பிரம்பால் அவனை நாலு **வாங்குவாங்கினான்.**

சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் மேற்கண்ட முறையில் தரப்பட்ட மேற்கோள்கள் அனைத்தும் தவறானவை. அவை கூட்டுவினைகளில் மட்டுமே தரப்படவேண்டியவை. தனிவினைகள் இப்பொருளில் வந்தால் மட்டுமே உரிய பதிவுகளில் தனிவினை மேற்கோள்கள் தரப்பட வேண்டும்[50] என்று பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

சான்றுத்தொடர்

பொருள் விளக்க உத்திகளுள் ஒன்று சான்றுத்தொடராகும். எடுத்துக்காட்டுத் தொடர், உதாரணத் தொடர் என்றும் ஆங்கிலத்தில் Example sentence என்றும் இதனைக் குறிப்பிடுவர். பொருளின் விளக்கத்தை மேலும் தெளிவுபடுத்த சான்றுத்தொடர்கள் பயன்படுகின்றன. தலைப்புச் சொல்லின் பொருள் விளக்கத்தில் பல்வேறு வழக்குகளைப் புரிந்துகொள்ளத் தரப்படும் தொடர்கள் சான்றுத்தொடர்கள் என்றழைக்கப்படுகின்றன. சான்றுத்தொடரின் இன்றியமையாமை குறித்துச் சுகுஸ்தா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.[51]

> The purpose of the examples is to show how the entry-word functions in combination with other lexical units. The absolute majority of dictionaries Indicate examples. The bigger the dictionary the more examples it generally contains. Only very small dictionaries can afford not to indicate them; but absolute absence of examples is usually accompanied by a severe lowering of the standard of the dictionary.

சான்றுத்தொடர்கள் தரப்படாத அகராதிகள் தரம் குறைந்தவையாகக் கருதப்படுகின்றன என்பது சுகுஸ்தாவின் கருத்தாகும்.

சான்றுத்தொடராகத் தரப்படும் தொடர்கள் தலைச்சொல்லின் மொழிச்சூழல்களைச் சுட்டுவனவாக அமைகின்றன. தலைச்சொல்லின் பொருளை உறுதி செய்யவும் பொருள் மயக்கத்தைத் தீர்க்கவும் சான்றுத்தொடர்கள் பெரிதும் துணை நிற்கின்றன. பொருள் வேறுபாடுகள், பயன்பாட்டெல்லை, சொல்லின் வருகைநிலை, சொற்சேர்க்கை, இலக்கண வகைப்பாடுகள், ஒருபொருட் பன்மொழிகள் என்பனவற்றை விளக்குவதற்கு சான்றுத்தொடர்கள் துணையாக அமைகின்றன. சான்றுத்தொடர்கள் பொருள் விளக்கத்தில் இடம்பெறாத புதிய செய்திகளையும் தருவதுண்டு.

பொருள் மயக்கம் தோன்றாமல் இருக்கவும் சொல் வழக்கைத் தெளிவாக அறியவும் வழிகோலுவதற்குப் பொருள் வரையறையை அடுத்துப் பொருட்சூழலைக் குறிப்பது அகராதியியல் நெறியாகும். இலக்கிய ஆட்சியோ பேச்சு வழக்கு ஆட்சியோ பொருட்சூழலுக்குக் கொள்ளலாம்.[52]

கலைச்சொற்கள், அறிவியல் சொற்கள் என்பனவற்றிற்குச் சான்றுத்தொடர்கள் தரப்படுவதில்லை. தலைச்சொல்லின் பதிவுகளில் இடம்பெறும் சான்றுத்தொடர்கள் அப்பதிவுகளுக்கு உட்பட்ட ஒன்றாகவே கருதப்பெறும். சான்றுத்தொடர்கள்

தலைச்சொல்லின் பொருளை விளக்குவதற்குப் பயன்படும் வகையில் கூடுதல் பொருளை விளக்குவதற்கு அமையலாமே தவிர எதிர்நிலையில் அமைதல் ஆகாது. அகராதியில் இடம்பெறும் பலபொருட் சொற்களின் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சான்றுத்தொடர் தரப்பெறும். இச்சான்றுத்தொடர்கள் சொல்லின் பொருள் உறவிற்கேற்றாற்போல் அமைந்திருக்கும். சான்றுத்தொடர்களின் அளவு, வகை என்பன சொல்லின் பொருள் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் அமைகின்றன.

"தமிழ் இருமொழி அகராதிகளில் எடுத்துக்காட்டுகள் பின்வரும் நான்கு நிலைகளில் அமைந்துள்ளன என்று சரளா ரங்கநாதன் குறிப்பிடுகின்றார்" [53]

1. இலக்கியம் சார்ந்தவற்றை மேற்கோளாகத் தருதல்.
2. ஆசிரியரால் தொகுத்து அளிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள்.
3. பழமொழி, மரபுத்தொடர்கள் எடுத்துக்காட்டாய் இடம் பெறுதல்.
4. வழக்குச்சொற்கள், வாக்கியங்கள் எடுத்துக்காட்டாய் இடம் பெறுதல்.

தமிழ்ப் பேரகராதியில் மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடியே சான்றுத்தொடர்கள் அமைந்துள்ளன.

ஏடாகூடம் -- தாறுமாறு.
காரியம் ஏடாகூடமாய்ப் போயிற்று.

ஏண்கோண் -- ஒழுங்கின்மை.
ஏண்கோணான பேச்சு

ஏரி -- கொழுத்துள்ள பிடர்.
அவனுக்கு ஏரி முற்றிப்போயிற்று.

ஒழித்தல் -- முடித்தல்.
எல்லா வேலையையும் ஒழித்துக்கொண்டு வா.
நீக்குதல்.
அவனை வீட்டைவிட்டு ஒழித்தேன்.
காலிசெய்தல்.
பெட்டியை ஒழித்தாயிற்றா?

இவ்வகைச் சான்றுத்தொடர்களினால் ஒரு சொல் எந்த பொருட்சூழலில் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் அறியலாம். இத்தகைய முறையினையே பிற்கால அகராதிகளும் பயன்படுத்தி வருகின்றன.

குறைகளும் சிக்கலும்

இன்றுள்ள அகராதிகளில் தமிழ்ப் பேரகராதியே பேரளவு அகராதியியல் நெறியில் அமைந்திருப்பினும் அதில் பல குறைபாடுகளும் காணப்படுகின்றன என்கிறார் தேவநேயப் பாவாணர் [54] அவை:

1. சொல் வழுக்கள்
2. பொருள் வழுக்கள்
3. வேர் வழுக்கள்
4. இலக்கண வழுக்கள்
5. மரபு வழுக்கள்
6. அகராதி அமைப்பு வழுக்கள்
7. அகராதி ஆசிரியர் குறைகள்
8. சென்னைப் பல்கலைக்கழக அமைப்புக் குறைகள்

இவற்றில் முதல் மூன்றையே மிகப்பெரும் குறைகளாகக் குறிப்பிடுகின்றார்.

எதிர்வினைகள்

அகராதி உருவாக்கத்தில் ஏற்பட்ட கால விரயம், அவற்றில் உள்ள குறைபாடுகள் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன.

1. இவ்வகராதி உருவாக்கத்திற்குச் சென்னை மகாண அரசு செய்யும் செலவு வீணானது, பயனொன்றும் இல்லையென்றும், கால விரயத்தைச் சுட்டிக்காட்டி ஊழியன் இதழ் 17.11.1925 அன்று ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டுள்ளது [55]

2. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் சொல் வழு, பொருள் வழு, வேர் வழு, இலக்கண வழு, மரபு வழு, அகராதி அமைப்பு வழு எனப் பல குறைகள் மலிந்து காணப்படுகின்றன என்றும் தனித்தமிழ்ப் பற்றில்லாத வையாபுரிப்பிள்ளை, உ.வே.சா. போன்றோராலும் அகராதிக் குழுவில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தாலும் மேலைநாட்டினரின் தமிழிலக்கணப் புலமையின்மையினாலும் பல குறைகள் நேர்ந்துள்ளன என்று[56] தேவநேயப் பாவாணர் தம் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

3. சொற்களின் உற்பத்தியைக் குறிப்பிடும்போதும் பல்வகைப் பிழைகள் ஏற்பட்டுள்ளன. பதிப்பாசிரியரேயன்றி, நூலாசிரியர்களும் சொல் வடிவங்களைத் தவறாக உணர்ந்து தவறான சொற்களைத் தந்துள்ளமையினால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. 'தாசேரகம்' என்ற சொல்லுக்கு 'ஒட்டகம்'

என்பது பொருள். இதனை 'தாசோகம்' என ஒருசில நிகண்டாசிரியர்கள் தவறாக உணர்ந்து 'தேனீ' எனப் பொருள் கொண்டமையால் சூடாமணி நிகண்டிலேயே இவ்வாறு தவறாகப் பொருள் பதிப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.[58]

4. "தீங்கற்ற அடிமை வேலை" எனப்பெறும் அகராதி உருவாக்கப் பணி குறித்து, ஜே.ஜே. ஸ்கேலிஜர் (J.J. SCALIGER) குறிப்பிடுகையில், "மிகக் கொடிய குற்றவாளிகளைத் தூக்கில் போட்டோ அல்லது மிகக் கடினமான செயலைச் செய்யச் சொல்லியோ தண்டித்தல் வேண்டாம். ஆனால் அவர்களை அகராதிகளைத் தொகுக்கச் சொல்லித் தீர்ப்பளிக்கலாம். ஏனென்றால் எல்லாத் துன்பங்களும் இப்பணியில் அடங்கியுள்ளன"[59] என்கிறார்.

இத்தகைய கடினமான இவ்வகராதி உருவாக்கப் பணியில் ஒரு சொல்லைத் தேர்வுசெய்து சேர்ப்பதற்குமுன் அதன் உண்மை வடிவத்தை ஆராய வேண்டியதாக உள்ளது. காரணம் தமிழ் நூல்களில் பெரும்பாலானவை நன்கு பரிசோதித்து வெளியிடப்படவில்லை.

ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் போன்றோரின் சில பதிப்புகளே ஏற்றுக்கொள்ளத்தக்கனவாக இருந்தன[59] என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை தனது அகராதி நினைவுகளில் குறிப்பிடுகிறார். மேலும் உ.வே.சா. பதிப்பில்கூடத் தவறாக ஒரு சில புதுச்சொற்களை உருவாக்கிவிட்டதாகக் குறிப்பிடுகிறார்.[60]

உதாரணமாக சிலப்பதிகாரம் வாழ்த்துக்காதையில் (26)"**பாவைமாராரிக்கும் பாடலே பாடல்**" என்னும் வரியில் '**ஆரிக்கும்**' என்பதற்கு '**ஒலிக்கும்**' என்று பொருள் எழுதி விட்டனர். இதை நம்பித் தமிழ் லெக்ஸிகனிலும் '**ஆரித்தல்**' என்பதற்கு '**ஒலித்தல்**' என்று பொருள் வெளியிட இது தவறாக அமைந்தது[61] என்றும் இவ்வகைப் போலிச்சொற்களைக் '**கோஸ்ட் வோர்ட்**' **(Ghost Word)** என்று ஆங்கிலத்தில் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். "**நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டினைத் தவிர ஏனைய நிகண்டுகள் தவறாகவே பதிப்பிக்கப்பட்டுள்ளன**"[61] என்றும் குறிப்பிடுகிறார்.

வெளியீட்டு விவரம்

தமிழ்ப் பேரகராதி முதற்தொகுதி **1924**இல் தொடங்கி ஆறாம் தொகுதி **1936**ஆம் ஆண்டு வரை பதிப்பித்து வெளியிடப்பட்டது. இதில் மொத்தமாக ஆறு தொகுதிகளில் **3928** பக்கங்களில் **1,04,405** சொற்களும், பிற்சேர்க்கையில் உள்ள **423** பக்கங்களில் **20,000** சொற்களோடு சேர்த்து மொத்தம் **1,24,405** சொற்களும் உள்ளன.

(காண்க: பின்னிணைப்பு – 1)

தொகுப்புரை

- இலக்கணமும் அகராதியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன என்பதைத் தமிழ் மரபிலக்கணங்களில் சொற்பொருள் கூறும் பகுதி தனியாக இடம் பெற்றுள்ளதிலிருந்து அறியமுடிகிறது.

- தொல்காப்பியத்தில் சொற்களுக்கான பொருள் அகரவரிசையில் வரிசைப்படுத்தித் தரப்படவில்லை. மாறாகக் கடினமான சொற்களுக்குத் தொல்காப்பியர் பொருள் கூறியுள்ளாரே தவிர, அவர் ஒரு அகராதி ஆசிரியரா என்றால் இல்லை.

- ஒலிபெயர்ப்பு, இலக்கணக்குறிப்பு, சொல்மூலம், இனமொழிச்சொற்கள், மேற்கோளும் அதன் வருகையிடமும், சான்றுத் தொடர் முதலியவற்றைத் தமிழ்ப் பேரகராதியில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.
- தமிழ்ப் பேரகராதியில் தலைச்சொல் இணைப்பு இடம் பெற்றுள்ளது. அதன் மாற்று வடிவங்கள் பகர அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது சிறப்பாகும்.

- ஒப்புருச்சொல் பதிவுகளுக்கு எண்கள் தரும் நெறியை முதன்முதலில் தமிழ்ப் பேரகராதி அறிமுகப்படுத்தியுள்ளது சிறப்பாகும்.

- தமிழ் அகராதி மரபில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில்தான் முதன்முதலாய்ப் பயன்பாட்டாளர் குறிப்புகளைத் தரும் பகுதியில் Transliteration Table ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ் இருமொழி அகராதியில் எல்லாத் தலைச்சொற்களின் பதிவுகளுக்கும் ஒலிபெயர்ப்பு தரப்பட்டுள்ள அகராதி இதுவொன்றேயாகும்.

- தமிழ்ப் பேரகராதியில் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றா வினைப் பொருள்கள் ஒரே பதிவில் தனித்துக் காட்டப்பட்டுள்ளன.

- பொருள் விளக்கப் பகுதியில் சொல்லுக்கான பொருளைத் தமிழிலேயே விளக்காமல் பிறமொழிச் சொற்களும் கையாளப்பட்டுள்ளன.

- தமிழ் அகராதிகளுள் சொற்பிறப்பியல் ஒப்பியல் பண்புகளைக் கொண்ட ஒரே அகராதி இதுவே ஆகும்.

- ஒரு சொல்லுக்கான பல பொருள்களைத் தமிழ்ப் பேரகராதி தந்தாலும் பல சொற்களுக்குப் பொருளை நேரடியாகத் தராமல் see என்று குறிப்பிட்டு வேறோரு இடத்தில் பொருளைப் பார்க்கவேண்டிய நிலையில் அமைந்துள்ளது.

- இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள் தந்து அதன் வருகையிடமும் தந்திருப்பது சிறப்பாகும்.

- சான்றுத்தொடர்களில் வழக்குச் சொற்களைக் கொண்ட சான்றுத்தொடர்களும் வட்டார வழக்குச் சொற்றொடர்களும் பழமொழித் தொடர்களும் பதிவு செய்யப்பட்டிருப்பது சிறப்பாகும்.

குறிப்புகள்

1. Bloom Field, L., 1993, Language, P.274
2. ஜெயதேவன். வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, ப.42
3. மேலது, ப.42
4. மேலது, ப.42
5. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1982, தமிழ்ப் பேரகராதி முன்னுரை. ப. iv
6. பாலசுப்ரமணியன். க., 1989, தொல்காப்பிய உரியியல் ஓர் அகராதியியல் கண்ணோட்டம். ப. 58
7. மாதையன், பெ., 1997, அகராதியியல், ப.35
8. சுந்தர சண்முகனார்., 1965, தமிழ் அகராதிக்கலை, ப.26
9. சற்குணம்.மா., 2002, தமிழ் நிகண்டு ஆய்வு .ப.83
10. மேலது ப. 83
11. சுந்தர சண்முகனார்., 1965, தமிழ் அகராதிக்கலை. ப..33
12. ஜெயதேவன்.வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. முடிவுரை. ப.115
13. மேலது, ப.18
14. இன்னாசி.சூ., 1976, சதுரகராதி ஆராய்ச்சி. ப.74
15. மேலது, ப.74

15. வையாபுரிப்பிள்ளை, எஸ்., தமிழின் மறுமலர்ச்சி,தொகுதி–II ,தமிழ் அகராதி ப-416

16 தமிழ்ப் பேரகராதி, 1982, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ப-1.

17 மாதையன். பெ., 1997 அகராதியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர், ப-15.

18. சுந்தரசண்முகனார், 2001, தமிழ் அகராதிக்கலை, சிதம்பரம், மெய்யப்பன் தமிழாய்வகம். ப-278

19. வையாபுரிப்பிள்ளை எஸ்., 1982, தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி II, ப-416.

20. பெருஞ்சொல்லகராதி, 1988, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், முன்னுரை,ப. v

21. தேவநேயப் பாவாணர், ஞா., 2001, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, முன்னுரை, ப.1

22. ஜெயதேவன்.வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. முடிவுரை. ப.99

23. சரளா ரங்கநாதன்., 2009, தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும் ப.-21

24. மேலது, ப.238.

25. மேலது, ப.238

26. வின்சுலோ. எம்., 1991, தமிழ் ஆங்கில அகராதி, முன்னுரை, பக் -vii-viii

27. தமிழ்ப் பேரகராதி, 1982, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, முன்னுரை, ப.iv

28. சரளா ரங்கநாதன்., 2009, தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும் ப - 240.

29. Singh, R.A., 1992, An Introduction to the Lexicography. Pa. 54-55

30. மாதையன் பெ., 1997, அகராதியியல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

ப- 414.

31. மேலது., ப - 290

32. மேலது., ப - 290

33. மேலது., ப - 290

34. மேலது., ப -291

35. மேலது., ப.290

36 மேலது., ப.291

37. Singh, R.. A., 1992, An Introduction to the Lexicography. p 116

38. சரளா ரங்கநாதன்., 2009, தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும் ப.256

39. சித்திரபுத்திரன் எச்., 1991, அகராதியியல் கலை, ப.40

40. ஜெயதேவன். வ., தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ப.18

41. Zgusta, L., 1971, Manual of the Lexicography , p. 252-259

42. ஜெயதேவன், வ., தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ப.104

43. மாதையன் பெ., 1997 அகராதியியல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.414

44. ஜெயதேவன். வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ப .88

45. சரளா ரங்கநாதன்., 2009, தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும் ப - 37

46. மாதையன் பெ.,1997 அகராதியியல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம். ப.322

47. மேலது, ப.367

48. மேலது, ப.367

49. மேலது, ப.375

50. Zqusta, L., 1971, Manual of the Lexicography, p 263

51. ஜெயதேவன். வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு ப.105

52. சரளா ரங்கநாதன்., 2009, தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும் ப.284

53. தேவநேயப் பாவாணர் ஞா., 2001, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, ப--1

54. ஜெயதேவன்.வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ப .108

55 தேவநேயப் பாவாணர் ஞா., 2001, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, ப.1

56. வையாபுரிப்பிள்ளை, எஸ்., 1982, தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-II, ப.438

57. மாதையன், பெ., 1997, அகராதியியல், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.322

58 வையாபுரிப்பிள்ளை, எஸ்., 1982, தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி II , ப.434

59. மேலது, ப.436

60. மேலது, ப.436

61. தேவநேயப்பாவாணர், ஞா, 2001,சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, ப.1

இயல் : இரண்டு

2. குறிப்பான்களும் குறியீடுகளும்

காலம் கடந்தும் இருப்பது மொழி. அதன் பயன்பாடு அளவிட முடியாதது. மொழிப் பயன்பாட்டு எல்லை விரிவுக்குத் தக்கவாறு மொழி வேறுபாட்டுத் தன்மைகளும் அதிகமாய் இருக்கும். வட்டாரம், துறை, காலம், நடை, தரம் போன்ற பல்வேறு அடிப்படைகளில் வேறுபாடுகள் உள்ளன. ஒரு சொல் அல்லது குறிப்பிட்ட பொருள் ஒரு வட்டாரம் சார்ந்ததாகவோ, காலம், துறை சார்ந்ததாகவோ இருக்கும். இத்தகைய சமூகம் சார்ந்த மொழி வடிவங்களின் உண்மைத் தன்மைகளை உள்ளது உள்ளவாறே ஆவணப்படுத்தும் அகராதிகளில் இவை கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

பதிவுச் சொல்லான தலைச்சொல்லின் வழக்காற்று இயல்பு குறித்த தகவல்களைத் தரும் அகராதிப் பதிவுக்கூறே "குறிப்பான்" எனப்படும்.

பதிவுச்சொல் புதுச்சொல்லா, பழஞ்சொல்லா, வட்டார வழக்கா, மத வழக்கா, இழி வழக்கா, உயர் வழக்கா, சாதி வழக்கா, வழக்கொழிந்த வழக்கா, பெரு வழக்கா, அருகிய வழக்கா என்பதை அறிந்துகொள்ளும் வகையில் பொருட்பகுதியில் தரப்படும் சிறுகுறிப்பே "குறிப்பான்" எனப்படும்.

எழுத்துக்களின் வாயிலாக உருவாக்கப்படும் சொற்களுக்கு எவ்வகை முக்கியத்துவம் உள்ளதோ அதே அளவு முக்கியத்துவம் குறிப்பான்களுக்கும் உண்டு. தலைச்சொல் பகுதி, பொருட்பகுதி ஆகிய இரு பகுதிகளிலும் குறிப்பான்கள் இடம்பெறும். இவை அடைப்புக்குறிக்குள்ளும் அடைப்புக்குறியின்றியும் தரப்பெறும்.

ஒரு சொல் எத்துறையைச் சார்ந்தது, எந்தப் பகுதி மக்களால் வழங்கப்படுகிறது முதலியவற்றை அறிந்துகொள்ளத் துணை செய்யும் குறிப்பு அகராதியில் இடம் பெறுவதுண்டு. இது வழக்குப் புலக்குறிப்பு[1] எனப்படும் என்கிறார் வ. ஜெயதேவன்.

1. தகுதிப் புலக்குறிப்பு (Status Label)
2. வட்டாரப் புலக்குறிப்பு (Regional Label)
3. துறைப் புலக்குறிப்பு (Subject Label)

என இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்கிறார்.

இவ்வகைக் குறிப்பான்கள் அகராதியில் இடம்பெறும் தன்மைக்கேற்ப மூன்று வகையாகப் பிரிக்கலாம் என ஆர்.ஏ.சிங் குறிப்பிடுகின்றார்.[2] அவை:

1. இலக்கணக் குறிப்பான் (Grammatical Label)
2. துறைக் குறிப்பான் (Subject Label)
3. நிலைக் குறிப்பான் (Status Label)

1. இலக்கணக் குறிப்பான்

தலைச்சொல்லின் இலக்கணப் பொருள்களைக் குறிப்பிடும் குறிப்பான் இலக்கணக் குறிப்பானாகும். மொழியின் இலக்கண வகைபாடுகள் குறித்து அமையும் இவை மொழியின் இயல்பிற்கு ஏற்றவாறும் இலக்கண மரபிற்குத் தக்கவாறும் வேறுபடும்.

தலைச்சொல்லின் அடிப்படை இலக்கணக் கூறுகளான பெயர், வினை, பெயரடை, வினையடை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்னும் இலக்கணக் குறிப்புகளே இலக்கணக் குறிப்பான்களாகும்.

இவை குறுக்கங்களாகத் தலைச் சொல்லையடுத்து வழங்கப்பட்டுள்ளன. இலக்கணக் குறிப்பான்களாக ablative, adjective, adverb, affirmative, appletive, dative, feminine, finitive verb, future tense, intransitive, interrogative போன்றவை கையாளப்படுகின்றன.

ஆகாரம்[2]	akaram, **n** < a-ghra.clarified batter
ஆங்கு[1]	anku, **adv** < அ 1. There அவ்விடம்
ஆசி[-2]-த்தல்	aci – **II.Vt.r** < asa.To desire
ஆசிடு-தல்	acitu - **v.intr** < ஆசு1+1.So much,
இயர்	iyar **part.** Vbl. Opt ending…
ஈது	ity, **pron** < இது This.
அகோ	ako. **Int** < aho.
இத்தனை	i – t –tanai. **Adj.** < இ [3] +1. So much;

2. துறைக் குறிப்பான்

தலைச்சொல் சார்ந்துள்ள துறை அல்லது பிரிவு பற்றிக் குறிப்பிடும் குறிப்பான் துறைக்குறிப்பான் எனப்படும். சமயம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், அறிவியல், இசை முதலிய துறைகளுக்குரிய சொற்களையும் அவற்றின் பொருளையும் சுட்டுவது துறைக் குறிப்பானாகும்.

துறைக்குறிப்பான்கள் சொற்குறுக்கங்களாக அடைப்புக்குறிக்குள் தலைச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பான்களை அடுத்தும் பொருள் பகுதியின் இறுதியிலும் தரப்பட்டுள்ளன. தமிழ்ப் பேரகராதியில் advaita, philosophy, akapporul, alchemy, architecture, arithmetic, astrology, astronomy, botony, engineering, mathematics, manuscript, music, mythology என்பன போன்றவை துறைக்குறிப்பான்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அக்கரகாலம்	akkara-kalam.n <a- ksra+ **(mus)**
அக்கியம்	akkiyam n **(Astrol)**
அக்கினிமண்டலம்	aka-c-cuvai,n < agni + **(yoga)**
அகச்சுவை	aka-c-cuvai,n < id + **(Natya)**
அகநிலைக்கொச்சகம்	aka-nilai-k-kocca-cam.n.<id+ **(Pros**)
அகப்புறக் கைக்கிளை	aka-p-pura-k-kaikilai,n.<id+ **(Akap)**
அட்ட-ழித்தல்	attali, V.tr < அடு2+ அழி cf.atta to cook and distribute.... **(Insc)**
அடுத்துவரலுவமை	attu-varal-uvmai.n< id+ **(Reht)**
அடையடுத்தவாகுபெயர்	atai-y-atutta-v-akupeyar n<id **(Gram)**
வருக்கலாடசங்கலிதம்	varukka-lata-cankalitam,n.< varga + lata+ **(Math.)**
வழிநிலைக்காட்சி	valinilai-k-katci,n.< வழிநிலை +. **(Akap.)**
வாண்மங்கலம்	van-mankalam,n.< வரள் +. **(Purap.)**
அசுமரி	acumari, n. < asmari. **(Med)**

3. நிலைக் குறிப்பான்

தகுதிக் குறிப்பான் என்றும் இதனைக் குறிப்பிடுவர். காலம், இடம், சமுதாயம், சாதி, குழு ஆகியவற்றின் அடிப்படையில் நிலைக் குறிப்பான்கள் அமையும். இவை சொற்களின் பயன்பாட்டுத் தகுதி, நிலை, இழி வழக்கு, உயர் வழக்கு, பார்ப்பன வழக்கு, பழஞ்சொல், புதுச்சொல், அருகிய வழக்கு, பொது வழக்கு எனப் பல நிலைகளில் அமையும். மேலும் நிலைக் குறிப்பான்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் என ஆர்.ஏ. சிங். குறிப்பிடுகின்றார். அவை:

1. காலக் குறிப்பான் (Temporal)
2. இடக் குறிப்பான் (Spatial)
3. நடைக் குறிப்பான் (Style)

1. காலக் குறிப்பான்

அகராதியில் இடம்பெற்றுள்ள தலைச்சொல் எந்தக் காலத்திற்கு உரியது என்பதைச் சுட்டுவது காலக் குறிப்பானாகும். இது தொல் வழக்கு, அருகிய வழக்கு, வீழ் வழக்கு, இக்கால வழக்கு, புதுச்சொல் முதலியவற்றைக் குறிப்பதாகும்.

தமிழ்ப் பேரகராதியில் காலக் குறிப்பானாக modern என்னும் சொல் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தொல் வழக்கு, வீழ் வழக்கு, இக்கால வழக்கு, புத்தாக்கம், அருகிய வழக்கு முதலிய சொற்களில் எவ்விதக் குறிப்பானும் காணப்படவில்லை.

அப்பியாசம்	appiyacam. n <aghyasa . 1, practice. exercise… பழக்கம் ***Mod***
அனுபந்தம்	anupantam, n. < anu- ban-dha. 1. Relation, connection; உறவின்முறை. ***Mod***
இந்து	into, n.< U. *hindu<sindhu*.1.The river Indus ; சிந்துநதி.***Mod***
நாசிகாசூரணம்	nacika-cranam, n < id.+ curna. Snuff; மூக்குப்பொடி ***Mod***
நிம்பர்	nimpar, n. < E number. வியாச்சியம் ***Mod***
பண்டாபீசு	pantapicu, n. < E. Fund office. Office of a permanent fund; co-operative bank; ஐக்கிய நாணய நிதிச்சாலை ***Mod***

2. இடக் குறிப்பான்

சொல், பொருள் சார்ந்துள்ள நாடு, ஊர், பகுதி முதலியவற்றின் பயன்பாட்டுத் தகுதி, நிலை போன்றவற்றைப் பற்றி இது அமையும். இதில் வட்டார வழக்கு (regional spatial), தேசிய வழக்கு (national) உலக வழக்கு (inter national), தனி மனித வழக்கு முதலியன அடங்குகின்றன.

முற்கால அகராதிகளில் சுட்டப்பெறாத இடக் குறிப்பான்கள் பல தமிழ்ப் பேரகராதியில் இடம் பெற்றுள்ளன. இவற்றை "வட்டாரக் குறிப்பான்கள்" என்றும் கூறலாம். இடக்குறிப்பான்களாக Anaimalai usage , Chetti natu usage, Ceylon usage, Chingelput usage, Coimbatore usage, Chitoor usage, French Indian usage, Kodaikanal usage, Salem usage, Tanjore usage, Tinnevelly usage, Trichinopoly usage, Local usage என்பன போன்ற ஐம்பது இடக்குறிப்பான்கள் காணப்படுகின்றன.

நாவாதி navay, n. Downy-nerved olive linden. See

உருத்திராட்சரம். ***Ānaimalai***

ஏரங்காடு eram – katu, n. peob.T. erra+. Fertile land of red loam soil; Fetile black cotton soil; பருத்தி விளைதற்குரிய

புன்செய் நிலம் ***Cm***

ஒத்தமலங்கொட்டு–தல் ottamalankottu-, v.intr.perh. ஒத்து+அவலம் +.

To behave inproperly , rudely, insolently;

இடக்குச்செய்தல். ***Cg***

தொலை tolai, n. < தொலை [1] – 1.Ruin; அழிவு. 2.Dostance, great distance; தூரம் 3. அக்கரைச் சீமை . ***Nāt. Cheṭṭi***

அரிச்சந்திரம் ari-c-cantiram,n. King post in a truss; கூரைக்கைத்

தாங்குங்கட்டை **(Md)**

தோல் மாடு tol-matu, n. perh. id +. Baiting bull:

சல்லிக்கட்டு மாடு

3. நடைக் குறிப்பான்

ஒவ்வொரு காலத்திலும் தேவைக்கேற்ப மொழியில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. சமுதாயம், வரலாறு, சாதி, பேச்சு வழக்கு போன்றவற்றில் சொற்பொருளில் நிகழும் மாற்றங்களைக் குறிப்பன நடைக்குறிப்பான்களாகும்.

இலக்கிய வழக்கு, செய்யுள் வழக்கு, உலக வழக்கு, பேச்சு வழக்கு, குறுமொழி வழக்கு, குழூக்குறி வழக்கு, இழி வழக்கு, நகை வழக்கு, மங்கல வழக்கு, புகழ் வழக்கு, முரண் வழக்கு முதலியவும் நடைக்குறிப்பான்களாகும்.

இவை மொழியியலில் காலந்தோறும் பல நடையியல் மாற்றங்களை அடைகின்றன. சாதி சமய வழக்குகளும் இதில் அடங்குகின்றன. சாதி வழக்காக அந்தணர், செட்டியார், நாட்டார், மீனவர், பறையர், நாயுடு, வேளாளர் வழக்கு என்பனவும் சமய வழக்காகக் கிறித்தவ வழக்கு, முஸ்லிம் வழக்கு, சைவ வழக்கு, வைணவ வழக்கு, பௌத்த வழக்கு, ஜைன வழக்கு என்பனவும் நடைக்குறிப்பான்கள் மூலம் சுட்டப்படுகின்றன. அவை:

அக்காத்தி akkatti,n.<a-gati. One without resources or

friends; திக்கற்றவன். ***Loc***

அக்காள் akkal n. < அக்கா Elder sister; தமக்கை ***Colloq***

அச்சரம் [2] accaram, n < aksara letter. எழுத்து ***Vul***

மொய்ப்பு moyppu, n. Crowd, multitude; கூட்டம். **prob.**

தமிழ்ப் பேரகராதியில் குறிப்பான்கள்

அகராதிகளிலும் நூல்களிலும் மிகப்பெரிய சொற்களைச் சுருக்கமாகக் குறிப்பதற்காகப் பல்வேறு வகையான குறிப்பான்கள் பயன்படுத்தப்படும். அவ்வாறே இதில் **இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்களும் பதினொரு குறியீடுகளும்** கையாளப்பட்டுள்ளன.

இப்பேரகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ள இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை:

1. எழுத்துக்களின் எண்ணிக்கை
2. பொருள் வகை.

1.எழுத்துக்களின் எண்ணிக்கை

குறிப்பான்களின் எழுத்துக்களின் எண்ணிக்கையை வைத்து இவற்றைப் பிரிக்கையில் ஓர் எழுத்து முதல் பத்து எழுத்துகள் வரை குறிப்பான்கள் உள்ளன. அவை: **(காண்க: பின்னிணைப்பு – 3)**

ஓரெழுத்துக் குறிப்பான்கள்	18
இரண்டெழுத்துக் குறிப்பான்கள்	54
மூன்றெழுத்துக் குறிப்பான்கள்	76
நான்கெழுத்துக் குறிப்பான்கள்	72
ஐந்தெழுத்துக் குறிப்பான்கள்	27
ஆறெழுத்துக் குறிப்பான்கள்	21
ஏழெழுத்துக் குறிப்பான்கள்	14
எட்டெழுத்துக் குறிப்பான்கள்	2
ஒன்பதெழுத்துக் குறிப்பான்கள்	6
பத்தெழுத்துக் குறிப்பான்கள்	2
	292

ஓரெழுத்துக் குறிப்பான்கள்

ஓரெழுத்துக் குறிப்பான்களாகப் பதினெட்டுக் குறிப்பான்கள் உள்ளன. இவை மொழி, இலக்கணம், திசை, காலம், பொது முதலான பொருள் பற்றிய குறிப்பான்களாகக் காணப்படுகின்றன.

E. (after the mark <)	--	English
G.	--	Gondi
K.	--	Kanarese
M.	--	Malayalam
		(மொழி)
E.	--	East
S.	--	South
s.	--	small
N.	--	North
		(திசை)
n.	--	Noun
v.	--	Verb
		(இலக்கணம்)
c.	--	Century
m.	--	medium
p.	--	Page
		(பொது)

இதில் S, s. என ஒரே எழுத்தில் இரண்டு குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. S என்னும் தடித்த பெரிய எழுத்துக் குறிப்பான் 'South' என்னும் இடப்பொருளையும், *s* என்னும் சிறிய சாய்வான எழுத்து 'small' என்னும் பொதுப் பொருளையும் குறிக்கும். அகராதியைப் பயன்படுத்துபவர்களுக்கு எவ்விதக் குழப்பமும் ஏற்படாமல் இருக்கவும் ஒரே எழுத்தில் குறிக்கப்படும் குறிப்பான்களை வேறுபடுத்தவும் ஒரு எழுத்து பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் சாய்வாகவும் தரப்பட்டுள்ளன.

இரண்டெழுத்துக் குறிப்பான்கள்

இரண்டெழுத்துக் குறிப்பான்களாக ஐம்பத்து நான்கு குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஊர், மொழி, திசை, இலக்கணம், துறை, சமயம், பொது முதலான பொருள் அடிப்படையில் இவ்வகைக் குறிப்பான்கள் காணப்படுகின்றன. இதில் ஊர் தொடர்பான குறிப்பான்களே மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

Co.	-- Coorgee	
Tu.	-- Tulu	(மொழி)
N.E.	-- Narth- East	
S.E.	-- South- East	(திசை)
Ed.	-- Edition	
i.e.	-- that is	
sh.	-- Shrub	(பொது)
Cd.	-- Cuddappah	
cd.	-- Cuddappah Usage	
Cm.	-- Coimbatore	
cm.	-- Coimbatore Usage	
Ma.	-- Madras	
Md.	-- Madras	
N.A .	-- North Arcot	
N.A.	-- North Arcot Usage	
Pd.	– Pudukkottai	
Pd.	-- Pudukkottai Usage	
Sm.	-- Salem	
sm.	-- Salem Usage	
Tj.	-- Tanjore	
Tj.	-- Tanjore Usage	
Tn.	-- Tinnevelly	(ஊர்)

ஊர் தொடர்பான குறிப்பான்களில் ஒரு ஊருக்கு இரு குறிப்பான்களாக ஒரே எழுத்துக்களை உடைய குறிப்பான்கள் Cd. – *cd.,* Cm. –*cm.,* N.A. –*N.A.,* Pd. – *Pd.,* Sm. –*sm.,* Tj –*Tj.,* Tn. –*Tn.,* ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. Madras என்ற ஊர்ப் பெயரைக் குறிக்க மட்டும் Ma. -- Md. -- Madr என மூன்று குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மூன்றெழுத்துக் குறிப்பான்கள்

மூன்றெழுத்துக் குறிப்பான்களாக எழுபத்தாறு குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளன. இப்பேரகராதியில் மூன்றெழுத்துக் குறிப்பான்களே மிக அதிகம். இவற்றில் இலக்கணம், மொழி, வட்டார வழக்கு, குழு, கொச்சை, பொதுக் குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளன.

abl. -- Ablative
adj. -- Adjectibval
adv. -- Adverb
fut. -- Future tense
pro. -- Proverbial Usage
syn. -- Synonym **(இலக்கணம்)**

Bra. -- Brahmi
Dut. -- Dutch
Ger. -- German
Heb. -- Hebrew
Lat. -- Latin
Mhr. -- Marathi
Tib. -- Tibetan

(மொழி)

cir. -- Circum
esp. -- Especially
l.cl. -- Large climber
m.cl. -- Medium climber

s.tr. -- Small tree

viz. -- namely

(பொது)

loc. -- Locative

Loc. -- Local Usage

(வட்டார வழக்கு)

Vul. -- Vulgar Usage

(கொச்சை வழக்கு)

(Mil.) -- Military

Mil. -- Military Usage

(குழு வழக்கு)

முதலான குறிப்பான்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

நான்கெழுத்துக் குறிப்பான்கள்

நான்கெழுத்துக் குறிப்பான்களாக எழுபத்து இரண்டு குறிப்பான்கள் உள்ளன. இவற்றில் இலக்கணம், மொழி, ஊர், சமயம், துறை, வட்டார வழக்கு, பொது தொடர்பான குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளன.

conj. -- Conjunctional

fin.v. -- Finite verb

(Gram.) -- Grammar

(இலக்கணம்)

Dial. -- Dialectal

Dist. -- District

(வட்டார வழக்கு)

Madr. -- Madras Usage

Madu. -- Madura

Tinn. -- Tinnevelly Usage (ஊர்)

Myth. -- Mythology

(Yōga) -- Yōga Philosophy (துறை)

ஐந்தெழுத்துக் குறிப்பான்கள்

ஐந்தெழுத்துக் குறிப்பான்கள் மொத்தம் இருபத்து எட்டு இடம் பெற்றுள்ளன. இதில் சமயம், இலக்கணம், மொழி, துறை, ஊர் போன்ற குறிப்பான்கள் உள்ளன.

Bible. -- Bible Usage
(Jaina) -- Jaina Philisophy
Muham. -- Muhammadan Usage

(சமயம்)

Appel. -- Appellative
Inter. or interrog. -- Interrogative

(இலக்கணம்)

Hindi. -- Hindi
Javan. -- Javanese
Malay. -- Malay language

(மொழி)

Persn. -- Persian
(Arith.) -- Arithmetic
(Engin.) -- Engineering
(Pu r ap.) -- Pu r appolrul

(துறை)

Kodai. -- Kodaikanal Usage

(ஊர்)

Parav. -- *Parava* Usage (ஜாதி)
North. -- North India Usage
South. -- South India Usage

(திசை)

இதில் Hindi என்னும் மொழிச் சொல்லுக்கு Hindi என்னும் ஐந்து எழுத்துக்களுமே குறிப்பானாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதுபோல் Slang என்னும்

கொச்சை வழக்குச் சொல்லுக்கு Slang என்ற ஐந்து எழுத்துக்களுமே குறிப்பானாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மொழிகளைக் குறிக்கும் குறிப்பானில் Gondi என்பதற்கு G என்றும், Telugu என்பதற்கு T என்றும், Urdu என்பதற்கு U என்றும் குறித்தாற்போல் Hindi என்னும் மொழிச் சொல்லுக்கு H என்னும் ஒரு எழுத்துக் குறிப்பானையே பயன்படுத்தியிருக்கலாம். அதுபோல் Slang என்னும் கொச்சை வழக்குச் சொல்லுக்கு Sl. என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானைப் பயன்படுத்தியிருக்கலாம். ஏனென்றால் H என்னும் ஓர் எழுத்துக் குறிப்பானும் Sl என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானும் இதில் குறிப்பானாக இல்லை.

ஆறெழுத்துக் குறிப்பான்கள்

ஆறெழுத்துக் குறிப்பான்கள் இருபது உள்ளன. இவற்றில் இலக்கணம், ஊர், துறை, வட்டார வழக்கு, சாதி, குழு, மொழி, பொது முதலான குறிப்பான்கள் காணப்படுகின்றன.

abbrev.	-- Abbreviation	
affirm.	-- Affirmative	
impers.	-- Impersonal	**(இலக்கணம்)**
Ceylon	-- Ceylon Usage	**(ஊர்)**
(Astrol.)	-- Astrology	
(Astron.)	-- Astronomy	**(துறை)**
Colloq.	-- *Colloq Usage*	**(வட்டார வழக்கு)**
Iruḷar.	-- Iruḷar Usage	
Kaḷḷar.	-- *Kaḷḷar* Usage	
Kuṟava.	-- *Kuṟava* Usage	**(ஜாதி வழக்கு)**

ஏழெழுத்துக் குறிப்பான்கள்

ஏழெழுத்துக் குறிப்பான்கள் மொத்தம் பதினான்கு உள்ளன. இவற்றில் இலக்கணம் துறை, சாதி, சமயம், குழு முதலான குறிப்பான்கள் காணப்படுகின்றன.

contrac. -- Contraction

paraphr. -- Paraphrase

pron.adj. -- Pronomial adjective

(இலக்கணம்)

Pulaiya. -- Pulaiyar Usage

Kōmuṭṭi -- Kōmuṭṭi Usage

Maṟavar. -- Maṟavar Usag e

Smārata. -- Smārata Brahmin Usage

(ஜாதி)

(Advaita.) -- Advaita Philosophy

(Mimāmsā.) -- Mimāmsā Philosophy

(Sāṅkhya.) -- Sāṅkhya Philosophy

(சமயம்)

Mercant. -- Mercantile Usage

(குழு)

எட்டெழுத்துக் குறிப்பான்கள்

எட்டெழுத்துக் குறிப்பான்கள் இரண்டு மட்டுமே உள்ளன. அவற்றில் ஒன்று பொது; மற்றொன்று சமயம் சார்ந்த குறிப்பானாகும்.

demonstr. -- Demonstrative (பொது)

(Monistic.) -- Monistic Philosophy (சமயம்)

ஒன்பதெழுத்துக் குறிப்பான்கள்

ஒன்பதெழுத்துக் குறிப்பான்கள் மொத்தம் ஆறு உள்ளன. இவற்றில் ஊர், சமயம், ஜாதி, துறை, குழு முதலான குறிப்பான்கள் உள்ளன. அவை:

Ānaimalai. -- Ānaimalai Usage (ஊர்)

(Atheistic.) -- Atheist Philosophy (சமயம்)

Cempaṭava. -- Cempaṭavar Usage (ஜாதி)

Nāt. Cheṭṭi. -- Nāt. Cheṭṭi Usage (ஜாதி)

palmistry -- Palmistry **(துறை)**

Oil-monger. -- Oil-monger's Usage **(குழு)**

பத்தெழுத்துக் குறிப்பான்கள்

பத்தெழுத்துக் குறிப்பான்களாக ஊர், பொது என இரண்டு குறிப்பான்கள் மட்டுமே உள்ளன.

Mahārāṣṭra. -- Mahārāṣṭra Usage **(ஊர்)**

Tranquebar. -- Tranquebar Usage **(பொது)**

2.பொருள் வகை

வட்டாரம், மொழி, இலக்கணம், ஜாதி, சமயமும் தத்துவமும், துறை, நூல், பொது முதலிய பொருள் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளின் கீழ்ப் பிரித்ததில் மொத்தம் 292 குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. **(காண்க—பின்னிணைப்பு –4)** அவை:

வட்டாரக் குறிப்பான்கள்	58
ஜாதி, குழுக் குறிப்பான்கள்	24
மொழிக் குறிப்பான்கள்	37
இலக்கணக் குறிப்பான்கள்	58
சமய, தத்துவக் குறிப்பான்கள்	20
துறைக் குறிப்பான்கள்	23
பொதுக் குறிப்பான்கள்	72
	292

வட்டாரக் குறிப்பான்கள்

தலைச்சொல் எந்த வட்டாரத்தைச் சேர்ந்த சொல் என்பதை அறிவிப்பன வட்டாரக் குறிப்பான்களாகும். இவ்வகைக் குறிப்பான்களாகப் பேரகராதியில் ஐம்பத்தெட்டுக் குறிப்பான்கள் உள்ளன. அவை இரண்டு எழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை உள்ளன.

Ānaimalai --- *Āṉaimalai usage*

C.N. -- Cheṭṭi Nāṭu usage

Ceylon -- *Ceylon usage*

Mahārāṣṭra. -- Mahārāṣṭra usage

Pond. -- *Pondicherry usage*

Trav. -- *Travancore usage*

Tranquebar. -- Tranquebar usage

இவற்றில் Cd - *Cd*, Cg - *Cg*, Cm – *Cm*, Ct –*Ct*, Madu –*Madu*, N.A – *N.A*, Pd – *Pd*, Pudu – *Pudu*, Rd – *Rd*, S.A – *S.A*, Sm – *Sm*, Tj –*Tj*, Tn – *Tn*, Tp –*Tp*, Loc – *loc* என ஒரேமாதிரியான எழுத்துக்களில் பதினைந்து குறிப்பான்கள் காணப்படுகின்றன. அவை:

Cd. -- Cuddappah

Cd. -- *Cuddappah usage*

Cg. -- Chingleput

Cg. -- *Chingleput usage*

Pd. -- Pudukkottai

Pd. -- *Pudukkottai usage*

S.A. -- South Arcot

S.A. -- *South Arcot usage*

மேற்கண்ட குறிப்பான்கள் ஒரே எழுத்தில் குறிக்கப்பட்டிருந்தாலும் ஒன்று பெரிய எழுத்திலும் மற்றொன்று சாய்வான எழுத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொடுக்கப்பட்டிருப்பது அகராதியை நோக்குபவர்கள் அவற்றைப் பிரித்து உணர்ந்து கொள்ளப் பயனுடையதாக உள்ளது. ஆனால் அதற்கான காரணம் அகராதி உருவாக்கத்தில் கொடுக்கப்படவில்லை.

ஜாதி, குழுக் குறிப்பான்கள்

ஒரு சமூகத்தில் பல்வேறு ஜாதியைச் சேர்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து வாழும் சூழலிலும் அவரவர் ஜாதிக்கென்றே ஒருவகையான பேச்சு மொழிநடை வேறுபடும். இத்தகைய வேறுபாட்டை ஜாதி வழக்கு எனலாம். ஜாதிப் பெயர்க் குறிப்பான்களாக இருபத்து நான்கு குறிப்பான்கள் உள்ளன. இக்குறிப்பான்கள் அனைத்தும் தமிழகத்தில் வழங்கப்படும் ஜாதிப் பிரிவுகளாகும். இவை மூன்று எழுத்து முதல் பத்து எழுத்து வரை உள்ளன.

Brāh. -- Brāhmin usage

Iruḷar. -- Iruḷar usage

Kōmuṭṭi -- kōmuṭṭi usage

Parava. -- Paravar usage

Pulaiya. -- Pulaiyar usage

மேற்கண்ட ஜாதி, குழுக் குறிப்பான்களை வட்டார வழக்குக் குறிப்பான்களுடன் சேர்த்துக்கொள்ளலாம். ஏனென்றால் ஒவ்வொரு வட்டாரத்திலும் பல்வேறு சாதிகளைச் சார்ந்த மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் பேசும் மொழி வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுவது இயல்பு. எனவே இதனையும் வட்டார வழக்கு எனலாம்.

மொழிக் குறிப்பான்கள்

தலைச்சொல் எம்மொழிக்குரிய சொல் என்பதைக் குறிப்பது மொழிக் குறிப்பானாகும். மொழிக்குறிப்பானாகத் தமிழ்ப் பேரகராதியில் முப்பத்தேழு குறிப்பான்கள் உள்ளன. அவை ஓரெழுத்து முதல் ஏழெழுத்து வரை உள்ளன.

Arab. -- Arabic

Chin. -- Chinese

E. (after the mark <) -- English

It. -- Italian

Hind. – Hindustani

Hindi -- Hindi

K -- Kanarese

O.K. – Old Kanarese

Malay. -- Malay language

U. -- Urdu

இதில் H என்னும் ஓர் எழுத்துக் குறிப்பான் எந்த மொழிச் சொல்லுக்கும் பயன்படுத்தப்படாததால் Hindi என்னும் மொழிச் சொல்லுக்கு H என்னும் குறிப்பானையே பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் Hindi என்னும் ஐந்து எழுத்துக் குறிப்பானே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல் K -- Kanarese என்ற சொல் கன்னட மொழியைக் குறிக்கும் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. எந்த அகராதியிலும் இது கன்னட மொழியைக் குறிக்கும் என்றும் இல்லை. இதனால் அகராதியினைப் பயன்படுத்துபவருக்குப் பெரிதும் சிக்கல் ஏற்படுகின்றது.

தமிழ் அகராதிகளில் மொழிக்குறிப்பான்கள் பிறமொழிச் சொற்களாயின் நட்சத்திரக் குறியிடப்பட்டு அதன் சொல் மூலங்களும் தரப்படும்.

பெப்ரீஸியன் அகராதியில் வடசொல் முதலிய அந்நியச் சொற்கள் உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டன. இம்முறையையே முதலில் லெக்ஸிகன் கைக்கொண்டு வடமொழி மூலச்சொல்லையும் கொடுத்துவந்தது [3].

ஆனால் தமிழ்ப் பேரகராதியில் இவை முதல் 508 பக்கங்களுக்கு மட்டுமே தரப்பட்டுள்ளன. பல்வேறு தரப்பினரிடையே இருந்து இதற்கு எதிர்ப்பு வந்த காரணத்தினால் நட்சத்திரக் குறியிட்டுக்காட்டும் நிலை கைவிடப்பட்டதாக இதன் பதிப்பாசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

இலக்கணக் குறிப்பான்கள்

தலைச்சொல்லின் இலக்கணப் பொருளைக் குறிப்பிடும் குறிப்பான்களே இலக்கணக் குறிப்பான்களாகும். இலக்கணக் குறிப்பான்களாக மொத்தம் ஐம்பத்தெட்டு குறிப்பான்கள் உள்ளன. இவை ஓரெழுத்து முதல் ஏழெழுத்து வரை காணப்படுகிறன.

abl.	-- Ablative
cf.	-- Compare
fin.v	-- finite verb
(Gram.)	-- Grammar
n.	-- Noun
pref.	-- Prefix
Syn.	-- Synony
adj.	-- adjectival
adj.	-- adjective
adv.	-- adverbial
adv.	-- adverb
conj.	– Conjunctional
conj.	-- Conjunction

இவற்றிலும் adj – *adj,* adv – *adv,* conj – *conj* என்ற மூன்று குறிப்பான்கள் மட்டும் ஒரே எழுத்துக்களில் குறிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஒன்று பெரிய எழுத்திலும் மற்றொன்று சாய்வான எழுத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன.

சமய, தத்துவக் குறிப்பான்கள்

நம் நாட்டில் பல்வேறு சமயங்கள் தத்தம் சமயக் கொள்கைகளையும் தத்துவக் கருத்துக்களையும் நிலைநாட்டி வளர்ந்து வந்தன. அத்தகைய சமயம், தத்துவம் சார்ந்த குறிப்பான்களாக இருபது குறிப்பான்கள் இதில் உள்ளன. அவை இரண்டெழுத்து முதல் ஏழெழுத்து வரை காணப்படுகிறன.

(Advaita.)	---	Advaita Philosophy
Bible.	--	Bible usage
Chr.	--	Christian usage
Muham.	--	Muhammadan usage
(Šaiva.)	--	Šaiva Philosophy

இவற்றில் Vaiş .-- Vaişņ. , (Vaişņ.) என வைணவ சமயத்திற்கு மட்டும் மூன்று குறிப்பான்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Vaiş.	--	Vaişņava usage
Vaişņ.	---	Vaişņava usage
(Vaişņ.)	--	Vaişņava Philosophy

துறைக் குறிப்பான்கள்

இலக்கியம், கட்டடக் கலை, வானவியல், ஜோதிடம், தாவரவியல், பொறியியல், நீதி, கணிதம், மருத்துவம், இசை, தொன்மம் முதலான பல்வேறு துறைகளைக் குறித்து வழங்கப்படும் சொற்களைக் குறிக்கும் குறிப்பான்களைத் துறைக் குறிப்பான்கள் எனலாம். துறைக் குறிப்பான்களாக இருபத்து மூன்று குறிப்பான்கள் இதில் உள்ளன. இவை இரண்டு எழுத்து முதல் ஒன்பது எழுத்து வரை உள்ளன.

(Akap.)	---	Akapporuļ
(Astrol.)	---	Astrology
(Engin.)	---	Engineering
(Med.)	---	Medicine
myth.	---	mythology
palmistry	---	Palmistry
(Puṟap.)	---	Puṟapporuļ

பொதுக் குறிப்பான்கள்

பொதுக் குறிப்பான்களாகத் தமிழ்ப் பேரகராதியில் மொத்தம் எழுபத்து இரண்டு குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் உள்ள குறிப்பான்களை ஊர்,

மொழி, இலக்கணம், துறை, சமயம், தத்துவம், ஜாதி என்னும் பிரிவுகளில் தொகுக்க முடியாததால் இவற்றைப் பொதுக் குறிப்பான்களாகக் கொள்ளலாம். இவற்றில் ஒரெழுத்துக் குறிப்பான் முதல் எட்டெழுத்துக் குறிப்பான்கள் வரை காணப்படுகின்றன.

C.	---	Century
Ed.	--	Edition
fam.	--	Familiar
instr.	--	Instrumental
euphem.	--	Euphemistically
contrac.	--	Contraction
demons.	--	Demonstrative
demonstr.	--	Demonstrative

இவற்றில் Demonstrative என்னும் சொல்லுக்கு மட்டும் demons, demonstr. என இரண்டு குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பான்களைத் தருமுறை

குறிப்பான்களைக் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே தருதல் வேண்டும். பதிவுச் சொல்லை அடுத்தும் பொருட்பகுதியிலும் என இரண்டு இடங்களில் இவை தரப்பெறும். ஒரு சொல் ஒரு பொருளை மட்டுமே உடையதாய் இருக்கும் நிலையிலும் ஒரு சொல்லின் பொருட்கள் குறிப்பிட்ட துறை சார்ந்தனவாய் இருக்கையிலும் பதிவுச்சொல்லை அடுத்து தரப்பெறும்.

அக்கினி பஞ்சகம்	n.	**(Astrol)**
அகச்சமயம்	n.	**(Saiva)**
அகந்தரக்கொட்டு	n.	**(Dram.)**
அகந்தரகாந்காரம்	n.	**(Mus.)**

எனக் குறிப்பான்கள் தரப்பெறும். இவையன்றி பல்பொருட் சொற்களின் குறிப்பிட்ட பொருள் குறிப்பிட்ட வட்டாரம், துறை சார்ந்தனவாய் இருக்கையில் பொருளுக்கு முன் அல்லது இறுதியில் கீழ்க்கண்டவாறு தரப்பெறும்.

உயிர் [2] n. 4. (**Astrol**) Ascedant , sign of nativity ;
சன்மலக்கினம்.

ஏவல் n. 7 **(Gram)** Imperative finitive verb ;
ஏவல் வினைமுற்று 9. Propitious chirpings of a
Lizard ; பல்லிக்கொட்டுகை ***Loc.***

இந்தண்டை adv. On this side ; இப்பக்கம் ***Colloq***

பதிவில் குறிப்பான்களைத் தருவதற்கான இடம் அகராதிக்கு அகராதி வேறுபடும். இதைப் போலவே குறிப்பான்களின் வகைக்கேற்பவும் அவை வேறுபட்ட இடங்களில் தரப்பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில்,

அக்கப்போர் n.1. Affray, Scuffle, கலகம் ***Colloq***

2. Worry , trouble ; உபத்திரவம் ***Colloq***

அக்கா n. 2. Goddess of evil, as elder sister of Lakshmi; மூதேவி ***Vul.***

சன்மி n. Land-Owner, நிலச்சுவான்தார் ***Nan***

எனக் குறிப்பான்கள் பொருளின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இவ்வாறு பொருளிறுதியில் தரப்பட்ட குறிப்பான்கள் சாய்வெழுத்துக்களில் தரப்பட்டுள்ளன. துறை தொடர்பான குறிப்பான்கள் பதிவுச்சொல்லை அடுத்து அல்லது பொருளுக்கு முன் அடைப்புக்குறிக்குள் தரப்பெறும்.

சார்பு n .8 **(Buddh)** Causes of misay 12 in number….

சமாதி n. 1. **(Yoga)….**

சமாதி சட்கசம்பத்து n. **(Phil)….**

என அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. ஓரே பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குறிப்பான்கள் வருகையில்

ஆத்துக்காரர் n. 2. Husband கணவன் ***Brah. Colloq***

அம்மு n. Boiled rice; சோறு ***Loc. Nurs.***

என அடுத்தடுத்துத் தரப்பட்டுள்ளன.

விளக்கக் குறிப்புகளைப் போலவே குறிப்பான்களும் இடத்தை மீதப்படுத்தும் அகராதிக் கூறுகளாகும். எனவே அதற்கேற்ற வகையிலேயே பதிவில் குறிப்பான்கள் தரப்படவேண்டும். இருமொழி அகராதியாய் இருந்தாலும் இலக்குமொழி அல்லது மூலமொழி இரண்டில் ஏதாவது ஒன்று மட்டும் குறிப்பான்களைத் தருதல் போதுமானது. [4]

குறிப்பான்களை இடம், காலம், மதம், வழக்கு, தகுதி, துறை எனப் பல்வேறு வகையில் பாகுபடுத்திக்கொண்டு குறிப்பிட்ட குறிப்பான்களைக் குறிப்பிட்ட இடத்திலேயும் குறிப்பிட்ட நெறியிலேயும் தருதல் வேண்டும். ஏனைய பதிவுக் கூறுகளினின்றும்

வேறுபட்டுத் தெரியும் வகையில் வெவ்வேறு எழுத்துக்களில் தரலாம். துறைக் குறிப்பான்களைப் பொருளுக்கு முன் தந்துவிடுவது எனவும் எஞ்சிய வழக்குக் குறிப்பான்களைப் பொருட்களின் இறுதியில் தருவது எனவும் தீர்மானித்துக் கொண்டால் இருவேறு இடங்களில் தருவதைத் தவிர்த்துவிட வேண்டும். வழக்குக் குறிப்பான்களைப் பொருளின் இறுதியில் தருவதென முடிவெடுத்தால்,

சீட்டுநாட்டு n. 1. Note, bond; ஆதரவுமுறி ***Colloq***

சிற்றுள் n. Stone. room in a house ; உக்கிராண அறை ***Colloq***

எனப் பொருள் முடிவிலும் முதலில் தருவதென்றால் கீழ்க்கண்டவாறும் தரலாம்.

தாத்தா n. **Colloq**. 1. Grand fother ,

சமாதியடைதல் n. intr. **Colloq.** 1. To sit in yogic contemplation; யோகநிலையில் அமர்தல்.

இவ்வாறல்லாமல் பொருளின் முதலில் சில இடங்களிலும், பொருளின் இறுதியில் சில இடங்களிலும் தரப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

பல்பொருட் சொற்கள் இடம்பெறும்பொழுது பொருளுக்கு முன்னும் பின்னும் என இரு இடங்களில் குறிப்பான்கள் தரப்படுகின்றன.

கட்டை n. 5. கடலுள் வலையிருக்குமிடங் காட்டும் குற்றி. **Loc.** 9. பற்றாதது **colloq.** 10. குறைவு **colloq.** 12. மயிர்க்கட்டை Colloq. 14. கழற்சிக்காய் ஆட்டத்தின் முதற் தொகை loc. 17. ஆர்மோனியத்தின் இசையெழுப்பும் கருவி. **Mod.** 18. ஆணை loc. 21. மைல் **(J)** 22. செப்புக்கட்டை **loc**

எனத் தரப்படும் நிலையில் ஒத்த குறிப்பான்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தாலும் ஒவ்வொரு பொருளிலேயும் தருதல் வேண்டும். மூன்று நான்கு பொருட்களுக்கும் சேர்த்து ஒரே இடத்தில் தர இயலாது. இடத்தை மீதப்படுத்த வேண்டுமாயின் இத்தகைய பதிவின் இறுதியில் [9, 10, 12, colloq. 5, 14, 18, 22 Loc.] என உரிய பொருள் எண்களுடன் அடைப்புக்குறிக்குள் தொகுத்தும் தரலாம்.[5]

தமிழ் அகராதிகளில் பல்வேறு வகையான குறிப்பான்களைப் பயன்படுத்துவதற்குரிய நெறிமுறைகளாக,

- இலக்கணக் குறிப்பான்கள் தலைச்சொல்லை அடுத்து இடம்பெறும். தலைச்சொல்லுக்கு எழுத்துப்பெயர்ப்பு தந்தால் அது இலக்கணக் குறிப்பை அடுத்துத் தரப்பட வேண்டும்.
- தலைச் சொல்லுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட இலக்கணக் குறிப்பான்கள் இடம் பெற்றால் அவை பொருட்பகுதியில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரப்பட வேண்டும்.
- தலைச்சொல்லின் இலக்கணத்திற்கும் பொருளுக்கும் ஒரு குறிப்பான் பொருந்துமாயின் அக்குறிப்பானை முதலில் இலக்கணக் குறிப்பானுக்கு முன்னும் தலைச் சொல்லுக்குப் பின்னும் தர வேண்டும்.
- தலைச்சொல் ஒரு குறிப்பானை மட்டும் பெற்றிருப்பின் அது இலக்கணக் குறிப்பானை அடுத்து வழங்கப்பட வேண்டும்.
- ஒரு தலைச்சொல் இரண்டு இலக்கணக் குறிப்பான்களைப் பெற்றிருந்தால் ஒரு இலக்கணக் குறிப்பானைத் தலைச்சொல் பகுதியிலும் மற்றொரு இலக்கணக் குறிப்பானைப் பொருள் எண்ணின் பின்பும் பயன்படுத்த வேண்டும்.
- குறிப்பானை ஒரு சொல்லின் ஒரு பொருளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமாயின் பொருள் எண்ணை அடுத்தும் பொருளுக்கு முன்னாலும் குறிப்பிட வேண்டும்.
- தலைச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பானுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களும் அப்பொருள்களுக்குக் கிளைப்பொருள்களும் இருந்தால் அக்கிளைப்பொருள்களுக்கும் குறிப்பான் தேவைப்படின் பொருள் எண்களை அடுத்துக் கிளைப்பொருள் எண்ணுக்கு முன்னால் கொடுக்கப்பட வேண்டும்.
- கிளைப்பொருள்களுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் குறிப்பான் தேவைப்பட்டால் கிளைப்பொருளின் எண்ணுக்கும் பொருளுக்கும் இடையில் குறிப்பான் தரப்பட வேண்டும்.

> ஒரு சொல்லுக்கும் பொருளுக்கும் இரண்டு குறிப்பான்கள் தேவைப்பட்டால் இரண்டு குறிப்பான்களையும் வரிசையாக ஒன்றை அடுத்து ஒன்றாக வழங்க வேண்டும் [6]

என எச். அக்னிபுத்திரன் குறிப்பிடுகிறார்.

மேற்கூறியபடியே குறிப்பான்களைத் தருமுறையில் வரையறுத்த நெறிமுறைகள் கையாளப்படவேண்டும். ஆனால் குறிப்பான் தருமுறையில் ஒரேமாதிரியான கொள்கைகளை எந்தவொரு அகராதியாளரும் கடைபிடிக்கவில்லை. இவை அகராதி இயல்பையும் உருவாக்கக் குழுவின் முடிவையும் பொறுத்து வேறுபடுகின்றன. தமிழ் இருமொழி அகராதிகளில் குறிப்பான்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. எனவே

குறிப்பான்களைத் தருமுறையில் நிலையான நெறிமுறைகளை உருவாக்கி அவற்றை அகராதி தொகுப்போர் பின்பற்றவேண்டும்.

குறியீடுகள் (Signs)

ஒரு மொழியில் எழுத்துக்களின் வாயிலாக உருவாக்கப்படும் சொற்களுக்கு எவ்வகை முக்கியத்துவம் உள்ளதோ அதேயளவு முக்கியத்துவம் அவ்வகைச் சொற்களைக் குறிக்கும் குறியீடுகளுக்கும் உண்டு. குறிப்பிட்ட ஒரு சொல்லைக் குறிக்கப் பயன்படும் ஒரு வடிவத்தைக் குறியீடு எனலாம். இது சுருக்கமாகவும் அதே நேரத்தில் குறித்த சொல்லின் பெயரை எளிதில் யாவரும் உணரும் வண்ணமும் அமையவேண்டும். இது தனி எழுத்தாகவோ அல்லது உடுக்குறியாகவோ இருக்கலாம்.

குறியீடு என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில்,

> குறியீடு -- Name given to a think or
> concept. குறியாக இட்டாளும் பெயர். ப.1051

என விளக்கம் தரப்பட்டுள்ளது.

> அரிஸ்டாட்டில் எனும் தத்துவ அறிஞர்தான் முதன்முதலாக குறியீடுகளை அளவையியலில் பயன்படுத்தினார். நவீன அளவையியலில் குறியீடுகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், அதனைக் குறியீட்டு அளவையியல் அல்லது கணித அளவையியல் எனலாம். அனைத்துச் சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் குறியீடுகளே ஊடிழைகளாக இருக்கின்றன. அவை சிந்தனைக்கும் அறிவியலுக்கும் உயிர்நாடியாக விளங்குகின்றன [7]

எனச் சார்லசு சான்டர்சுபியர்சு கூறுகிறார்.

குறியீட்டு அளவையியல் மொழியின்மூலம் பெறும் பொருளடங்கிய சொற்றொடர்களைக் கொண்டல்லாமல், குறியீடுகளைக் கொண்டே விளக்குவதாகும். அது அனைத்து அனுமானங்களையும் குறியீடுகளாக மாற்றி அவைகளின் ஏற்புடைமையை ஆராய்கின்றது.

> குறியீடுகளின் மூலம் சிக்கலான அனுமானங்களை சுருக்கமாகவும், ஐயத்திற்கு இடமில்லாமல் மிகவும் தெளிவாகவும் கூறமுடிகிறது. [8]

என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு சொல்லைக் குறிக்க ஒரு சொல்லின் முதல் எழுத்தோ, முதல் எழுத்தோடு இரண்டாம் எழுத்துச் சேர்ந்தோ, அச்சொல்லின் நடுவெழுத்து முதல் எழுத்தோடு

இணைந்தோ, அல்லது முதல் எழுத்தோடு இறுதி எழுத்து இணைந்தோ குறியீடு உருவாக்கப்படும்.

குறியீடுகளும் உடுக்குறிகளும் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக இயற்பியல், வேதியியல், வணிகவியல், அகராதி போன்ற துறைகளில் குறியீடுகளும் கணிதத் துறையில் உடுக்குறிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

வேதியியல் துறையில் “ஹைட்ரஜன்” என்னும் சொல்லைக் குறிக்கும் குறியீடாக “H” என்னும் ஒற்றை எழுத்துக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். இதில் ஹைட்ரஜன் என்னும் ஆங்கிலச் சொல்லின் முதலெழுத்தைக் கொண்டு இக்குறியீடு பயன்படுத்தப்படுகிறது. “இரும்பு” என்னும் சொல்லைக் குறிக்க “Fe” என்னும் குறியீடு பயன்படுத்தப்படுகிறது. இதன் அறிவியல் பெயர் “FERUM” என்பதால் அதன் முதல் இரண்டு எழுத்துக்களைக் கொண்டு “Fe” என்னும் இரண்டு எழுத்துக் குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர்.

O -- Oxyaen

Hcl -- Hydro Chloric acid

(வேதியியல்)

Ω -- Ohm

β -- Beta

λ -- Lambda

(இயற்பியல்)

A/c -- Account

SB -- Savings

CA -- Current Account

(வணிகவியல்)

p. -- page

ps. -- pages

& -- and (அகராதி)

\+ -- கூட்டல்

_ -- கழித்தல்

X -- பெருக்கல்

= -- சமம்

(கணிதம்)

முதலான குறியீடுகளும் உடுக்குறிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

அகராதிகளில் இத்தகைய நிறுத்தற்குறிகளும் குறியீடுகளும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இராட்லர், ஜி.யு. போப், வின்சுலோ ஆகியோரது அகராதிகளில் குறியீடுகளின் பயன்பாடு அதிகமாக உள்ளது.

புறோயென்சா அகராதியில் குறியீடுகளின் பயன்பாட்டைக் காணமுடியவில்லை. இதில் தலைச்சொல்லிற்கும் பொருளுக்கும் இடையில் முற்றுப்புள்ளி (.), இடைவைப்புக்குறி (-) ஆகியன மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதம்புதல் - Respineamenco, Vifupra

அப்பாயி - Auo, may do pay.

இராட்லர் அகராதியில் பல்வேறு குறியீடுகள் கையாளப்பட்டுள்ளன. கோபுரக்குறியீடு ({}), பிறைக்குறியீடு (), முக்காற்புள்ளி (;), காற்புள்ளி (,) போன்றவை இடம்பெற்றுள்ளன.

அச்சு ; Sub. The same as உயிர், a vowel …

அக்கியானம் ; Sub.(inelegant : the elegant expression is அஞ்ஞானம், which see) ignorance, folly; (among Christians) heathenism.

இவற்றைப் போலவே எல்லா அகராதிகளிலும் பல்வேறுவிதமான குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல் தமிழ்ப் பேரகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகளைக் காண்போம்.

தமிழ்ப் பேரகராதியில் குறியீடுகள்

குறியீடுகள் என்பவை சுருக்கமாகவும் அதேநேரத்தில் ஒரு எழுத்தாகவோ, அல்லது ஒரு வடிவமாகவோ இருப்பது சிறப்பாகும். அத்தகைய குறியீடுகள் இப்பேரகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை:

< இது, சொல்லின் விற்பத்தியைக் குறிப்பது.

< denotes 'from' ; i.e., derived from

\+ இது நிலைமொழியோடு தொடர்ந்துவரும் மொழியைக் குறிப்பது.

\+ denotes 'and' ; i.e., compounded with what follows, viz., a Word or a suffix.

= இது, சமம் அல்லது விவரம் குறிப்பது.

= denotes ‘equivalent with’, ‘the same as’ ‘equal to’.

◡ அநுதுரிதம்

o துரிதம்

ı இலகு

◡◡ நிரை

S குரு

புலுதம்

\+ காகபதம்

--- நேர்

மேற்கண்ட குறியீடுகள் அகராதியில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சில உதாரணங்களின் வழி அறியலாம்.

வண்புகழ் < வண் -- மை +.

வண்மை < வள்

வணக்கம் < வணங்கு.T.vangu, K. baggu, M. vanakkam.

வட்டி^{2} 3.A measure of capacity 1 nali = 1 pati;

வராகனெடை < id. +. Weight of a pagoda, a unit of weight

வியங்குலம் < vyangya. A linear measure = 1/60 finger’s breadth;

மேற்கூறிய உதாரணங்களில் < + -- [ ] = முதலான குறியீடுகள் பேரகராதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெப்ரீஸியஸ் (Fabricius) அகராதியில் வடசொற்களையும் அந்நியச் சொற்களையும் குறிக்க உடுக்குறியைப் பயன்படுத்தியதைப்போல் இதிலும் தலைச்சொல்லின் முன் (*) என்ற உடுக்குறியீடு முதல் தொகுதியில் 506 பக்கம் வரை பயன்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பால் இவ்வாறு குறியிட்டுக் காட்டப்படும் நிலையைக் கைவிட்டதாக இதன் பதிப்பாசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகையில்,

வடமொழி தமிழ்மொழி என்ற வேற்றுணர்ச்சியற்றவர்களும் எளிதில் தெரிந்து கொள்ளுமாறு இவ்வுடுக்குறி செய்துவிட்டமை பெரிய தொந்தரவாய் முடிந்தது. வடமொழி எதிர்ப்புக் கூக்குரல் ஓலமிட்டு அழத்தொடங்கியது. இதற்குப் பரிகாரமாக, லெக்ஸிகன் உடுக்குறியை எகரச் சொற்கள் முதல் ஒழித்துவிட்டது. [9]

என்று குறிப்பிடுகிறார்.

தொகுப்புரை

- தமிழ்ப் பேரகராதியில் **இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்களும் பதினொரு குறியீடுகளும்** கையாளப்பட்டுள்ளன.
- அகராதியைப் பயன்படுத்துபவர்களுக்கு எவ்விதக் குழப்பமும் ஏற்படாமல் இருக்கவும் ஒரே எழுத்தில் குறிக்கப்பட்டுள்ள குறிப்பான்களை வித்தியாசப்படுத்தவும் ஒரு எழுத்து பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் சாய்வாகவும் தரப்பட்டுள்ளன.
- K -- Kanarese என்ற சொல் கன்னட மொழியைக் குறிக்கும் என்று இதில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எந்த அகராதியிலும் இது கன்னடமொழியைக் குறிக்கும் என்றும் இல்லை. இதனால் இச்சொல்லைப் புரிந்து கொள்வதில் பெரிதும் சிக்கல் ஏற்படுகிறது.
- மொழிகளைக் குறிக்கும் குறிப்பானில் Gondi என்பதற்கு G என்றும், Telugu என்பதற்கு T என்றும், Urdu என்பதற்கு U என்றும் குறித்தாற்போல் Hindi என்பதற்கு H என்னும் ஒரு எழுத்துக் குறிப்பானையே பயன்படுத்தியிருக்கலாம். அதுபோல் Slang என்னும் கொச்சை வழக்குச் சொல்லுக்கு Sl. என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானைப் பயன்படுத்தியிருக்கலாம். ஏனென்றால் H என்னும் ஓர் எழுத்துக் குறிப்பானும் Sl என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானும் இதில் குறிப்பானாக இல்லை.
- குறிப்பான்களை இடம், காலம், மதம், வழக்கு, தகுதி, துறை எனப் பல்வேறு வகையில் பாகுபடுத்திக்கொண்டு குறிப்பிட்ட குறிப்பான்களைக் குறிப்பிட்ட இடத்திலேயும் குறிப்பிட்ட நெறியிலேயும் தருதல் வேண்டும். ஏனைய பதிவுக் கூறுகளினின்றும் வேறுபட்டுத் தெரியும் வகையில் வெவ்வேறு எழுத்துகளில் தரலாம். துறைக் குறிப்பான்களைப் பொருளுக்குமுன் தந்துவிடுவது எனவும் எஞ்சிய வழக்குக் குறிப்பான்களைப் பொருட்களின் இறுதியில் தருவது எனவும் தீர்மானித்துக்கொண்டால் இருவேறு இடங்களில் தருவதைத் தவிர்த்துவிட வேண்டும். பொருளின் முதலில் சில இடங்களிலும், பொருளின் இறுதியில் சில இடங்களிலும் தரப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- தமிழ் இருமொழி அகராதிகளில் குறிப்பான்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. குறிப்பான்களைத் தருமுறையில் நிலையான நெறிமுறைகளை உருவாக்கி அகராதி தொகுப்போர் அவற்றைப் பின்பற்றவேண்டும்.

குறிப்புகள்

1. ஜெயதேவன்.வ., 1985, தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு. ப.105
2. Singh. R. A., An Introduction to the Lexicography. P.153
3. வையாபுரிப்பிள்ளை.எஸ்., 1982, தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி–II ப - 440.
4. மாதையன். பெ., 1997 அகராதியியல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம். ப-394
5. மேலது, ப. 395
6. சித்திரபுத்திரன், எச்., தமிழ் அகராதியியல், பக் - 111--117
7. வாழ்வியல் களஞ்சியம், 1991, தொகுதி VII, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், ப.827
8. மேலது, ப.827
9. வையாபுரிப்பிள்ளை எஸ்., 1982, தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி II, ப - 440

இயல் : மூன்று

3. வட்டார வழக்குப் பதிவுகள்

> "மொழியை மக்கள் உருமாற்றம் செய்கிறார்கள். இவ்வுலகின் பெரிய அறிஞர்கள் அவற்றை வரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறார்கள். நாம் பெரிதும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்".[1] -- மூாக் ப்ரெவர்.

மொழி என்பது பேசுவதற்கானது. கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கானது. ஒரு பொருளை, இடத்தை உச்சரிப்பதற்கானது. புரிந்துகொள்வதற்கானது மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் வாழ்க்கைமுறைதான் மொழியை உருவாக்குகிறது. மொழி ஒருபோதும் ஒரு வாழ்க்கைமுறையை உருவாக்குவதில்லை.

மொழி பன்னெடுங்காலம் அழியாமல் வளர்வதற்கு அதன் சொல்வளமே முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களின் இயல்பான பேச்சுமொழியும் ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த மக்களின் வட்டாரமொழியும் ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களின் சாதி வழக்கும் உலக வழக்கும் இலக்கிய வழக்கும் மொழியின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிக்கின்றன.

மொழியின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணம் சமுதாயமாகும். சமுதாயத்தால் வளர்ந்து அச்சமுதாயத்தையே வளர்ப்பது மொழியாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலக்கியமும் இலக்கணமும் உடைய தமிழ்மொழியின் இலக்கிய வளமைக்குக் காரணம்,

> ''இலக்கியத் தமிழ் வளமான சொற்செல்வம் பெற்றது. இதற்குக் காரணம் என்ன? இலக்கியத் தமிழ், இடைவிடாமல் பிரதேச வழக்கு, பேச்சு வழக்கு, குறுமொழி, குழூஉக்குறி, பல்வேறு சாதியாரின் பேச்சு வழக்கு முதலியவற்றை ஏற்றுக்கொண்டே வந்திருக்கிறது. இதுவே இவ்வளத்திற்குக் காரணம்'' [2]

என்று கமில் ஸ்வெலபில் குறிப்பிட்டுள்ளார்.

மொழியும் வட்டாரமொழியும்

மொழி மனிதன் உருவாக்கிய அரிய கலை. எண்ணத்தைப் புலப்படுத்தக் கண்டுபிடித்த ஒலி வடிவம். உலக உயிரினங்கள் பலவற்றிலிருந்து மனித இனத்தை வேறுபடுத்திக் காட்டுவது அவன் பேசுகின்ற மொழியேயாகும். பிற உயிரினங்களைக் காட்டிலும் மனித இனம் உயர்ந்தது, சிறந்தது என்பதைக் காட்டும் வெளி அடையாளமாக அமைவது அவன் படைத்துக்கொண்ட மொழியேயாகும். அது மட்டுமல்லாது ஓர் இனத்தை, ஒரு சமூகத்தை வகைப்படுத்திக் காட்டும் குறியீடாக மொழி அமைகிறது.

ஒரு சமூகத்தில் அடங்கிய அனைவரும் ஒருவரோடொருவர் தம் கருத்தைப் பகிர்ந்து கொள்ளப் பயன்படுத்தும் கருவியே மொழியாகும். மனித இனம் தனித்து வாழ்ந்துவிட இயலாது. தான் சார்ந்த சமுதாயத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு வாழ மொழி அவசியமாகிறது. மொழி என்றதும் எழுத்து வடிவத்துடன் இலக்கிய, இலக்கணங்களை உடையதுதான் என்னும் நினைவு அனைவருக்கும் வரும். எழுத்து வடிவமில்லாது பேச்சு வழக்கில் மட்டும் பயின்று வரும் ஆயிரக்கணக்கான பழங்குடி மொழிகளும் பல வட்டார மொழிகளும் தமிழ்நாட்டில் உள்ளன. ஒரு மொழி பரந்த பரப்பில் பேசப்படும்பொழுது அதில் வேறுபாடுகள் காணப்படுதல் இயற்கையாகும். இதனையே தொல்காப்பியர்,

> செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
> தம் குறிப்பினவே திசைச்சொல் கிளவி [3] என்கிறார்.

> தொல்காப்பியச் சான்றுகளிலிருந்து பதின்மூன்று பிரதேச மொழிகள் இருந்ததாகக் கருத முடிகிறது. இவற்றுள் ஒன்றை அவர் செந்தமிழ் என்று குறிப்பிடுகின்றார். மற்ற பன்னிரண்டு குறித்து அவர் பொதுவாகச் செந்தமிழ் நிலத்தை ஒட்டியிருக்கும் பன்னிரண்டு நிலங்களின் பேச்சு வகைகள் என்று பேசுகின்றார். செந்தமிழ் நிலத்தில் பேசப்பட்ட சொற்களை இயற்சொற்கள் என்றும் மற்ற பன்னிரண்டு நிலங்களில் பேசப்பட்ட சொற்களைத் திசைச்சொல்[4] என்றும் குறிப்பிடுவதாகக் கமில் ஸ்வெலபில் குறிப்பிடுகின்றார்.

மக்கள் சிறுசிறு குழுக்களாக வாழும்போது மலை, ஆறு, கடல் போன்ற இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்டு அவர்களிடையே அதிகத் தொடர்பின்றி வாழவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு மொழியைப் பேசுவோரிடையேகூட ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாகப் பேசக்கூடும். காரணம் ஒருவரைப்போல் மற்றவர் இருப்பதில்லை. ஆதலால் மொழி பேசுபவருக்குத் தகுந்தாற்போல் அமைகிறது. எனவே ஒரு தனி மனிதன் பேசும் பேச்சு வழக்கைத் “தனியாள் மொழி” (Idialect) என்பர்.

பேசுபவருக்கு ஏற்ப ஒரு மொழி வேறுபடுவது போல ஒரு வட்டாரத்தில் வாழ்பவர் ஒரு மொழியைப் பேசுகின்ற முறைக்கும் அதே மொழியை வேறொரு வட்டாரத்தினர் பேசுகின்ற முறைக்கும் வேறுபாடு தோன்றலாம். அவ்வேறுபாடு காரணமாக இரு வட்டார மக்களும் பேசுகின்ற மொழி வெவ்வேறு மொழி இல்லை. இரண்டும் ஒரே மொழிதான். அம்மொழி வெவ்வேறு வடிவங்களாக வெவ்வேறு வட்டாரத்தினர் பேசுவதாகக் கொள்ளலாம். இவ்வாறு பேசும் ஒருமொழியின் பல்வேறு வடிவங்களை அதன் கிளைமொழிகள் எனலாம். பல தனிமனிதப் பேச்சுவழக்கைக் "கிளைமொழி'' (Dialect) எனவும் கூறுவர். இத்தகைய கிளைமொழிகளை "வட்டார மொழிகள்" என்பர்.

> இயற்கை அமைப்புகளால் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. அப்பிரிவுகள் அரசாட்சியாலும் அமைவதுண்டு அல்லது அரசாட்சியால் நிலைப்படுத்தப்படுவதுண்டு. ஆனால் இயற்கை அமைப்பே பிரதானம். நிலத்தின் தன்மை, நீர்நிலைகள், வாழிடங்கள் ஆகியவற்றைப் பொறுத்து வேளாண்மை, தொழில்கள், வாழ்நிலைகள் அமைகின்றன. இப்படிப்பட்ட பகுதியையே 'வட்டாரம்' என்கிறோம்.[5]

> வட்டாரம் என்னும் சொல் பொதுத்தன்மை கொண்ட சிறு பகுதியைக் குறித்து இன்று சற்றே விரிந்த பொருளில், குறிப்பிட்ட நிலப்பரப்பு சார்ந்த பகுதியைக் குறிப்பதாக வழங்குகிறது. பொதுமொழியின் பெரும்பாலான தன்மைகளை உட்கொண்டும், வழங்கும் நிலப்பரப்பு சார்ந்த சிறப்புக் கூறுகளுக்கு ஏற்றவாறும் அவ்வட்டார மொழி அமைகிறது. சிறப்புக்கூறுகள் பெரும்பான்மை சொற்கள், உச்சரிப்பு ஆகியவற்றால் உண்டாகின்றன. பொதுமொழியிலிருந்து பொருள் அளவில் வேறுபட்டு நிற்கும் சொற்களையே வட்டாரச்சொல் [6] என்கிறோம்.

கிளைமொழிப் பாகுபாடு

பல கிளைமொழிகள் சேர்ந்து ஒரு மொழியை உருவாக்குகின்றன. இவற்றைப் பல்வேறு வகையாகப் பாகுபடுத்தலாம். தென்தமிழ்நாடு, வடதமிழ்நாடு, மேற்குத்தமிழ்நாடு, நடுத்தமிழ்நாடு முதலான தமிழக நிலப்பகுதிகளில் பேசப்படும் மொழியை அவ்வவ்வட்டாரக் கிளைமொழி எனக் கூறுவர். அவ்வாறே பிராமணர், வெள்ளாளர், நாட்டுக்கோட்டை நகரத்தார், படையாச்சி, கள்ளர் என அவரவர் சார்ந்த வகுப்பின் அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதனை "வகுப்புக் கிளைமொழி" அல்லது "சாதிக் கிளைமொழி" என்பர். அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்பப் பயன்படுத்தும் மொழியில் வேறுபாடு காணப்படும். அவ்வகையில் மீனவர்,

குயவர் முதலான தொழிலாளர்களின் அடிப்படையில் மொழியைப் பிரித்துக்காண்பதைத் "தொழில் கிளைமொழி" எனக் குறிப்பிடுவர்.

ஒலியனியல் மற்றும் சொல் வேறுபாடு ஆகிய கூறுகளின் அடிப்படையில் தமிழின் கிளைமொழிகளை ஆராய்ந்து நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரித்துள்ளார் கமில் சுவலபில்.[7] அவை:

1. வடக்குக் கிளைமொழி
2. கிழக்குக் கிளைமொழி
3. மேற்குக் கிளைமொழி
4. தெற்குக் கிளைமொழி

இவற்றுடன் இலங்கைத் தமிழையும் மற்றொரு பிரிவாகக் கொள்கிறார். மேலும் இவர் இலக்கியச் செந்தமிழ், நிலைபேறான பேச்சுவழக்கு, பிராமணர் பேச்சுவழக்கு, கொச்சைத் தமிழ் என மேலும் பலவகையாகப் பிரிக்கிறார். [8]

வடக்குக் கிளைமொழி

வடகிழக்குச் சென்னை, வடமேற்குச் செங்கல்பட்டு, வேலூர், சித்தூர், கிருஷ்ணகிரி, தென்னார்க்காடு முதலான பகுதிகளில் மக்கள் பேசும் பேச்சுவழக்கினை "வடக்குக் கிளைமொழி" என்பர். இப்பகுதியில் ஒரு காலத்தில் ஆர்க்காடு நவாப்பும் தெலுங்கு அரசர்களும் ஆண்டதால் இக்கிளைமொழியில் உருது, தெலுங்குச் சொற்களைக் காணலாம். இக்கிளைமொழியில் 'ழகரம்' 'யகரமாகவும்' , 'ளகரம்' 'ஸகரமாகவும்' மாறி வழங்கி வருகிறது. எனவே இக்கிளைமொழியை ''யகரக் கிளைமொழி'' [9] என்பர்.

கிழக்குக் கிளைமொழி

காவிரி டெல்டா பகுதி, திருச்சி, தஞ்சை, கரூர், புதுக்கோட்டை முதலான பகுதிகளில் வழங்கும் பேச்சுவழக்கினைக் "கிழக்குக் கிளைமொழி" என்பர். இது லகர, ழகர, ளகர ஒலியன்கள் வழங்கும் கிளைமொழியாகும். எனவே இதனை ''ழகரக் கிளைமொழி'' [10] என்பர்.

மேற்குக் கிளைமொழி

வடமேற்குச் சேலம், ஈரோடு, தென்மேற்குக் கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல் முதலான மாவட்டங்களில் வழக்கில் உள்ள பேச்சுத் தமிழினை "மேற்குக் கிளைமொழி" என்பர். தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகள் இக்கிளைமொழி வழங்கும் பகுதியில் பேசப்படுவதால், அம்மொழிகளின் தாக்கம் இதில் பெருமளவு காணப்படுகிறது. மேலும் நீலகிரி மாவட்டத்தில் தோடா, கோத்தா, இருளா, கசபா, பணியா, காட்டு நாயக்கா, பெட்டா, குறும்பா, பால்குறும்பா மற்றும் முள்ளுகுறும்பா முதலான பழங்குடி மொழிகளும் கன்னடத்தில் ஒரு கிளைமொழியான படகாவும் இங்கு பேசப்படுகின்றன. எழுத்துத் தமிழில் உள்ள லகரம், ணகரம், ழகரம் முதலான மூன்று ஒலியன்களும் இக்கிளைமொழியில் திரிந்து ''லகரமாக'' ஒலிக்கப்படுகின்றன. எனவே இக்கிளைமொழியை ''லகரக் கிளைமொழி'' என்றும் ''கொங்குநாட்டுத் தமிழ்'' [11] என்றும் வழங்குவர்.

தெற்குக் கிளைமொழி

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் வழங்கிவரும் பேச்சுவழக்கைத் ''தெற்குக் கிளைமொழி'' எனலாம். ளகர ஒற்றுமையாலும் ழகரம் இன்மையினாலும் படர்க்கைப்பன்மை வடிவத்தாலும் வேற்றுமை உருபாலும் இப்பேச்சுவழக்கு தனியொரு கிளைமொழியாக விளங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசப்படும் பேச்சுவழக்கை இக்கிளைமொழியின் ஓர் உட்பிரிவாகக் கொள்வர். இப்பேச்சு வழக்கில் அதிகமாக ''றகரத்தைக்'' காணலாம். எனவே இக்கிளைமொழியினை ''றகரக்கிளைமொழி'' என்பர். இம்மக்கள் பேசும் பேச்சுவழக்கினைக் கொண்டு இதன் சிறப்பியல்புகளைச் சுட்டிக்காட்டி இக்கிளைமொழியினை ''வட்டாரக் கிளைமொழி'' [12] என ஏசுதாசன் குறிப்பிடுகிறார்.

வட்டாரக் கிளைமொழி

தமிழில் வட்டார மொழி வழக்குகள், பெரும்பாலும் சொற்களை ஒலிப்பதிலேயே மாறுபடுகின்றன. உதாரணமாக, "இங்கே" என்ற சொல், தஞ்சாவூர்ப் பகுதிகளில் "இங்க" என்றும், திருநெல்வேலிப் பகுதிகளில் "இங்கனெ" என்றும், இராமநாதபுரம் பகுதிகளில் "இங்குட்டு" என்றும், யாழ்ப்பாணப் பகுதிகளில் "இங்கை" என்றும் வழங்கப்படுகின்றது.

பெரும்பாலான வட்டார மொழி வழக்குகளின் சொல் அகராதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை என்றாலும், சில வழக்குகள் பெரிதும் மாறுபடுகின்றன. தமிழின் பல சொற்கள் அன்றாட வழக்கில் இன்று தமிழகத்தில் பயன்படுத்தப்படுவதில்லை.

தமிழ்மொழி வழக்குகள் வட்டார அடிப்படையில மட்டுமல்லாது சாதி அடிப்படையிலும் வேறுபடும். பல சாதிகளுக்கெனத் தனியான பேச்சு வழக்குகள் இருந்து வந்தன. தற்போது சாதி மறுப்பு இயக்கங்களின் விளைவாக இவ்வேறுபாடுகள் மறைந்து வந்தாலும் ஒருவரின் பேச்சு வழக்கை வைத்து அவரின் சாதியைச் சில சமயங்களில் கணிக்க முடிகிறது.

> எத்னொலோக் (Ethnologue) என்ற உலக மொழிகள் பற்றிய பதிப்பு நிறுவனம், தமிழில் 22 வட்டார வழக்குகள் இருப்பதாகத் தெரிவிக்கிறது. அவை, ஆதிதிராவிடர், ஐயர், ஐயங்கார், அரவா, பருகண்டி, கசுவா, கொங்கர், கொரவா, கொர்சி, மதராஸி, பரிகலா, பாட்டு பாஷை, இலங்கைத்தமிழ், மலேயாத் தமிழ், பர்மாத் தமிழ், தென்னாப்பிரிக்காத் தமிழ், திகாலு, அரிஜன், சங்கேதி, கெப்பார், மதுரை, திருநெல்வேலி முதலானவை என்கிறது.[13]

ஒரு மொழி வழங்கும் நாட்டில் வட்டாரத்திற்கு வட்டாரம் அது வேறுபட்டுக் கிளைமொழிகள் உண்டாகின்றன. இவற்றை வட்டாரக் கிளைமொழி எனலாம். மக்கட்குப் பெயரிடுவதில் அம்மை, அப்பன், என்பனவற்றைப் பெயருடன் சேர்த்து அழகம்மை, மெய்யம்மை, தேனம்மை, வள்ளியம்மை, நாச்சியம்மை, அழகப்பன், மெய்யப்பன், தேனப்பன், வள்ளியப்பன், நாச்சியப்பன் எனச் செட்டிநாட்டுப் பகுதிகளில் கூறுவர். அதுபோல் ஒரே சொல் ஒரு பகுதியில் ஒரு பொருளும் மற்றொரு பகுதியில் வேறு பொருளும் தருவதைக் காணலாம். ‘‘பெண் பூப்பெய்தினாள்’’ என நெல்லையிலும், ‘‘சமைந்துவிட்டாள்’’ என விழுப்புரம், கடலூர் மாவட்டப் பகுதிகளிலும், ‘‘சடங்காகிவிட்டாள்’’ எனச் செட்டிநாட்டிலும், ‘‘திரண்டுவிட்டாள்’’ என வேலூர்,திருவண்ணாமலை மாவட்டப்பகுதிகளிலும் கூறுவர். இவ்வாறன்றி ‘‘மனுசியாகிவிட்டாள்’’, ‘‘ருதுவாகிவிட்டாள்’’, ‘‘புத்தியடைந்துவிட்டாள்’’ எனப் பலவகையாகப் பல்வேறு இடங்களில் கூறுவதும் உண்டு. அதேபோல் ‘அலைக்கழிக்கிறான்’ என்பதைக் ‘கிண்டல் செய்கிறான்’ என இராமநாதபுரத்திலும், ‘நாள் கடத்துகிறான்’ என விழுப்புரம், கடலூர் மாவட்டப் பகுதிகளிலும், ‘தொந்தரவு செய்கிறான்’ எனத் திருநெல்வேலியிலும் பல பொருள்படுமாறு வழங்குகின்றனர். ஒன்றைக் குறிக்க ஒரு பகுதியில் மட்டுமே வழங்கி வருவனவும் உண்டு. செட்டிநாட்டுப் பகுதியில் பந்தல் என்பது பிணநாட்பந்தலையும், தடுமன் என்பது நீர்க்கோழையையும், நடையன் என்பது செருப்பினையும் குறிக்கும்.

ஒரு மொழி வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்குச் சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும்கூட அவற்றிடையே ஒரு பொதுத்தன்மையைக் காணலாம். ஆனால் கிளைமொழிகளுக்குள் பெரும்பான்மை ஒற்றுமையும் சிறுபான்மை வேற்றுமையும் உண்டு. பேசுகின்ற இடத்தைப் பொறுத்து வட்டாரக் கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கும். ஒரு சொல்லை உச்சரிக்கும் வகையில் இடத்திற்கு இடம் இவை மாறுபடும். இவற்றையெல்லாம் கிளைமொழிகளின் கூறுகளாகக் கொள்ளலாம். இத்தகைய வட்டாரக் கிளைமொழி வழக்குகள் எவற்றையும் புறக்கணிக்கக் கூடாது.

தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகள்

தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குக் குறிப்பான்களாக எண்பத்து இரண்டு குறிப்பான்கள் உள்ளன. அவை பேரகராதியில் உள்ளவாறே இங்கு ஆங்கில எழுத்து வரிசைப்படி வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை:

வட்டாரம் (ஊர், நாடு, திசை, ஜாதி, குழு, பொது)

வ.எண்	குறிப்பான்கள்	விளக்கம்
1	*Ānaimalai*	*Ānaimalai usage*
2	*Bharata.*	Bharata usage
3	Brāh.	Brāhmin usage
4	*Cempaṭava.*	Cempaṭavar usage
5	*Colloq.*	Colloquial
6	*Child.*	Children's usage
7	C.N	Cheṭṭi Nāṭu usage
8	Cd.	Cuddappah
9	*Cd.*	*Cuddappah usage*
10	Cg.	Chingleput
11	*Cg.*	*Chingleput usage*
12	Cm.	Coimbatore
13	*cm.*	*Coimbatore usage*
14	Ct.	Chittoor
15	*Ct.*	*Chittoor usage*
16	Dial.	Dialectal
17	Dist.	District
18	E.	East
19	*Fr. In.*	French India usage
20	*Iruḷar.*	Iruḷar usage

21	Javan.	Javanese
22	*Kaḷḷar.*	kaḷḷar usage
23	*kāṭar.*	kāṭar usage
24	*Kōmuṭṭi*	kōmuṭṭi usage
25	Kodai.	Kodaikanal usage
26	*Kuṟava.*	Kuṟava usage
27	*Loc.*	*Local usage*
28	Ma.	Madras
29	Md.	Madras*
30	Madr.	Madras usage
31	Madu.	Madura
32	*Madu.*	*Madura usage*
33	Mr.	Madura*
34	Mahārāṣṭra.	Mahārāṣṭra usage
35	*Maṟavar*	Maṟavar usage
36	Mercant.	Mercantile usage
37	(Mil.)	Military
38	Mil.	Military usage
39	N.A.	North Arcot
40	*N.A.*	*North Arcot usage*
41	N.	North
42	N.E.	North-East
43	Nurs.	Nursery usage
44	N.W.	North-West
45	*Nāñ.*	*Nāñci Nāṭu usage*
46	*Nāt. Cheṭṭi.*	*Nāṭṭukkōṭṭai Cheṭṭi usage*
47	North.	North India usage
48	Oil-monger.	Oil-monger's usage
49	*Parav.*	Paravar usage
50	*Paṟiah.*	Paṟiah usage
51	Pd.	pudukkottai
52	*Pd.*	*Pudukkottai usage*
53	*Pond.*	*Pondicherry usage*
54	*Prov.*	Provincial usage
55	Pudu.	Pudukkottai
56	*Pudu.*	*Pudukkottai usage*
57	*Pulaiya.*	Pulaiyar usage
58	Rd.	Ramnad

59	*Rd.*	*Ramnad usage*
60	S.	South
61	S.A.	South Arcot
62	*S.A.*	*South Arcot usage*
63	S.E.	South-East
64	S.W.	South-West
65	*Slang.*	*Slang usage*
66	Sm.	Salem
67	*sm.*	*Salem usage*
68	*Smārata.*	Smārata Brahmin usage
69	*South.*	*South India usage*
70	*Tinn.*	*Tinnevelly usage**
71	Tj.	Tanjore
72	*Tj.*	*Tanjore usage*
73	Tn.	Tinnevelly
74	*Tn.*	*Tinnevelly usage*
75	Tp.	Trichinopoly
76	*Tp.*	*Trichinopoly usage*
77	*Tranquebar.*	Tranquebar usage
78	*Trav.*	*Travancore usage*
79	*Vaḷḷuva*	Vaḷḷuvar caste usage
80	*Villi.*	Villi caste usage
81	*Vul.*	Vulgar usage
82	*Weav.*	Weaver caste usage

வட்டாரம் சார்ந்த பதிவுகள்

ஆனைமலை, செட்டிநாடு, கடப்பா, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், சித்தூர் முதலான ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்தந்த மக்கள் பேசும் வட்டாரவழக்கு (Dialectal), ஜாவா தீவு மக்கள் பேசும் மொழி, கொடைக்கானல், மெட்ராஸ், மதுரை, மகாராஷ்ட்ரா, வடஆர்க்காடு, நாஞ்சில் நாடு, நாட்டுக்கோட்டை செட்டியார், வட இந்தியா, புதுக்கோட்டை, பாண்டிச்சேரி, இராமநாதபுரம், தென்னார்க்காடு, கொச்சை வழக்கு (Slang usage), சேலம், தென் இந்தியா, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாங்கூர், உள்ூர் சார்ந்த பேச்சுவழக்கு (பிராந்திய வழக்கு - Local usage), முதலான பகுதிகளில் மக்களிடம் வழங்கும் பேச்சு வழக்கும், ஜாதி, குழு, போன்றவையும் சேர்த்து வட்டாரம் சார்ந்த பதிவுகளாகப் பேரகராதியில் எண்பத்து இரண்டு பதிவுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கீழ்கண்ட ஐந்து பிரிவுகளில் பிரிக்கலாம். அவை:

1.	ஊர் / நகரம்	41
2.	ஜாதி, குழு	23
3.	நாடு	07
4.	திசை	07
5.	பொது	04
		82

1. ஊர் / நகரம் தொடர்பான சொற்பதிவுகள்

1. ஆனைமலை வழக்கு -- *Ānaimalai -- Ānaimalai usage*
2. செட்டிநாட்டு வழக்கு -- C.N -- Cheṭṭi Nāṭu usage
3. கடப்பா -- Cd. --- Cuddappah
4. கடப்பா வழக்கு -- *Cd. -- Cuddappah usage*
5. செங்கல்பட்டு -- Cg. -- Chingleput
6. செங்கல்பட்டு வழக்கு -- *Cg. -- Chingleput usage*
7. கோயம்புத்தூர் -- Cm. -- Coimbatore
8. கோயம்புத்தூர் வழக்கு -- *Cm. -- Coimbatore usage*
9. சித்தூர் -- Ct. -- Chittoor
10. சித்தூர் வழக்கு -- *Ct. – Chittoor usage*
11. கொடைக்கானல் வழக்கு -- Kodai.- Kodaikanal usage
12. மெட்ராஸ் -- Ma. -- Madras
13. மெட்ராஸ் -- Md. -- Madras*
14. மெட்ராஸ் வழக்கு -- Madr. -- Madras usage
15. மதுரை -- Madu. -- Madura
16. மதுரை வழக்கு -- *Madu. -- Madura usage*
17. மதுரை -- Mr. -- Madura*
18. வட ஆர்க்காடு -- N.A. -- North Arcot
19. வட ஆர்க்காடு வழக்கு -- *N.A. -- North Arcot usage*
20. நாஞ்சில் நாட்டு வழக்கு -- *Nāñ. -- Nāñci Nāṭu usage*
21. நாட்டுக்கோட்டை செட்டி வழக்கு -- *Nāt. Cheṭṭi.-- Nāṭṭukkōṭṭai Cheṭṭi usage*

22. புதுக்கோட்டை -- Pd. -- pudukkottai

23. புதுக்கோட்டை வழக்கு -- *Pd. -- pudukkottai usage*

24. பாண்டிச்சேரி வழக்கு -- *Pond. -- Pondicherry usage*

25. புதுக்கோட்டை -- Pudu. -- Pudukkottai*

26. புதுக்கோட்டை வழக்கு -- *Pudu. -- Pudukkottai usage**

27. இராமநாதபுரம் -- Rd. -- Ramnad

28. இராமநாதபுரம் வழக்கு -- *Rd. -- Ramnad usage*

29. தென் ஆர்க்காடு -- S.A. -- South Arcot

30. தென் ஆர்க்காடு வழக்கு -- *S.A. -- South Arcot usage*

31. சேலம் -- Sm. -- Salem

32. சேலம் வழக்கு -- *Sm. -- Salem usage*

33. திருநெல்வேலி வழக்கு -- *Tinn. -- Tinnevelly usage**

34. தஞ்சாவூர் -- Tj. -- Tanjore

35. தஞ்சாவூர் வழக்கு -- *Tj. -- Tanjore usage*

36. திருநெல்வேலி -- Tn. -- Tinnevelly

37. திருநெல்வேலி வழக்கு -- *Tn. -- Tinnevelly usage*

38. திருச்சிராப்பள்ளி -- Tp. -- Trichinopoly

39. திருச்சிராப்பள்ளி வழக்கு -- *Tp. -- Trichinopoly usage*

40. திருவாங்கூர் வழக்கு - *Trav. -- Travancore usage*

41. தரங்கம்பாடி வழக்கு - *Tranquebar.*- Tranquebar usage

2. ஜாதி, குழு தொடர்பான சொற்பதிவுகள்

1. பிராமணர் வழக்கு - Brāh - Brāhmin usage
2. செம்படவர் வழக்கு - *Cempaṭava.*- Cempaṭavar usage
3. உலக வழக்கு - *Colloq.* - Colloquial
4. இருளர் வழக்கு - *Iruḷar.* - Iruḷar usage
5. கள்ளர் வழக்கு - *Kaḷḷar.* - kaḷḷar usage
6. காடர் வழக்கு - *kāṭar.* - kāṭar usage

7. கோமுட்டி வழக்கு - *Kōmuṭṭi* - kōmuṭṭi usage
8. குறவர் வழக்கு - *Kuṟava.* - Kuṟava usage
9. மறவர் வழக்கு - *Maṟavar* - Maṟavar usage
10. பரவர் வழக்கு - *Parav.* - Paravar usage
11. பறையர் வழக்கு - *Paṟiah.* - Paṟiah usage
12. புலையர் வழக்கு - *Pulaiya.* - Pulaiyar usage
13. சுமந்திரா பிராமணர் வழக்கு - *Smārata.* - Smārata Brahmin usage
14. வள்ளுவர் ஜாதி வழக்கு - *Vaḷḷuva* - Vaḷḷuvar caste usage
15. வில்லி ஜாதி வழக்கு - *Villi.* - Villi caste usage
16. நெசவாளர் ஜாதி வழக்கு - *Weav* - Weaver caste usage
17. இழிவழக்கு - *Vul.* - Vulgar usage
18. வணிகர் வழக்கு - Mercant. - Mercantile usage
19. இராணுவம் - (Mil.) - Military
20. இராணுவ வழக்கு - Mil. - Military usage
21. குழந்தைகள் பேச்சுவழக்கு - Nurs. - Nursery usage
22. சிறுவர்கள் பேச்சுவழக்கு - *Child.* - Children's usage
23. எண்ணெய் வியாபாரிகள் பேச்சுவழக்கு - Oil-monger. - Oil-monger's usage

3. நாடு தொடர்பான சொற்பதிவுகள்

1. பாரத நாட்டு வழக்கு -- *Bharata.* -- Bharata usage
2. பிரஞ்சு இந்திய வழக்கு -- *Fr. In.* -- French India usage
3. ஜாவா தீவு மக்கள் வழக்கு -- Javan. -- Javanese
4. மகாராஷ்டிரா வழக்கு -- Mahārāṣṭra. -- Mahārāṣṭra usage
5. வடஇந்திய வழக்கு -- North. -- North India usage
6. தென்இந்திய வழக்கு -- *South.* -- *South India usage*
7. மாகாணம் -- *Prov.* -- Provincial usage

4. திசை தொடர்பான சொற்பதிவுகள்

1. கிழக்கு -- E. -- East
2. வடக்கு -- N. -- North
3. வடகிழக்கு -- N.E. -- North-East
4. வடமேற்கு -- N.W. -- North-West
5. தெற்கு -- S. -- South
6. தென்கிழக்கு -- S.E. -- South-East
7. தென்மேற்கு -- S.W. -- South-West

5. பொதுவான சொற்பதிவுகள்

1. வட்டாரம் -- Dial. -- Dialectal
2. மாவட்டம் -- Dist. -- District.
3. கொச்சை வழக்கு -- *Slang. -- Slang usage*
4. உள்ளூர் வழக்கு -- *Loc. -- Local usage*

மேற்கண்ட ஐந்து பிரிவுகளில் ஊர், நகரம், ஜாதி, குழு, பொதுவான சொற்பதிவுகள் வட்டார வழக்குக்கு தொடர்புடையவையாக உள்ளதால் அவை மட்டும் ஆராயப்படுகின்றன.

1. ஊர் / நகரம் தொடர்பான சொற்பதிவுகள்

ஊர்/நகரம் தொடர்பான சொற்பதிவுகள் நாற்பத்தொரு குறிப்பான்களில் குறிக்கப்பட்டுள்ளன என்பதை முன்னரே கண்டோம். அதனை இங்கு விளக்கமாகக் காணலாம்.

1.1. ஆனைமலை வழக்கு (*Āṉaimalai.* ... **Anaimalai usage**)

ஆனைமலைப் பகுதியில் வாழும் மக்கள் பேசும் பேச்சுவழக்கு மொழியாக ஒரே ஒரு சொல் மட்டுமே பேரகராதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாவாதி n āvāti, n. Downy-nerved olive linden. See உருத்திராட்சம். *Āṉaimalai.* (ப - 2229)

1.2. செட்டிநாட்டு வழக்கு (*C.N.* ... **Cheṭṭi Nāṭu usage)**

செட்டிநாட்டு வழக்குச் சொற்களாக *C.N.* என்ற குறிப்பானிலும் *Cheṭṭi* என்ற குறிப்பானிலும் சொற்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை:

C.N.

வணக்கம்	(ப. - 3485)
வேவு	(ப. - 3841)
வேள்வு	(ப. - 3843)
வேள்வெடு - த்தல்	(ப. - 3843)
கழி - த்தல்	(பி.ப. - 204)
தண்டிகை	(பி.ப. – 300)
தண்டியல்	(பி.ப. – 300)

Cheṭṭi

இணங்கல்	(ப. -- 290)
தராப்புப் பண்ணுதல்	(ப. -- 1765)
துட்டி	(ப. -- 1958)
நடப்பு வட்டி	(ப. -- 2139)
முந்திரியணா	(ப. -- 3268)
இணங்கற்பிஞ்சு	(பி.ப. -121)
குழிதாழி	(பி.ப -236)
செவ்வாய்	(பி.ப – 293)

இவற்றில் Cheṭṭi என்ற குறிப்பான் சுருக்கக் குறியீட்டு அட்டவணையில் இல்லை. ஆனால் மேற்கண்ட சொற்களுக்குக் குறிப்பானாக Cheṭṭi என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. Cheṭṭi என்ற குறிப்பானில் உள்ள "நடப்பு வட்டி" என்ற சொல் செட்டிநாட்டு வழக்குச் சொல்லாகவும், நாஞ்சில் நாட்டு வழக்குச் சொல்லாகவும் காணப்படுகிறது.

1.3. கடப்பா (Cd. – Cuddappah, Cuddappah usage)

கடப்பா என்ற ஊர் வழக்குச் சொற்களைக் குறிக்க Cd. என்ற குறிப்பானில் Cuddappah என்றும், *Cd.* என்ற சாய்வான எழுத்தில் *Cuddappah usage* என்றும் இரு வகையில் குறிப்பான் தரப்பட்டுள்ளது. Cd. , *Cd.* என்னும் குறிப்பான்களில் ஒரு சொல்கூடப் பேரகராதியில் பதிவாகக் காணப்படவில்லை.

1.4. செங்கற்பட்டு வழக்கு (Cg. – Chingleput, Cg. -- Chingleput Usage)

செங்கற்பட்டு வட்டார வழக்குச் சொற்களாக Cg. என்னும் குறிப்பானில் Chingleput என்றும், *Cg.* என்ற சாய்வான எழுத்தில் *Chingleput Usage* என்றும் இரு வகையில் குறிப்பான் தரப்பட்டுள்ளது.

ஒத்தமலங்கொட்டுதல்	(ப. 590)
கடிச்சவன்	(ப. 668)
கொடிஞ்சிலடித்தல்	(ப. 1134)
கொடிஞ்சிற்பலகை	(ப. 1134)
சோவாசி	(ப. 1676)
நீர்வெள்ளை	(ப. 2308)
நீலச்சம்பா	(ப. 2312)
பிச்சைவாரி	(ப. 2647)
பால் சிதறுதல்	(ப. 2626)

1.5. கோயம்புத்தூர் வழக்கு (Cm.... Coimbatore, *Coimbatore Usage*)

கோயம்புத்தூர் மாவட்டப் பகுதியில் மக்கள் வழக்கில் உள்ள சொற்கள் இக்குறிப்பானில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலும் Cm. என்ற குறிப்பானில் Coimbatore என்றும், *Cm* என்ற சாய்வான எழுத்தில் *Coimbatore Usage* என்றும் இருவகையில் அமைந்துள்ளது.

Cm. – Coimbatore என்னும் குறிப்பானில் ஒரு சொல்கூடப் பதிவு செய்யப்படவில்லை. *Cm* -- *Coimbatore Usage* என்னும் குறிப்பானில் மொத்தம் இருபத்து ஐந்து சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை:

1.	உலக்கை சாத்துதல்		(ப. 455)
2.	உலோகிதம்		(ப. 461)
3.	எரங்காடு		(ப. 529)
4.	கட்டுமரம்		(ப. 653)
5.	கீரைக்காய்		(ப. 947)
6.	குந்தாங்குச்சி		(ப. 995)
7.	குந்தாடுதல்		(ப. 995)
8.	தொடிகட்டுதல்		(ப. 1134)
9.	சிவியார்		(ப. 1449)
10.	சுருணைவெள்ளை		(ப. 1531)
11.	தகனம்		(ப. 1707)
12.	தூர்கட்டுதல்		(ப. 2020)
13.	தெளிவு		(ப. 2041)
14.	தொப்புளான்		(ப. 2096)
15.	பகலை		(ப. 2382)
16.	பண்டம்		(ப. 2449)
17.	பண்டாரம்	(J)	(ப. 2450)
18.	பண்ணாடி		(ப. 2452)
19.	பலகி		(ப. 2532)
20.	பாப்பாச்சி		(ப. 2610)
21.	பிள்ளை		(ப. 2712)
22.	புழக்கம்		(ப. 2792)

23. புறவிடை (ப. 2811)
24. பெட்டைக்காடு (ப. 2856)
25. பொம்மைவாய் (ப. 2925)

மேற்கண்ட சொற்களில் "பண்டாரம்" என்ற சொல் (J – Jaffna term) யாழ்ப்பாண மக்கள் பேச்சு வழக்கிலும் இடம் பெற்றுள்ளது.

ஆனால் பேரகராதியில் சுருக்கக் குறிப்பானில் குறிப்பிடப்படாத *Coim.* என்னும் குறிப்பானில் மூன்று சொற்கள் இதில் இடம்பெற்றுள்ளன. அவை:

Coim.

இலாவணம் (ப. 344)
மோத்தை (ப. 3385)
வாடிவேலி (ப. 3583)

1.6. சித்தூர் வழக்கு (Ct.. Chittoor, Ct.. Chittoor Usage)

தமிழகத்தின் எல்லைப் பகுதியான சித்தூர்ப் பகுதியில் மக்கள் வழக்கில் உள்ள சொற்களாக Ct. என்ற குறிப்பானில் Chittoor என்றும், *Ct..* என்ற சாய்வான எழுத்தில் *Chittoor Usage* என்றும் இருவகையில் அமைந்துள்ளது.

Ct. , *Ct.,* என்னும் குறிப்பான்களில் ஒரு சொல்கூடப் பேரகராதியில் பதிவாகக் காணப்படவில்லை.

1.7. கொடைக்கானல் வழக்கு -- Kodai.- Kodaikanal usage

பழங்குடி இனத்தவரும் மலைவாழ் மக்களும் அதிகம் வசிக்கும் பகுதி கொடைக்கானல் மலைப்பகுதியாகும். இவ்வட்டார மக்கள் பேசும் சொற்களாக ஏழு சொற்களும் பின்னிணைப்பில் ஒரு சொல்லும் ஆக மொத்தம் எட்டு சொற்கள் மட்டுமே இக்குறிப்பானில் இடம் பெற்றுள்ளன.

கண்டப்பனி -- (ப. 687)
கண்டிப்பு -- (ப. 689)
பாம்புச்செடி -- (ப. 2612)
புகையிலைத்தட்டு -- (ப. 2744)
பூவரசு -- (ப. 2850)

பேரசம்	--	(ப. 2898)
குருட்டு மாசு	--	(பி..ப. 234)

1.8. மெட்ராஸ் -- Ma. – Madras, Md. – Madras*, Madr. – Madras usage.

Ma., Md., Madr., என்னும் மூன்று வகையான குறிப்பான்களில் மெட்ராஸ் வட்டாரவழக்குச் சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. Ma. என்ற குறிப்பானில் ஒரு சொல் கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

Md. – Madras*

அரிச்சந்திரம்	--	(ப.125)
சூட்டுதல் (J, Loc)	--	(ப.1558)
காக்கடா	--	(பி..ப. 212)

Md. என்ற குறிப்பானில் மேற்கண்ட மூன்று சொற்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிலும் “சூட்டுதல்” என்ற சொல் யாழ்ப்பாண வழக்குச் சொல்லாகவும் உள்பிர் வழக்குச் சொல்லாகவும் காணப்படுகிறது.

Madr. – Madras usage.

அண்ணமாக்கல்	--	(ப. 60)
ஆங்குதல்	--	(ப. 208)
இடைநேரம்	--	(ப. 287)
எட்டாந்துக்கம்	--	(ப. 512)
கந்திரி	--	(ப. 718)
டமாயி	--	(ப. 1695)
துவ்வானம்	--	(ப. 1990)
தொத்தா	--	(ப. 2094)
மேனரிக்கம்	--	(ப. 3365)
லகு	--	(ப. 3435)
ஜண்டாமரம்	--	(ப. 3863)
அல்டப்பா	--	(பி..ப. 68)
கட்டைத்தொட்டி	--	(பி..ப. 180)
டபரா	--	(பி..ப. 298)
முனுவாணி	--	(பி..ப. 397

வாரவட்டை -- (பி..ப. 411)

Madr. என்ற குறிப்பானில் மேற்கண்ட சொற்கள்போலப் பல சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.9. மதுரை **Madu. – Madura, *Madu.- Madura usage,* Mr. Madura***

மதுரை மாவட்ட மக்கள் வழக்குச் சொற்களாக ஒன்பது சொற்கள் மட்டுமே இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை:

Madu.- Madura usage

இலக்கு -- (ப. 339)
செழிப்பு -- (ப. 1619)
சேந்தி (Loc, *Nāñ*) -- (ப. 1630)
தாயாதிப்பட்டம் -- (ப. 1841)
திரியெடுத்தாடுதல் -- (ப. 1894)
திருக்கண் -- (ப. 1896)
பாண்டிவேளாளன் -- (ப. 2598)
ராமகோடு (Loc) -- (ப. 3424)
ஒட்டடை -- (பி..ப. 171)

இவற்றுள் "சேந்தி" என்னும் சொல் உள்ளூர் வழக்குச் சொல்லாகவும் நாஞ்சில் நாட்டு வட்டாரச் சொல்லாகவும் காணப்படுகிறது. "ராமகோடு" உள்பிர் வழக்குச் சொல்லாக உள்ளது.

Madu. – Madura, Mr. Madura* என்னும் குறிப்பான்களில் எந்தச் சொல்லும் பதிவாகக் காணப்படவில்லை.

1.10. வடஆர்க்காடு வழக்கு **N.A. -- North Arcot, *N.A. -- North Arcot usage***

வடஆர்க்காடு வட்டாரப் பகுதியானது வடக்கே வேலூர், தெற்கே வந்தவாசி, கிழக்கே காஞ்சிபுரம், மேற்கே செங்கம் வரையிலும் உள்ளதாகும். இப்பரந்த பகுதியின் சொற்களாக இரண்டு சொற்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை:

N.A. (North Arcot Usage)

சமோகி (ப. 1303)

பில்மத்தா (ப. 2708)

1.11. நாஞ்சில் நாட்டு வழக்கு ***Nāñ. -- Nāñci Nāṭu usage***

கன்னியாகுமரி மாவட்ட நாஞ்சில் நாட்டு வழக்குச் சொற்களாகப் பல சொற்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் பதிப்பாசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் நண்பரான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களால் தொகுத்துத் தரப்பட்டதாகப் பதிப்பாசிரியரே குறிப்பிடுகிறார்.[14]

கொட்டியம்பலம்	(ப. 1130)
சக்கப்பிரதமன்	(ப. 1209)
சன்மி	(ப. 1344)
சாழல் படித்தல்	(ப. 1395)
சுளுகோடி	(ப. 1549)
சேழும்	(ப. 1639)
ஞாலித்தட்டு	(ப. 1685)
தஞ்சி	(ப. 1716)
திருமதுரம்	(ப. 1910)
நிம்பமாலை	(ப. 2252)
மல்மல்	(ப. 3097)
வாரியல்	(ப. 3614)
அக்கானி	(பி..ப. 2)
ஆஞ்சாலி	(பி..ப. 99)
கழியல்	(பி..ப. 205)
முட்டவம்	(பி..ப. 393)

1.12. நாட்டுக்கோட்டை செட்டி வழக்கு *Nāt. Cheṭṭi.-- Nāṭṭukkōṭṭai, Cheṭṭi usage*

இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் வாழும் செட்டியார் வகுப்பினரின் பேச்சுமொழி இதுவாகும். நாட்டுக்கோட்டை செட்டியார் வழக்குச் சொற்களாகச் சில சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

தொலை	(ப. 2099)
நகரக்கோயில்	(ப. 2124)
நகரவிடுதி	(ப. 2125)
வங்கி	(ப. 3453)
அடுக்களைக்குருக்கள்	(பி..ப. 27)
கேரிசு பண்ணு - தல்	(பி..ப. 243)
பெட்டியடி	(பி..ப. 372)

1.13. பாண்டிச்சேரி வழக்கு *Pond. -- Pondicherry usage*

பாண்டிச்சேரி வழக்குச்சொற்கள் முதல் ஆறு தொகுதிகளில் மொத்தம் ஐந்து சொற்கள் மட்டுமே பதிவாகக் காணப்படுகின்றன. ஆனால் பின்னிணைப்புத் தொகுதியில் அறுநூற்று நாற்பத்து ஒன்பது சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

கப்பே	--	(ப. 721)
குமுசியார்	--	(ப. 1006)
தீந்தா	--	(ப. 1940)
தீராந்தி	--	(ப. 1949)
விளக்கப்பிரைசிதான்	--	(ப. 3724)
அபலம்	--	(பி..ப. 45)
ஆரக்கம்	--	(பி..ப. 108)

ஒட்ராப்பு -- (பி..ப. 172)

குடத்திநாய் -- (பி..ப. 228)

சுசுலம் -- (பி..ப. 284)

பஞ்சிகரன் -- (பி..ப. 345)

பொர்மா -- (பி..ப. 376)

மோர்சா -- (பி..ப. 400)

1.14. புதுக்கோட்டை வழக்கு **Pd. -- Pudukkottai, *Pd. -- Pudukkottai usage,* Pudu. - Pudukkottai, *Pudu.- Pudukkottai usage.***

புதுக்கோட்டை வழக்குச் சொற்களாகப் பேரகராதியில் *Pd.* என்ற குறிப்பான்களில் ஒரு சொல்லும் , *Pudu.* என்ற குறிப்பானில் ஒரு சொல்லும் பதிவாகக் காணப்படுகிறது. அவை:

சங்கீதப்பாரி -- *Pd.* -- (ப.1228)

பறைப்பாரி -- *Pudu.* -- (ப. 2564)

1.15. இராமநாதபுர வழக்கு **Rd.- Ramnad, *Rd. - Ramnad usage***

இராமநாதபுர மாவட்ட வழக்குச் சொற்களாகப் பேரகராதியில் நாற்பத்து ஆறு சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவையாவும் *Rd. - Ramnad usage* என்ற குறிப்பானில் உள்ளன. அவை:

அலபந்துரு -- (ப. 91)

உடும்புக்காலிவரகு -- (ப. 400)

கட்டம்பலம் -- (ப. 646)

செந்தாழை -- (ப. 1588)

தம்பம் -- (ப. 1752)

தூம்பாக்குழி -- (ப. 2017)

பலுக்கினியன் -- (ப. 2539)

வாய்மூப்பன் -- (ப. 3599)

ஜாரிமகமை -- (ப. 3873)

ஒக்கிடுதல் -- (பி..ப. 170)

திட்டிக்கிடாய் -- (பி..ப. 310)

பிரைமரம் -- (பி..ப. 363)

பெறுமாதம் -- (பி..ப. 373)

வணைத்தல் -- (பி..ப. 406)

1.16. தென்னார்க்காடு வழக்கு S.A. - South Arcot, S.A. - *South Arcot usage*

தென்னார்க்காடு வழக்குச் சொற்களாக நான்கு சொற்கள் மட்டுமே பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

கஞ்சியில் வடித்தல் - (ப. 644)

நாவல் - (ப. 2229)

நீறுபூசி - (ப. 2317)

பட்டைப்பறி - (ப. 2429)

1.17. சேலம் வழக்கு Sm. – Salem, *sm.-- Salem usage*

சேலம் வழக்குச் சொற்களாக Sm. – Salem என்ற குறிப்பானில் எவ்விதச் சொல்லும் பதிவாக இல்லை. *sm.-- Salem usage* என்ற குறிப்பானில் நான்கு சொற்கள் மட்டுமே பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

அரைக்கீரைக்காய் (ப. 182)

செடில் (ப. 1584)

துலுசீட்டு (ப. 1989)

பைகி (ப. 2905)

1.18. திருநெல்வேலி வழக்கு *Tinn.-- Tinnevelly usage*,*

Tn.- Tinnevelly, ***Tn.- Tinnevelly usage***

திருநெல்வேலி வழக்குச்சொற்களாக *Tinn.-- Tinnevelly usage*,* Tn.- Tinnevelly, *Tn.- Tinnevelly usage.* என்று மூன்று குறிப்பான்கள் காணப்படுகின்றன. ஆனால் *Tn, Tinn* என்ற குறிப்பான்களில் மட்டுமே சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. Tn.- Tinnevelly என்ற குறிப்பானில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை. அவை:

Tn.- Tinnevelly usage.

பழஞ்சி	-- (ப. 2545)
அடிச்சேரியாள்	-- (ப. 47)
அப்பாயி	-- (ப. 86)
அலகுபனை	-- (ப. 143)
ஆண்டு	-- (ப. 221)

Tinn.-- Tinnevelly usage*

ஆலி	-- (ப. 248)
உமர்	-- (ப. 431)
குப்பம்	-- (ப. 997)
சபரணை	-- (ப. 1279)
சில்வாய்	-- (ப. 1434)
செங்கமட்டை	-- (ப. 1578)
தள்	-- (ப. 1799)
நிமிளன்	-- (ப. 2255)
பம்மாத்து	-- (ப. 2485)

1.19. தஞ்சாவூர் வழக்கு **Tj. -- Tanjore ,** ***Tj. Tanjore usage***

தஞ்சாவூர் வழக்குச் சொற்களாக *Tj. Tanjore usage* என்ற குறிப்பானில் முதல் ஆறு தொகுதிகளில் நூற்றுப் பதினைந்து சொற்களும் பிற்சேர்க்கையில் நாற்பத்து எட்டு சொற்களும் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

ஆச்சனை -- (ப. 208)

ஒழுங்கு -- (ப. 608)

சங்காயம் -- (ப.1125)

சிலுத்தல் -- (ப. 1438)

சேடைபாய்ச்சுதல் -- (ப.1627)

தூக்குருண்டை -- (ப. 2011)

பஞ்சரி -- (ப. 2410)

ஆலோடி -- (பி..ப. 111)

கஞ்சித்தொந்தி -- (பி..ப. 178)

கற்றுவன்னம் -- (பி.ப. 227)

சஜ்ஜீர்ஜாமீன் -- (பி.ப. 269)

1.20. திருச்சிராப்பள்ளி வழக்கு **Tp. - Trichinopoly, *Tp.- Trichinopoly usage***

திருச்சிராப்பள்ளி மாவட்ட வழக்குச் சொற்களாக, *Tp.- Trichinopoly usage* என்ற குறிப்பானில் ஆறு தொகுதிகளிலும் சேர்த்து பத்து சொற்களும் பின்னிணைப்பில் இருபத்து மூன்று சொற்களும் பதிவாகக் காணப்படுகின்றன. மொத்தம் முப்பத்து மூன்று சொற்கள் இக்குறிப்பானில் உள்ளன. அவை:

கதம்பைக்கயிறு -- (ப. 710)

செவந்தரை -- (ப. 1616)

துய்யா -- (ப. 1974)

பட்டணத்தாடு -- (ப. 2420)

அடிப்புள் -- (பி..ப. 26)

கிளாச்சி -- (பி..ப. 225)

கும்பக்குடம் (Tinn) -- (பி..ப. 232)

கொசலி -- (பி..ப. 248)

சம்பல் (Loc) -- (பி..ப. 264)

சுத்துரு -- (பி..ப. 284)

வாயிழுத்தல் -- (பி..ப. 411)

இதில் கும்பக்குடம் என்னும் திருநெல்வேலி மாவட்டச் சொல்லும் சம்பல் என்ற உள்ளூர் வட்டார வழக்குச்சொல்லும் இடம் பெற்றுள்ளன.

1.21. திருவாங்கூர் வழக்கு *Trav.- Travancore usage*

திருவாங்கூர் வழக்குச் சொல்லாக ஒரு சொல் மட்டுமே பதிவாக உள்ளது.

பாண்டி வேளாளன் -- (ப. 2598)

1.22. தரங்கம்பாடி வழக்கு *Tranquebar.-* Tranquebar usage

தரங்கம்பாடி என்னும் ஊரினை ஆங்கிலேயர் அக்காலத்தில் Tranquebar என்று வழங்கினர். தரங்கம்பாடி வழக்குச் சொல்லாக மொத்தம் ஏழு சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை:

முடுத்தார் - ப.3248
நோனாவட்டியம் - ப.2372
புவர் - ப.2761
கல்வெடி - பி.ப.200
கல்ஜாலர் வேலை - பி.ப.200
கழிவொற்றி - பி.ப.205
கித்தா - பி.ப.223

ஜாதி, குழு தொடர்பான வட்டார வழக்கு

ஜாதி, குழு தொடர்பான சொற்களும் வட்டார வழக்குச் சொற்களாகும். தமிழ் மொழி வழக்குகள் வட்டார அடிப்படையில் மட்டுமல்லாது ஜாதி அடிப்படையிலும் வேறுபாடுடையன. ஒவ்வொரு ஜாதிக்கும் தனியான பேச்சுவழக்கு உண்டு. இது அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்பவும் இடத்திற்கேற்பவும் மாறுபடும். இத்தகைய ஜாதி வழக்கும் குழு வழக்கும் மொழியின் வளர்ச்சிக்குத் துணைபுரிவன. இவற்றையும் அகராதியில் பதிவு செய்வது அவசியம். ஆனால் இத்தகைய ஜாதி வழக்குகளை அகராதியில் பதிவு செய்யும்போது பல்வேறு சிக்கல்களும் இடர்ப்பாடுகளும் ஏற்படுவது இயல்பாகும். தமிழ்ப் பேரகராதியிலும்

இத்தகைய சிக்கல்களும் இடர்ப்பாடுகளும் ஏற்பட்டதாக இதன் பதிப்பாசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

> ‘அக்கிரகாரம்’ என்னும் சொல்லுக்குப் ‘பார்ப்பனச்சேரி’ என லெக்ஸிகன் பொருள் கொடுத்துள்ளது. இது பிரமண வகுப்பினருக்குள்ளே சிறு கலக்கத்தை உண்டுபண்ணிற்று. இடைச்சேரி, பட்சேரி, பறைச்சேரி, என்று சொல்லலாம்: நாற்குலங்களிலும் மேற்குலத்தவராகக் கருதப்படும் பிராமணர்கள் வாழும் இடத்தைப் ‘பார்ப்பனச்சேரி’ என்று சொல்லுதல் தகுதியாகுமா? —என்று வாதித்தார்கள். ஆனால் இப்பொருளை எழுதியவர் பிராமண குலத்தினரான ஒரு வித்துவ சிகாமணி என்று தெரிந்தும், இச்சொல்லுக்கு முன்னோர் ஆட்சியுள்ளதென்று அறிந்தும், முன்னோராட்சிக்கு அகராதியாளர் பொறுப்பாளியல்லர் என்று பகுத்துணர்ந்தும் அமைதியுற்றனர். பின்னர், ‘பார்ப்பனச்சேரி’ என்ற தொடரை லெக்ஸிகனில் வெளியிட்டபோதும் எவ்விதமான அமைதிக்குறைவும் ஏற்படவில்லை....... இவை போன்றவற்றால் எனக்கு நேர்ந்த தொந்தரவுகள் மிகப்பல என்று குறிப்பிட்டுள்ளார். [15]
>
> இதுபோல் “முதலி” என்னும் ஜாதிப் பெயரையும் “கும்பகோணம்” என்னும் இடப்பெயரையும் பதிவுசெய்யுமிடத்துப் பலவகை இடாப்பாடுகள் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனால் பல தொந்தரவுகள் ஏற்பட்டதால் பல சொற்களை நீக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். [16]

மேற்கண்ட இடர்ப்பாடுகளும் சிக்கல்களும் ஏற்பட்ட சூழலிலும் பேரகராதியில் இருபத்து மூன்று குறிப்பான்களுக்குச் சொற்கள் சேகரிக்கப்பட்டுப் பொருள் தரப்பட்டுள்ளன. ஆனால் பல ஜாதி வழக்குகளுக்குச் சொற்கள் சேகரித்துச் சேர்க்கப்படவில்லை.

1. பிராமணர் வழக்கு - **Brāh - Brāhmin usage**

பார்ப்பனர் இனத்தைச் சேர்ந்த மக்கள் பேசும் பேச்சுவழக்கினைப் பிராமணர் வழக்கு என்பர். பிராமணர்கள் சமய மொழியான வடமொழியையும் ஆங்கிலத்தையும் கற்ற இரு மொழியாளர்களாக விளங்குகின்றனர். இவர்களது பேச்சுத்தமிழ் மற்றவர்களது பேச்சுத் தமிழினின்றும் வேறுபடுகிறது. பிராமணர் என்னும் ஒரு சமூகத்தைக் குறிப்பிடினும் அய்யர், அய்யங்கார் என்று இரு பிரிவுகள் உண்டு. இவர்கள் முறையே சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் பின்பற்றுவதால், அவர்களுடைய சொற்களஞ்சியத்திலும் வேறுபாட்டைக்

காணலாம். இருப்பினும் இவ்விரு பிரிவினரிடையே ஒலியனமைப்பிலும் இலக்கண அமைப்பிலும் ஒற்றுமையிருப்பதைக் காணலாம்.[17]

தமிழ்ப் பேரகராதியில் பிரமாணர் வழக்குச் சொற்களாகப் பல சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

அச்சாபொங்கா	ப. 24
அட்சதை	ப. 39
அட்சதை போட்டுக்கொள்ளு- தல்	ப. 39
அத்திம்பேர்	ப. 67
அம்மாஞ்சிமதினி	ப. 99
அற்பசங்கை	ப. 171
ஆத்துக்காரர்	ப. 225
உபபலம்	ப. 425
ஓதியிடுதல்	ப. 623
சமத்து	ப. 1290
சாத்தீர்த்தம்	ப. 1361
சீமந்தஜேஷ்டன்	ப. 1479
சேடம்	ப. 1627
த்ரப்ஸம்	ப. 1701
ததாஸ்து	ப. 1744
பகிசங்கை	ப. 2383
பிச்சமாவாசை	ப. 2646
போதுகாலம்	ப. 2965
விரதம்	ப. 3695
ஜடாவல்லபன்	ப. 3862
ஜோதி	ப. 3880
அந்தரீயம்	பி.ப. 40
அவதூதம்	பி.ப. 73
ஆப்பியாயனம்	பி.ப. 105
உத்துவாகம்	பி.ப. 146
உபாந்தியம்	பி.ப. 149
காருண்யபிதிர்க்கள்	பி.ப. 219

செம்படவர் வழக்கு - *Cempaṭava.*- Cempaṭavar usage

செம்படவர் வழக்குச் சொல்லாகத் தமிழ்ப் பேரகராதியில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

உலக வழக்கு - *Colloq.* - Colloquial

உலக வழக்குச் சொல்லான ***Colloq.*** **- Colloquial** என்பதற்குப் "பேச்சு வழக்கிலுள்ள, பேச்சோடு தொடர்புடைய என்று பொருள் கூறப்பட்டுள்ளது.[18]

பேரகராதியில் உள்பிர் வழக்குச் சொற்களுக்கு அடுத்த நிலையில் அதிகமான சொற்கள் பதிவாகக் காணப்படுவது உலக வழக்குச் சொற்களாகும். அவை:

அக்கக்காய்	ப. 2
அகஸ்மாத்	ப.16
ஆமுடையாள்	ப.235
இரண்டுக்குப்போதல்	ப.309
உருப்படி	ப.447
கம்பிநீட்டுதல்	ப.727
கிச்சுக்கிச்சு மூட்டுதல்	ப.914
சடாய்த்தல்	ப.1241
சலவாதை	ப.1328
சொளையமாடுதல்	ப.1557
தச்சச்சி	ப.1712
நெய்வு	ப.2343
படுசுட்டி	ப..2442
மாசாமாசம்	ப.3146
இலஞ்சி	பி.ப.132
கட்டைச்சம்பா	பி.ப.180
காப்பி	பி.ப.216
தலைக்கயிறு	பி.ப.304
மடமட்டி	பி.ப.381
ஜோடி	பி.ப.420

இருளர் வழக்கு - *Iruḷar.* - Iruḷar usage

தமிழ்நாட்டில் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் கேரளம், கர்நாடக மாநிலங்களிலும் இருளப் பழங்குடி இனத்தவர் வாழ்கின்றனர். இருள இனத்தில் 'இருளர்' என்றும், 'இருளப்பள்ளர்' என்றும் இரு உட்பிரிவுகள் உள்ளன. இருளர் தங்களை உயர்ந்த இனத்தவர் என்றும், இருளப்பள்ளர்களைத் தாழ்ந்த இனத்தவர் என்றும் கருதுகிறார்கள். நீலகிரிப் பகுதியில் வாழ்வோர் இருள இனத்தவர் ஆவர். மேட்டுப்பாளையம் பகுதியில் வாழ்வோர் இருளப்பள்ளர் ஆவர். இருள இனத்தவர் பெரும்பாலும் தமிழ் மற்றும் படகா மொழிகளும் பேசுகின்றார்கள்.[19] இருளர் வழக்குச் சொல்லாக இதில் ஒரு சொல் மட்டுமே பதிவாக உள்ளது.

பறத்தி ப.2560

கள்ளர் வழக்கு - *Kaḷḷar.* - kaḷḷar usage

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் மக்களுள் கள்ளர் இனத்தவரும் ஒருவராவர். இவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்ந்துவரும் அடிப்படையில் இவ்வகுப்பினர் ஐந்து பெரும் பிரிவுகளாக உள்ளனர்.[20]

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள தகவல் சிற்றேட்டில் கள்ளர்களின் ஐந்து பெரும் பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.[21]

1. ஈச நாட்டுக் கள்ளர்கள்
2. கந்தர்வ கோட்டை கள்ளர்கள்
3. கூத்தப்பால் கள்ளர்கள்
4. பிரமலைக் கள்ளர்கள்
5. பெரிய சூரியர் கள்ளர்கள்

ஈச நாட்டுக் கள்ளர்களும் கந்தர்வ கோட்டை கள்ளர்களும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் வசிப்பவர்கள். கூத்தப்பால் கள்ளர்கள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்கள். பிரமலைக் கள்ளர்கள் சிவகங்கை, விருதுநகர்,

இராமநாதபுரம், திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்கள். பெரிய சூரியர் கள்ளர்கள் திருச்சிராப்பள்ளி,

கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்கள் ஆவர்.

கள்ளர் வழக்குச் சொற்களாகத் தமிழ்ப் பேரகராதியில் இரண்டு சொற்கள் மட்டுமே பதிவாக உள்ளன. அவை:

தீர்த்தல்	ப. 1945
தீர்வை	ப. 1948

காடர் வழக்கு - ***kāṭar.*** - **kāṭar usage**

இந்தியாவின் மிகப் பழங்குடிகளுள் ஒன்றான காடர் இனத்தினர் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், கேரளாவில் பாலக்காடு, திருச்சூர் மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். காடர்கள் தங்களைக் "காடாளு" என்று கூறிக்கொள்ளுகின்றனர். தாங்கள் பேசும் மொழியைக் "காடாளு பாசே" என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.[22] காடர் இனத்தவர் அனைவரும் இருமொழியாளர்கள் எனலாம். தாய்மொழியாகிய காடர் மொழியல்லாது தமிழும் பேசுகின்றனர்.

> மானிடவியல் அறிஞரான தர்ஸ்டன், காடர்கள் கலப்படமான, ஏற்ற இறக்கங்களோடு தமிழைப் பேசுகிறார்கள் என்றும், இவர்கள் மொழி தமிழ், மலையாள மொழிகளின் கலவைதான் என்றும் கூறுகிறார்.[23]

காடர் வழக்குச் சொற்களாகத் தமிழ்ப் பேரகராதியில் இருபத்தொரு சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

கருந்தும்பை	- ப.758
கானக் கைதை	- ப.911
சண்டு	- ப.1245
சரலங்கா	- ப.1315
சரளு	- ப.1316
சொத்திலை	- ப.1650
சொறிலை	- ப.1660
திரிப்பு	- ப.1891

துவரமரம்	- ப.1993
நீர்வெட்டி	- ப.2308
நெடுவார்கோங்கு	- ப.2340
பட்டைபானு	- ப.2429
புரு	- ப.2774
பூ	- ப.2819
புன்கு	- ப.2812
பூவு	- ப.2852
பில்லிபிச்சு	- ப.2709
பீமுகம்	- ப.2735
பெரி	- ப.2865
வரங்கு	- ப.3507
விள்ளல்	- ப.3724

கோமுட்டி வழக்கு - *Kōmuṭṭi* - kōmuṭṭi usage

கோமுட்டி வழக்குச் சொல்லாகத் தமிழ்ப் பேரகராதியில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

குறவர் வழக்கு - *Kuṟava.* - Kuṟava usage

குறவர் இனத்தைச் சேர்ந்த இவர்கள் காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வசிப்பவர்கள். [24]

குறவர் வழக்குச் சொற்களாக மூன்று சொற்கள் மட்டுமே பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

கடுவன்பன்றி	- ப.675
களிதின்னல்	- ப.815
சாவடி	- ப.13

மறவர் வழக்கு - ***Maṟavar*** - **Maṟavar usage**

மறவர்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பபவர்கள். மறவர்களில் மூன்று பிரிவினர் உள்ளனர்.[25] அவர்கள்:

1. கருமறவர்கள்
2. அப்பனாடு கொண்டையம் கோட்டை மறவர்கள்
3. செம்பனாடு மறவர்கள்

கருமறவர்கள் , அப்பனாடு கொண்டையம் கோட்டை மறவர்கள் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்கள். செம்பனாடு மறவர்கள் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்கள் ஆவர்.

மறவர் வழக்குச் சொற்களாகத் தமிழ்ப் பேரகராதியில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

பரவர் வழக்கு - ***Parav.*** - **Paravar usage**

பரவர் இனத்தைச் சேர்ந்த இவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையிலும் வசிப்பவர்கள். பரவர் வழக்குச் சொற்களாக இதில் முப்பத்து ஒன்பது சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

அச்சாறு	- ப.24
அர்த்தாப்பு	- ப.114
அஸ்தாரிப்பு	- ப.200
ஓட்டி	- ப.619
கவ்வா	- ப.787
கீழ்க்கவடி	- ப.949
குச்சுமணி	- ப.956
குஞ்சரமணி	- ப.959
குட்டியாத்தாள்	- ப.962
குத்துவலை	- ப.989
கைக்கட்டுபவளம்	- ப.1099
கொண்டிக்கடுக்கன்	- ப.1144
கொத்தமல்லிமணி	- ப.1147
சங்கக்காப்பு	- ப.1221

சங்குத்தாலி - ப.1229
சர்வகடையம் - ப.1308
சலங்கைமுன்தாங்கி - ப.1325
சனிவளையம் - ப.1349
சிலுவணி - ப.1439

சோமன் - ப.1672
தண்டக்காரன் - ப.1730
தவத்தி - ப.1791
தெருக்கால் - ப.2037
தேள்தண்டட்டி - ப.2070
தொந்தி - ப.2095
நகரமீன் - ப.2125
நகாசுமணி - ப.2126
நச்சுவலை - ப.2130
பிலாக்காய்க்கொத்துமணி - ப.2710
பிள்ளைத்தாலி - ப.2713
பிள்ளைப்பந்து - ப.2713
பூக்கடுக்கன் - ப.2819
பூசணிக்காய்க்கொத்துமணி - ப.2825
பூவட்டம் - ப.2850
முட்டுப்பாந்தை - ப.3240
மேற்கவடி - ப.3361
வங்கு - ப.3453
அம்மை - பி.ப.100

இதில் பிலாக்காய்க்கொத்துமணி, பூக்கடுக்கன், முட்டுப்பாந்தை என்னும் இம்மூன்று சொற்கள் மட்டும் ***Parava.*** என்னும் குறிப்பானில் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் பேரகராதியின் குறிப்பான்கள் பட்டியலில் ***Parav.*** என்னும் குறிப்பான்தான் உள்ளது. மற்ற சொற்கள் ***Parav.*** என்னும் குறிப்பானில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பறையர் வழக்கு - *Pariah.* - Pariah usage

பறையர் வழக்குச் சொற்களாக இதில் மூன்று சொற்கள் மட்டுமே பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

சிவனம்	- ப. 1489
சம்பந்தங்கூறல்	- ப. 1282
புரசு	- ப. 2769

புலையர் வழக்கு - *Pulaiya.* - Pulaiyar usage

புலையர் வழக்குச் சொற்களாகத் தமிழ்ப் பேரகராதியில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

சுமந்திரா பிராமணர் வழக்கு- *Smārata.* - Smārata Brahmin usage

சுமந்திரா பிராமணர் வழக்குச் சொற்களாக இதில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

வள்ளுவர் ஜாதி வழக்கு - *Vaḷḷuva.* - Vaḷḷuvar caste usage

வள்ளுவர் ஜாதி வழக்குச் சொற்களாக இதில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

வில்லி ஜாதி வழக்கு - *Villi.* - Villi caste usage

வில்லி ஜாதி வழக்குச் சொற்களாகப் பேரகராதியில் ஒரு சொல் மட்டுமே பதிவாகக் காணப்படுகிறது. அது:

ஆக்குத்தாய் - ப.203

நெசவாளர் ஜாதி வழக்கு - *Weav .* - Weaver caste usage

நெசவாளர் ஜாதி வழக்குச் சொற்களாக இதில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

இழிவழக்கு - *Vul.* - Vulgar usage

இலக்கியங்களில் உள்ள சொற்களைத் திருந்திய சொற்கள் என்றும், பேச்சில் உச்சாரணம் திரிந்து வழங்கும் சொற்களைக் கொச்சைச் சொற்கள் என்றும் கூறுவது மரபு. இவ்வாறு கொச்சையாய் வழங்கும் சொற்களும் அகராதியில் இடம்பெற வேண்டும்[26] என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். ஒரு மொழியின் இலக்கிய வழக்கிலிருந்து திரிந்து மக்களால் இழிந்த நிலையில் பேசப்படும் சொற்களைக் கொச்சைச் சொற்கள் எனலாம்.

கொச்சைச் சொல் என்பதற்கு நேரான ஆங்கிலச் சொல் Vulgur Word என்பதாகும். Vulgur என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இழிவு, கொச்சை, இழிந்தோர் பேச்சு, indecent word

என்று Winlow's அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது.[27]

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆங்கிலத்-தமிழ் சொற்களஞ்சியத்தில் Vulgur என்பதற்கு இழிவான, கொச்சையான, தாழ்வான, நயநாகரிகமற்ற, பொது வழக்கிலுள்ள, பெரு வழக்கிலுள்ள என்று பொருள்கள் கூறப்பட்டுள்ளன.[28]

தமிழ் லெக்ஸிகனில் கொச்சை என்ற சொல்லுக்கு இழிசொல், திருந்தாப் பேச்சு என்று பொருள்கள் கூறப்பட்டுள்ளன. தமிழ் லெக்ஸிகனில் கொச்சைச் சொற்களாக 109 சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சொற்கள் யாவும் பொது வழக்கிலுள்ள சொற்களும் இலக்கியத்திலிருந்து திரிந்த சொற்களும் ஆகும். அவை:

S.No.	Vul.(Vulgar Usage)	Page No
1	அக்கா	3
2	அக்கிராரம்	5
3	அக்குசு	7
4	அகுதி	17
5	அங்கிட்டு	21
6	அச்சரம்	24
7	அத்தயம்	66
8	அப்பச்சி	85
9	அம்மணக்குண்டி	98
10	அரையல்	139

11	அரையலள்	139
12	அல்லத்தட்டுதல்	140
13	அவலைதுலளை	155
14	அவுசாக	159
15	அவுசு	159
16	அஜாடி	197
17	அஸ்தப்பிரயோகம்	200
18	ஆண்பிள்ளை	222
19	ஆணுவம்	224
20	ஆத்தா	224
21	ஆத்தாடி	224
22	ஆத்தி	224
23	ஆத்தை	225
24	ஆமக்கள்	234
25	ஆமக்கன்	234
26	ஆராதூரி	243
27	இண்டிமாமா	289
28	இழிவழக்கு	351
29	ஈச்சத்தோல்	374
30	உச்சுதல்	390
31	உடான்	399
32	உடான்விடுதல்	399
33	உடானடித்தல்	399

34	உடைதல்	401
35	உடைத்தானவன்	401
36	உண்டைவிடுதல்	404
37	உணத்துதல்	405
38	உம்மணாமூஞ்சி	430
39	உரித்தானவன்	441
40	உவாத்திச்சி	465
41	உள்ளடி	471
42	உள்ளரங்கம்	472
43	உஜீர்	489
44	எகனை	508
45	எச்சக்கலை	509
46	எத்துவார்த்தை	521
47	எதிர்முழி	524
48	எதுக்களித்தல்	526
49	ஒத்தடிப்பாதை	590
50	ஒத்தி	591
51	ஒய்ப்பிடியாள்	626
52	கக்கிசம்	633
53	கசண்டு (Colloq)	640
54	கசர்ப்பாக்கு	641
55	கசர்பிடித்தல்	641
56	கஞ்சிகாய்ச்சுதல்	643

57	கடகோட்டி	657
58	கண்ணுப்பீ	696
59	கண்முழி	700
60	கத்திரி	708
61	கஷ்கம்	839
62	காக்காய்	840
63	காதவடி	862
64	காதுப்பீ	864
65	கிசிமிசி	914
66	குண்டிக்கொழுப்பு	979
67	குண்டிப்பட்டை	979
68	குந்தக்கம்	994
69	குரக்கொளி	1010
70	குழுதாடி	1034
71	குளுகுளுத்தல்	1042
72	குளுத்தி (J)	1042
73	கூமுட்டை	1074
74	கைவைத்தல்	1124
75	கொண்டைமுசுறு	1146
76	சகபாடி	1216
77	சஞ்சாரம்	1234
78	சண்ணுதல்	1246
79	சதக்கல்	1253

80	சதிரம்	1257
81	சரகு	1310
82	சாசாமம்	1318
83	சள்ளுப்புள்ளு	1341
84	சளப்புதல்	1341
85	சாக்கிபாக்கி	1350
86	சிதம்புதல் (Loc)	1423
87	சிம்பு	1423
88	சிரைதொழில் (J)	1430
89	சின்னச்சலவாதை	1467
90	சுண்ணி	1508
91	சும்பனம்	1519
92	சும்பித்தல் (Colloq)	1520
93	சூத்தடித்தல்	1560
94	சூத்து (Loc)	1561
95	தக்கம்	1702
96	தடவுதல்	1725
97	தண்டு (Nāñ, Colloq)	1735
98	தண்ணி	1736
99	தண்ணீர்முட்டாள்	1737
100	தாந்திரம்	1832
101	தொப்பல்	2030
102	நீச்சுத்தண்ணீர்	2295

103	நெத்தம்	2341
104	நேர்பிடித் - தல்	2358
105	நொட்டு – தல்	2364
106	நொட்டு	2364
107	நோனி	2374
108	பிரசாபதி (Loc)	2671
109	வெள்ளணாங்காட்டி	3791

வணிகர் வழக்கு - Mercant. - Mercantile usage

தொழில் நிமித்தமாக வணிகர்கள் பேசும் பேச்சுவழக்கை வணிகர் வழக்கு எனலாம். இவ்வழக்கும் இடத்திற்கு இடம் தொழிலுக்குத் தொழில் மாறுபடும். இருப்பினும் பேரகராதியில் இக்குறிப்பானில் ஒரே ஒரு சொல் மட்டுமே பதிவாகக் காணப்படுகிறது.

தெரிசனை - ப. 2035

இராணுவ வழக்கு -- (Mil.) – Military, Mil. - Military usage

இராணுவ வழக்குச் சொல்லாக ஒரு சொல்கூடப் பேரகராதியில் பதிவு செய்யப்படவில்லை.

குழந்தைகள் பேச்சு வழக்கு - Nurs. - Nursery usage

குழந்தைகள் பேச்சு வழக்குச் சொற்களாகத் தமிழ்ப் பேரகராதியில் இருபத்தொன்பது சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

அத்தாய்	ப. 66
அப்பச்சி	ப. 85
அப்பூச்சிகாட்டுதல்	ப. 88
அம்புலி அம்மான்	ப. 97
அம்மு	ப. 100
ஆக்காட்டுதல்	ப. 202
ஆப்பு	ப. 232
ஆம்பான்	ப. 233

ஆய்	ப. 236
உம்மான்டி	ப. 430
ஒச்சி	ப. 583
ஒஞ்சி	ப. 584
கக்கி	ப. 633
கச்சுதல்	ப. 638
சந்தமாமா	ப. 1263
சாசி	ப. 1355
சிங்கங்காட்டுதல்	ப. 1403
சோச்சி	ப. 1662
சோச்சிபாச்சி	ப. 1662
தாச்சிக்கொள்ளுதல்	ப. 1824
தாச்சுக்கொள்ளுதல்	ப. 1824
தூத்தம்	ப. 2015
பப்பு	ப. 2483
பாச்சி	ப. 2588
பாப்பம்	ப. 2610
பாப்பா	ப. 2610
ஜீ	ப. 3878
ஜு	ப. 3878
ஜோகொட்டிக்கொள்ளுதல்	ப. 3880

சிறுவர்கள் பேச்சு வழக்கு - *Child* - Children's usage

சிறுவர்கள் பேச்சு வழக்குச் சொற்களாக இதில் இரண்டு சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன. அவை:

டுவிடுதல்	ப. 1698
தச்சி	ப. 1712

எண்ணெய் வியாபாரிகள் பேச்சு வழக்கு - Oil-monger. - Oil-monger's usage

எண்ணெய் வியாபாரிகள் பேச்சு வழக்குச் சொல்லாக இதில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

2. பொதுவான சொற்பதிவுகள்.

பொதுவான சொற்பதிவுகளை நான்கு பிரிவுகாளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

1. வட்டாரம் -- Dial. -- Dialectal
2. மாவட்டம் -- Dist. -- District
3. இழி வழக்கு -- *Slang. -- Slang usage*
4. உள்ளூர் வழக்கு -- *loc.* - Local *Loc.- Local usage*

2.1. வட்டாரம் -- **Dial. -- Dialectal**

கிளைமொழி **Dialectal** என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சுமொழியின் வகையைக் குறிப்பதாகும். இத்தகைய பேச்சுமொழிச் சொற்கள் **Dial. -- Dialectal** என்ற குறிப்பானில் குறிக்கப்பட்டுள்ளன. அவை:

அஞ்சலப்பெட்டி	(ப. 36)
அடப்பம்	(ப. 44)
அந்தராட்டிக்குருக்கள்	(ப. 81)
அபயஸ்தம்	(ப. 90)
அபயாஸ்தம்	(ப. 90)
அமக்களம்	(ப. 100)
அமத்தல்	(ப. 101)
அமில்	(ப. 105)
அமினா	(ப. 105)
அரட்சி	(ப. 119)
அரியண்டம்	(ப. 127)
அருக்கஞ்சட்டி	(ப. 129)
அருவுகால்	(ப. 136)
ஆக்கரோஷம்	(ப. 203)
ஆதானை	(ப. 227)
ஈரங்கொல்லி	(ப. 380)
ஈரங்கோலி	(ப. 380)
உத்தாரம்	(ப. 409)
உதயாலை	(ப. 413)
உறுப்புதல்	(ப. 485)

ஊர்ச்சுற்று	(ப. 498)
ஊரணி	(ப. 500)
எரிவந்தம்	(ப. 532)
எருக்கழித்துக்கொடுத்தல்	(ப. 532)
ஐந்தச்சு	(ப. 577)
ஒப்பித்தல்	(ப. 595)
ஒருக்கால்	(ப. 597)
கத்திரி	(ப. 708)
துழா - தல்	(ப. 1998)

2.2. மாவட்டம் -- Dist. -- District

Dist. -- District என்ற குறிப்பானில் ஒரே ஒரு சொல் மட்டுமே பதிவாகக் காணப்படுகிறது.

இளந்தலை -- (ப. 355)

2.3. இழி வழக்கு -- *Slang. -- Slang usage*

இழி வழக்குச் சொல்லாக இதில் *Slang. -- Slang usage* என்ற குறிப்பானில் ஒரே ஒரு சொல் மட்டுமே பதிவாகக் காணப்படுகிறது.

பப்பு- தல் -- (ப. 2483)

2.4 உள்ளூர் வழக்கு – *Loc.- Local usage*

Local என்பதற்கு உள்ளூர், வட்டாரம், இருப்பிடம் என்று நேரடியான பொருள் கூறலாம். அதாவது belonging to a place, participating to a particular place[29] என்று lifco dictionary பொருள் கூறுகிறது. Local என்பதற்கு "இடஞ்சார்ந்த" உள்ளூருக்குரிய; நில வட்டத்திற்குரிய; குறிப்பிட்ட இடத்திலுள்ள; [30] என்னும் பொருள்கள் கூறப்படுகின்றன.

உள்ளூர் என்னும் பெயர்ச்சொல்லிற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடப்படும் ஊரும் அதைச்சார்ந்த பகுதியும் அதாவது local town; that which is local[31] என்று பொருள் கூறுகிறது. வட்டாரம் என்பதற்குக் குறிப்பிடப்படும் இடமும் அதைச் சுற்றியுள்ள பகுதியும், 'பிரதேசம்' [32] என்றும் பொருள் கூறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களின்படி ஒரு வட்டாரத்தில் குறிப்பிட்ட இடம் சார்ந்த மக்களால் பேசப்படும் மொழியை உள்ளூர் மொழி (local language) எனக் கொள்ளலாம்.

தமிழ்ப் பேரகராதியில் உள்ளூர் வழக்குச் சொற்களே மிக அதிமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை: (காண்க: பின்னிணைப்பு- 5)

அக்காத்தி	-- (ப. 4)
இட்டேறி	-- (ப. 276)
ஏகனை	-- (ப .508)
ஓச்சல்	-- (ப. 618)
கறக்குதல்	-- (ப. 824)
கிட்டங்கி	-- (ப. 915)
குறளை	-- (ப. 824)
சமசு	-- (ப. 1289)
சோமாறி	-- (ப. 1673)
நவாது	-- (ப. 2181)
படவா	-- (ப. 2433)
மஞ்சூல்	-- (ப. 3011)
வத்தை	-- (ப. 3488)
நாள்விருந்து	-- (பி..ப. 334)
பிசுக்காரம்	-- (பி..ப. 360)
ஸீசகம்	-- (பி..ப. 422)

தொகுப்புரை

- மக்களின் இயல்பான பேச்சு மொழியும் ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த மக்களின் வட்டார மொழியும் ஒரு இனத்தைச் சேர்ந்த மக்களின் சாதி வழக்கும் உலக வழக்கும் இலக்கிய வழக்கும் மொழியின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிக்கின்றன.
- தமிழ்ப் பேரகராதியில் வட்டாரம் சார்ந்த பதிவுகளாக எண்பத்து இரண்டு குறிப்பான்கள் உள்ளன. இவையாவும் ஊர், இடம், நகரம், நாடு, உள்பிர், வட்டாரம், ஜாதி, குழு என்றும் திசை, பொது என்றும் பிரித்து ஆராயப்பட்டுள்ளன.
- ஊர், இடம், நாடு தொடர்பான குறிப்பான்களில் சொல் சேகரிப்பு மிகவும் குறைவாகவும் சில குறிப்பான்களுக்குச் சொற்களே சேகரிக்கப்படாமலும் உள்ளன.
- குறிப்பான்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஒன்று நேராகவும் மற்றது சாய்வான எழுத்திலும் தரப்பட்டுள்ளன.
- Cd. , *Cd.* என்னும் குறிப்பான்களில் ஒரு சொல்கூடப் பேரகராதியில் பதிவாகக் காணப்படவில்லை.
- Cm. – Coimbatore என்னும் குறிப்பானில் ஒரு சொல்கூடப் பதிவு செய்யப்படவில்லை. பேரகராதியில் சுருக்கக் குறிப்பானில் குறிப்பிடப்படாத *Coim.* என்னும் குறிப்பானில் மூன்று சொற்கள்கள் இடம்பெற்றுள்ளன.
- Ct. , *Ct.,* என்னும் குறிப்பான்களில் ஒரு சொல்கூடப் பேரகராதியில் பதிவாகக் காணப்படவில்லை.
- Ma., Md., Madr., என்னும் மூன்று வகையான குறிப்பான்களில் மெட்ராஸ் வட்டார வழக்குச் சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் Ma. என்ற குறிப்பானில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.
- Madu. – Madura, Mr. Madura* என்னும் குறிப்பான்களில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.
- சேலம் வழக்குச் சொற்களாக Sm. – Salem என்ற குறிப்பானில் எவ்விதச் சொல்லும் பதிவாக இல்லை.
- Tn.-Tinnevelly என்ற குறிப்பானில் ஒரு சொல்கூடப் பதிவாகக் காணப்படவில்லை.

- புதுக்கோட்டை வழக்குச் சொற்களாகப் பேரகராதியில் ***Pd.*** என்ற குறிப்பான்களில் ஒரு சொல்லும், ***Pudu.*** என்ற குறிப்பானில் ஒரு சொல் பதிவாகக் காணப்படுகிறது.
- வட்டார வழக்குச்சொல் பதிவில் உள்ளூர் (*Loc.- Local usage)* வழக்குச்சொற்களே தமிழ்ப் பேரகராதியில் மிக அதிகமான அளவில் பதிவாகக் காணப்படுகின்றன.
- பிலாக்காய்க்கொத்துமணி, பூக்கடுக்கன், முட்டுப்பாந்தை என்னும் இம்மூன்று சொற்கள் மட்டும் ***Parava.*** என்னும் குறிப்பானில் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் பேரகராதியின் குறிப்பான்கள் பட்டியலில் ***Parav.*** என்னும் குறிப்பான்தான் உள்ளது. மற்ற சொற்கள் ***Parav***. என்னும் குறிப்பானில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
- ஜாதி வழக்கில் குறிப்பானாக உள்ள செம்படவர், கோமுட்டி, புலையர், சுமந்திரா பிராமணர், வள்ளுவர், நெசவாளர் முதலானோர் வழக்குகளும் இராணுவம், எண்ணெய் வியாபாரிகளின் பேச்சு வழக்குச் சொற்களும் தமிழ்ப் பேரகராதியில் காணப்படவில்லை.

குறிப்புகள்

1. இமையம், www. Kalachuvadu.com/ issue – 86
2. சக்திவேல். சு., 2000, தமிழ்மொழி வரலாறு. ப. 297
3. சுப்பிரமணியம்.ச.வே., 1999, தொல்காப்பியம், ப.328
4. கமில் ஸ்வெலபில்., 1962, சரஸ்வதி களஞ்சியம், ப. 219
5. பெருமாள்முருகன்., 2000, கொங்கு வட்டாரச் சொல்லகராதி, முன்னுரை, ப.15
6. மேலது, ப.15
7. சக்திவேல். சு., 2000, தமிழ்மொழி வரலாறு, ப. 297
8. மேலது, ப. 298
9. மேலது, ப. 299
10. மேலது, ப. 301
11. மேலது, ப. 303
12. Yesudhasan. ,1976, Kanyakumari Tamil as a Reginoal Dialect, p. 762- 767
13. www. wikipedia.org., தமிழ் வட்டார மொழி வழக்குகள்.
14. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1989, தமிழின் மறுமலர்ச்சி, ப. 437
15. மேலது, ப. 442
16. மேலது, ப. 443
17. சக்திவேல். சு., 2000, தமிழ்மொழி வரலாறு, ப. 310
18. ஆங்கிலத்-தமிழ்ச் சொற்களஞ்சியம், 1992, சென்னைப் பல்கலைக்கழகம், ப.206
19. பூபதி. எஸ்., 1998, தமிழ்நாட்டின் மொழிச்சூழல், ப.265
20. மேலது, ப.146.
21. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தகவல் சிற்றேடு, ப. 22.
22. பூபதி. எஸ்., 1998, தமிழ்நாட்டின் மொழிச்சூழல், ப.219.
23. மேலது, ப.220
24. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தகவல் சிற்றேடு, ப. 24

25. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தகவல் சிற்றேடு, ப. 22

26. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1989, தமிழின் மறுமலர்ச்சி, ப. 414

27. Winslow, M., Tamil And English Dictionary, 1991, p. 363

28. ஆங்கிலத் - தமிழ்ச் சொற்களஞ்சியம், 1992, சென்னைப் பல்கலைக்கழகம், ப.1184

29. Mega Lifco Dictionary, 2002, p. 651

30. ஆங்கிலத்-தமிழச் சொற்களஞ்சியம், 1992, சென்னைப் பல்கலைக்கழகம், ப. 597

31. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 2008, ப. 219

32. மேலது, ப. 1194

இயல் : நான்கு

4. சிக்கல்களும் தீர்வுகளும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற பவணந்தி முனிவரின் கூற்றுக்கேற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் சொற்கள் மாற்றமடைந்து வருகின்றன. மொழியில் ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களைத் தன்னகத்தே பதிவாகக் கொண்டவை நிகண்டுகளும் அகராதிகளும். செய்யுள் நடையில் அமைந்த நிகண்டுகளும் காலப்போக்கில் வழக்கிழந்துவிட்டதால் அகராதியின் தேவை அதிகமாயிற்று.

கிரேக்க, இலத்தீன் மரபுகளில் ஓலைச்சுவடியின் வரிகளுக்கு இடையேயும் ஓரங்களிலும் பொருளாய் எழுதப்பட்ட அயல்மொழிச் சொற்கள் சொற்றொகுதியாய்த் தொகுக்கப்பட்ட காலத்திலேயே இருமொழி அகராதி தோற்றம் பெற்றது எனலாம். தமிழகத்திற்கு வந்த ஐரோப்பியர்கள் தத்தம் தாய்மொழிக்கு இணையான தமிழ்ச்சொற்களை அறிய முற்பட்டதன் விளைவாய் இருமொழியகராதிகள் தோன்றின. இவ்வாறு உருவாக்கப்பட்ட அகராதிகளே தமிழுக்கு அகராதியியல் நெறிமுறைகள் பலவற்றையும் அறிமுகப்படுத்தின. இதனால் தமிழ் அகராதி மரபும் வளம் பெற்றது.

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப் பெரிய இருமொழி அகராதி சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ் லெக்ஸிகன் ஆகும். ஏழு தொகுதிகளாக வெளிவந்த இவ்வகராதியில் இடம் பெற்ற சொற்கள் மட்டும் (1,04,405 + 20,000) 1,24,405 ஆகும்.

- ஒப்புருச்சொல், பல்பொருட் சொற்களைத் தனிப் பதிவுகளாய் அமைத்து அசை^{1}, அசை^{2}, மாலை^{1}, மாலை^{2}, என எண் தருதல்.
- பதிவுச்சொல்லிற்கு ஆங்கிலத்தில் எழுத்துப்பெயர்ப்புத் தருதல்
- வினையடியைப் பதிவாய்த் தருகையில் கலை-தல், கலை-த்தல் எனத் தல், த்தல் விகுதியுடன் பதிவாய் அமைத்தல்.
- வினைவகைப்பாட்டு எண்ணைப் பதிவில் தருதல்.
- பதிவுச்சொல்லின் இனமொழிச் சொற்களையும் தருதல்.
- சொல்மூலம் காட்டல்.
- செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினைக் குறிப்பையும் பிறவினைக் குறிப்பையும் தருதல்.
- வட்டார வழக்கு, கொச்சை வழக்கு, சைவ வழக்கு, கோவை வழக்கு, நாஞ்சில்நாட்டு வழக்கு என்னும் பலவகைக் குறிப்பான்களைத் தருதல்.
- மேற்கோள் தருதல்.
- குறுக்கு நோக்கீடு தருதல்

என்பன போன்ற பல்வேறு பதிவுக்கூறுகளைக் கொண்ட சிறந்த அகராதியாய் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மொழியில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமே இருக்குமானால் அதற்கு அகராதி இயற்றுவது எளிது. ஆனால் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமே உடைய மொழியாக உலகில் எம்மொழியும் இருப்பதாகத் தெரியவில்லை. பல பொருள்கள் இருப்பதே சிறப்பு எனக் கருதப்படுகிறது. இந்நிலையில் அகராதி இயற்றும்போது பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன. அச்சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது என்பது முள்வேலியின்மேல் படர்ந்திருக்கும் சிலந்தி வலையினைப் பக்குவமாய்ப் பிரித்தெடுத்து வேறிடத்தில் சேர்ப்பது போன்றதாகும். அகராதி உருவாக்கம் குறித்துப் பா.ரா. சுப்பிரமணியம் குறிப்பிடுகையில்,

> மொழிக்கு ஒரு புதிய அகராதி உருவாக்கும்போது முன்னர் எழுந்த பேரகராதிகளில் உள்ள சொற்களோடு பின்னர்த் தோன்றிய புதுச் சொற்களையும், பழைய சொற்களுக்குக் கால இடைவெளியில் தோன்றிவிட்ட புதுப் பொருளையும் தொகுப்பது முதல் வேலை. ஆனால் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்வதும், புதுப்பொருளைச் சொல்லின் ஏனைய பொருளோடு, கருத்துப் பொருத்தம் அறிந்து இணைப்பதும் வெறும் தொகுப்பு வேலை அல்ல. இது சிந்தனைக்குரிய வேலை. ஓர் அகராதி தொகுக்கிறீர்களா? என்று யாராவது கேட்டால் இல்லை அகராதி உருவாக்குகிறோம் என்றுதான் அகராதிப் பணியின் படைப்பு நுண்மையை அறிந்தவர்கள் கூறுவார்கள்[1]

என்கிறார். அத்தகைய மிகவும் சிக்கலான, கடினமான பணி அகராதி உருவாக்கமாகும்.

சிக்கல்கள்

ஒரு சமூகத்தில் பேசப்படும் மொழிக்குள்ளேயே தனிமனித வழக்கு, பொது வழக்கு, வட்டார வழக்கு, காலம், இடம், துறை என்னும் பல்வேறு அடிப்படைகளில் மொழி வேறுபாடுகள் அதிகமாக உள்ளன. ஒரு மொழிக்குள்ளேயே இவ்வளவு வேறுபாடுகள் என்றால் இருவேறு சமூக மொழிகளுக்கு இடையே பல வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பாகும். இச்சூழலில் இத்தகைய இருவேறு மொழிகளுக்கு அகராதி தயாரிப்பது என்பது எளிதானதன்று.

பல்வகைச் சிறப்பு பெற்ற தமிழ்மொழிக்கு வின்சுலோ உருவாக்கிய அகராதி முழுமையானது அன்று என உணர்ந்த பெட்ரிக் நிக்கல்சன், 1905ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதில் தமிழ்மொழிக்குச் சிறந்த அகராதி ஒன்றினைச் சென்னை மாகாண அரசின் நிதியுதவியுடன் சென்னைப் பல்கலைக்கழகத்தின்

மூலம் உருவாக்கப்படவேண்டும் என்றார். அதனை ஏற்றுக்கொண்டு சென்னை மாகாண அரசும் தமிழ்ப் பேரகராதியினை உருவாக்கி வெளியிட்டது.

நவீன வசதிகள் இல்லாத காலத்தில் தமிழ்மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறும் நோக்கத்தில் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய அகராதி இதுவாகும். இத்தகைய பணியில் சிக்கல்கள் ஏற்படுவது இயல்பு. அவை :

- இவ்வகராதிப்பணி தொடங்கப்பட்ட காலம்முதல் இவ்வகராதி வெளிவரும் காலம்வரை பல்வேறு குழுக்கள் இப்பணியினைச் செய்தன.
- ஆட்சிக்குழுவிலும் பிரதிநிதிகளின் குழுவிலும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடாது விலகியது.
- லெக்ஸிகன் உருவாக்கக் குழுவில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் சொற்சேகரிப்பில் ஆர்வம் காட்டாதது.
- இவ்வகராதியினை உருவாக்க 1905ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரை எடுத்துக்கொண்ட கால மிகுதி.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, மொழி வளர்ச்சிக்கு உகந்த இப்பணிக்காக அப்போதைய அரசு ஒதுக்கிய நிதி மிகக் குறைவு.

தமிழ்ப் பேரகராதியில் பல்வேறு குறைகள் இருப்பதாக ஞா.தேவநேயப்பாவாணர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு என்ற நூலே வெளியிட்டுள்ளார். அதில்,

> சொல் வழு, பொருள் வழு, வேர் வழு, இலக்கண வழு, மரபு வழு, அகராதியமைப்பு வழு, அகராதியாசிரியர் குறைகள், சென்னைப் பல்கலைக்கழக அமைப்புக் குறைகள் [2]

எனப் பல்வேறு தலைப்புகளில் இவ்வகராதியில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. **சொல் வழு:** அம்மை வார்த்தலை அம்மை போடுதல் என்பது மரபு. அதை அம்மை கட்டுதல் என்று குறித்து, அவ்வழுவை அழுத்திக் காட்டினாற்போல் "வீட்டில் குழந்தைக்கு அம்மை போட்டிருக்கிறது" என்று எடுத்துக்காட்டும் தரப்பட்டுள்ளது.

2. **பொருள் வழு:** அகச்சுட்டு என்னும் சொல்லுக்கு, ஆங்கில விளக்கத்திலுள்ள எடுத்துக்காட்டுகளைத் தவிர, தமிழில் விளக்கமாவது பொருளாவது கூறப்படவில்லை.
   ஆங்கிலம் அறியாதவருக்கு இத்தகைய விளக்கம் பயனற்றதாம். அசாக்கிரதையென்னும் சொல்லுக்கு முற்றிலும் ஆங்கிலத்திலேயே பொருள்

கூறப்பட்டுள்ளது. அஞ்சுருவாணியென்னும் சொல்லுக்கு ஆங்கிலத்தில் விளக்கம் கூறி, தமிழில் அச்சாணி என்ற சொல் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது.

3. **வேர் வழு:** கோவணம் என்னும் வடசொல்லுக்கு நேர் தென்சொல் குளிசீலை, தாய்ச்சீலை, நீர்ச்சீலை என்பன. குளிசீலை என்பது குளிக்கும்போது கட்டிக்கொள்ளும் துணி என்று பொருள்படுவது. இதைக் குழிசீலை என்ற வடிவிலும் காட்டி, குழி என்பதை, குழியாக்குதல் அல்லது செதுக்குதல் என்று பொருள்படும் சொல்லாகக் குறிக்கப்பட்டுள்ளது.

4. **இலக்கணக் குறிப்பு வழு:** அகச்சுட்டு என்பது சுட்டு முன்னொட்டு அன்று. சுட்டடியே. ஆனால் இது தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. அஞ்சலப் பெட்டி, அஞ்சாரப்பெட்டி என்பவை அஞ்சறைப்பெட்டி என்பதன் கிளை வழக்கு வேறுபாடு அல்ல. கொச்சைத் திரிபே. இதுவும் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது.

5. **அகராதியமைப்பு வழு:** வின்சுலோ அகராதியில், அடிப்படைச் சொற்கள் பெரிய எழுத்திலும் அவற்றினின்று திரிந்துள்ள தனிச்சொற்களும் கூட்டுச்சொற்களும் சிறிய எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதுவே சரியான முறையாகும். சென்னையகராதியில் எல்லாச் சொற்களும் சிறிதும் வேறுபாடின்றி ஒரேயளவான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இதனால் ஆராய்ச்சியில்லாதார் அல்லது புலவரல்லாதார் சொற்றிரிவு முறையை அறியவும் இயற்சொல்லையும் திரிசொல்லையும் பிரித்துணரவும் இயலாதிருக்கின்றது.

6. **அகராதியாசிரியர் குறை:** இவ்வகராதியினைத் தொகுத்த ஆசிரியருள் தலைமையான பொறுப்பு வாய்ந்தவர், அகராதிப் பணிக்குழுவின் தலைமைத் தமிழ்ப் பண்டிதரான பெரும்புலவர் மு.இராகவையங்காரும் பதிப்பாசிரியரான வையாபுரிப்பிள்ளையும் ஆவர். மறைமலையடிகளும் தமிழ் வடமொழித் துணையினரும் அகராதியாசிரியர் குழுவில் சேர்க்கப்படவில்லை. தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் பதிப்பாசிரியரும் மரக்கறி உணவினர். அதனால், ஊனுணவுப் பொருள்களைத், தாமாக அறியவோ பிறர் அவற்றைப்பற்றித் தவறாகயெழுதின் அத்தவறைக் கண்டுபிடிக்கவோ ஆற்றலிலராயினர்.

7. **சென்னைப் பல்கலைக்கழக அமைப்புக் குறை:** தமிழகராதி தொகுக்கப்பட்ட காலமெல்லாம் துணைக் கண்காணகராயிருந்தவரும் தமிழறியாதாரும் தமிழ்ப்பற்றற்றவருமான ஐரோப்பியரும் பிராமணரும் தெலுங்கரும் மலையாளியாருமே. யாரேனும் ஒருவர் தமிழ்க் குடிவழிவந்து தமிழ்க்குலப்

> பட்டப்பெயரே தாங்கித் தமிழரென்று கருதத்தக்கவராயிருப்பினும் அவர் தம்மைத் தெலுங்கரென்று சொல்பவராயும் பல்கலைக்கழகச் சொற்பொழிவுகளையெல்லாம் ஆங்கிலத்தில் ஆற்றுபவராயும் தனித்தமிழை வெறுப்பவராயுமுள்ளனர்.

மேற்கண்ட பல்வேறு காரணங்களாலும் குறைகள் உள்ளன என்கிறார். ஆனால் இப்பணியின் அருமை உணர்ந்த பெ.மாதையன்,

> பணிச்சுமைகள் மிகுந்தது அகராதி உருவாக்கம் என்பதால் குறைபாடுகள் என்பன அகராதி உருவாக்கத்தின் ஒரு கூறாகவே இருப்பது இயல்பு. இருந்தபோதிலும் குறைபாடுகள் இல்லாத அகராதி உருவாக்கம் என்பது எதிர்பார்ப்பாய் இருக்கலாமேயன்றி அது நடைமுறைச் சாத்தியமன்று[3]

என்கிறார். மேற்கண்ட இரு அறிஞர்களின் கூற்றுப்படி இவ்வகராதியினை நோக்கினால், பெ.மாதையன் அகராதியியல் நெறிமுறைப்படி அகராதியில் இவ்வகைச் சிக்கல் ஏற்படுவது இயல்பானது, பின்வரும் காலங்களில் தீர்க்கக்கூடியது என்கிறார். ஆனால் ஞா.தேவநேயப்பாவாணர் மிகுந்த மொழியுணர்ச்சி உடையவர். இவர் கூறும் குறைகள் யாவும் அவரின் மொழியுணர்வின் அடிப்படையில் கூறும் குறைகளேயாகும் எனலாம்.

ஒரு அகராதியினைத் தயாரிக்கும்போது ஏற்படும் சிக்கல்களைப் போலவே அவ்வகராதியினைப் பயன்படுத்தும்போதும் பயன்பாட்டாளருக்குப் பல்வேறு விதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குப் பதிவுகளில் ஏற்படும் சிக்கல்கள், பொதுவான சொற்பதிவில் ஏற்படும் சிக்கல்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அவை :

1. பொதுவான சொற்பதிவில் ஏற்படும் சிக்கல்கள்
2. வட்டார வழக்குப் பதிவில் ஏற்படும் சிக்கல்கள்

1. பொதுவான சொற்பதிவில் ஏற்படும் சிக்கல்கள்

பொதுவான சொற்பதிவில் மூன்று நிலைகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவை:

1. நிகரான சொற்களின்மை
2. சொற்பொருள்
3. வினைப்பதிவில் பொருள் தருமுறை

1.1. நிகரான சொற்களின்மை

ஒவ்வொரு மொழிக்கும் பண்பாட்டுச் சூழலும் தனித்தன்மையும் இலக்கண, இலக்கிய வளமும் வேறுபாடு உடையனவாய் உள்ளன. பொதுவான உலகியல் பொருளுக்கும் கருத்திற்கும் சில மொழிகளில் சொற்கள் இல்லாதிருப்பதும் உண்டு. பிஞ்சு, காய், செங்காய், கனி, அரும்பு, அலர், வீ, சருகு, பழுப்பு முதலான சொற்களுக்கு நிகராகப் பிறமொழியில் சொற்கள் இல்லை. தமிழில் மல்லிகை, முல்லை முதலான மலர்கள் உண்டு. இவை ஆங்கிலத்தில் Jasmine என்னும் பொதுச்சொல்லால்தான் குறிப்பிடப்படுகின்றன.

அரும்பு arumpu, n < அரும்பு. 1. Bud: மொட்டு. ப. 134

காய்[3] kay, n, < [T. kaya, K.M. kay, Tu. Kayi.] Unripe fruit. ப. 875

செங்காய் cen – kay, n < id + [K. kengay.] Fruit almost ripe: பழுக்கும் பருவத்துள்ள காய். ப. 1579

> உலகியற் பொருள், கருத்து, கருதுகோள் என்னும் பொருண்மைகள் இரு பண்பாடுகளிலும் வழக்கிலிருக்கவும் அவற்றைக் குறிக்கும் சொற்கள் ஒருமொழியிலிருந்து மற்றொன்றில் இல்லாதிருத்தல் இயல்பாகும் [4]

என்கிறார் அ.அ. மணவாளன். இதற்கு உதாரணமாக பிஞ்சு, காய் போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் இல்லாததைக் குறிப்பிடுகிறார். பண்பாடு, நாகரிகம் வேறுபாடு காரணமாக ஒத்த பொருட்சொற்கள் இல்லாத தன்மையும் ஏற்படுகின்றது. அகப்புறக் கோட்பாடுகள், அம்மி, குழவி, முறம், அஞ்சறைப்பெட்டி, உரல் போன்ற உலகப் பொருட்கள், மதம் தொடர்பான சொற்கள், நாட்டுப்புற வழக்காறுகள், சடங்குகள், விழாக்கள், மருத்துவம், இழி சொற்கள் போன்ற பல்வேறு நிலைகளில் தமிழின் சொற்றொகுதிகள் வேறுபட்டவையாய் உள்ளன.

அம்மி n. [M. ammi] Horizontal stone for macerating spices for curry, grinding fine mortar and other substances. ப. 100

அஞ்சறைப்பெட்டி n. Spice box with five compartments, one in the middle and four surrounding. ப. 36

உரல் n. Mortar, large or small. ப. 439

களவுப் புணர்ச்சி n. Clandestine union between lovers before marriage without the knowledge of others. ப. 814

> இவற்றைப் போலவே இலக்கணச் சொற்களிலும் பல வேறுபாடுகள் உள்ளன. தகுமொழிக்கே உரிய இலக்கணக் குறியீடுகளாகிய இடைச்சொல், உரிச்சொல், இலக்கணத் தொழிற்பாடுகளாகிய அசைநிலை, இசைநிறை, அளபெடை போன்றவை இலக்குமொழிக் குறியீடுகளால் தரப்படவில்லை. இலக்கணக் குறியீடுகளற்ற இதனை அகராதியாளர்கள் ஒப்புமையின்மை 'anisomorphism' என்று குறிப்பிடுவார்கள் [5]

> இவ்வகைச் சொற்கள் எல்லாமே விளக்கச் சொற்பொருளுடன் மட்டுமே பதிவுகளாய்த் தரப்படும் என்கிறார். மொழிகளின் ஒப்புமையின்மையினால்தான் சொற்களை ஒப்புமைப்படுத்திக் காட்டுவதில் அடிப்படைச் சிக்கல்கள் உருவாகின்றன[6]

என அ.அ. மணவாளன், சுகுஸ்தா முதலானோர் குறிப்பிடுகிறார்கள்.

1.2. சொற்பொருள்

சொற்பொருளே அகராதிகளின் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணம். அகராதி தோன்றிய காலம், அகராதி வகை, அகராதித் தொகுப்பின் நோக்கம் போன்றவற்றால் அகராதியில் சொற்பொருள் தரும்முறை அகராதிக்கு அகராதி வேறுபடும்.

பொதுவாக அகராதிகளில் சொற்பொருள் மூவகை முறையில் தரப்படும் [7] என்கிறார் பெ.மாதையன். அவை:

1. ஒருபொருட் பலசொற்களைப் பொருட்சொல்லாய்த் தருதல்
2. ஒருவகை மரம், ஒருவகைப் பண், ஒருவகைப்பா என்னும் நிலையில் மீச்சொற்களைச் சொற்பொருளாய்த் தருதல்
3. விளக்கச்சொற்பொருள் தருதல்

மேற்கண்ட மூன்று முறைகளில் தமிழ்ப் பேரகராதியில் முதல் இரண்டு முறையே மிக அதிகமாகப் பின்பற்றப்பட்டுள்ளன. பண்பாட்டுச் சொற்கள், இலக்கண இலக்கியக் கலைச்சொற்கள், புராணத் தொடர்புடைய சொற்கள், சிலவகை நோய்கள், மதம், தத்துவம் தொடர்பான கலைச்சொற்கள் முதலானவை விளக்கச் சொற்பொருளுடன் பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன.

தமிழ்ப் பேரகராதியில் சொற்பொருள் தரும்முறையில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இணையான ஒத்த சொற்களான நாய் - dog, மரம் - tree, பூ - flower, புலி – tiger எனப் பொருள் தரும்போது எவ்விதச் சிக்கலும் ஏற்படுவதில்லை. இணையான சொற்கள் இல்லாத சூழலில் இலக்கு மொழியில் பொருள் தருவதில் பெரிதும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அகப்பை n. Ladle, large spoon with long handle use of coconut sheel ப.11

கற்பு n. Conjugal fidelity, chastity. ப.822

மேற்கண்ட பதிவுகளில் தரப்பட்ட Ladle, Chastity என்னும் சொற்கள் முழுவதும் ஒத்த பொருட்சொற்கள் அல்ல. இவை ஒருபுடை ஒப்புமை உடையனவாகவே உள்ளன.

> இணையான பொருட்சொற்களாய்த் தரப்பெறும் பலசொற்கள் பகுதி ஒப்புமை உடையனவாகவே இருக்கும். இருமொழிகளுக்கு இடையே ஒப்புமையின்மை காரணமாக முழுமையான ஒப்புமைச் சொற்கள் அருகியனவாயுள்ளன [8]

என சுகுஸ்தா குறிப்பிடுகிறார். தமிழில் தனித்தன்மை வாய்ந்த சொற்களான குடம், பூக்குடலை, உடுக்கை, முக்காலி, நாதஸ்வரம், அரைநாண், குத்துவிளக்கு, அங்கவஸ்திரம், தவில், நெற்றிச்சுட்டி, பல்லாங்குழி, பல்லக்கு போன்ற பலவகைச் சொற்களுக்கு நேரான சொற்பொருட்கள் தரப்படவில்லை.

அங்கவஸ்திரம் n. Upper cloth. ப. 20

அரைஞாண் n. Waistcord, Ornament worn round the waist. ப. 138

உடுக்கை n. Small drum tapering in the middle. ப. 399

குடலை n. Long cylindrical basket of palm leaf for fruits and flowers. ப.966

தவில் n. A kind of two headed drum. ப. 1795

பல்லாங்குழி n. A thick plank with 14 hollows, used in a particular kind of game. ப. 2528

மதம், செய்யுளியல், சடங்குகள், குறிப்பிட்ட தொழில்கள், ஜோதிடம், தொன்மம், புராணம் சார்ந்த பலசொற்கள் ஒரு மொழியில் உண்டு. ஆனால் இவை தொடர்பான பல சொற்கள் பிறமொழி இணைகள் இல்லாதனவாக உள்ளன.

அகங்காரான்மவாதி n. One who holds that aham-kare is the soul. ப. 8

அடிதண்டம் n. Prostration of a pilgrim who measures his way with his body in going to a temple. . ப. 48

சொற்பொருள் காண்பதில் வேறு சில சிக்கல்களும் ஏற்படுவதுண்டு. பொதுவாய் எல்லா மொழிகளிலும் ஒருபொருட் பலசொற்கள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. எனவே பொருட்பகுதியில் ஒனறுக்கு மேற்பட்ட ஒருபொருட் பலசொற்கள் பொருட் சொற்களாய்த் தரப்படும் நிலைகளும் உள்ளன.

கடை[1] n. End, termination, 2. conclusion. 3. Limit, boundary..4. Shop, bazaar, market . 5. Inferiority, baseness, meanness, lowness, least, lowest, worst. ப.676

கட்டு[1] n. To tie, bind, faster, shackle. ப. 651

இவ்வாறு பல சொற்களையும் அடுக்கித் தருவது பயன்பாட்டாளர்க்குப் பெரிதும் சிக்கலை உருவாக்கும். மொழிபெயர்க்கையில் எச்சொல்லைப் பயன்படுத்துவது என்னும் தடுமாற்றமும் எச்சொல்லின் அடிப்படையில் பொருளை விளங்கிக் கொள்வது என்னும் குழப்பமும் ஏற்படும். இத்தகைய சிக்கலைத் தவிர்க்கப் பொருத்தமான சொல்லை முதலில் தந்துவிட்டு, பிறகு ஒருபுடை ஒப்புமை உடைய சொற்பொருள்களை அடுத்தடுத்து தரலாம்.

> தமிழ் லெக்ஸிகனின் முதல் தொகுதியில் அதன் அமைப்பு முறை ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் "பொருள்" என்ற தலைப்பில் "தமிழ் லெக்ஸிகன் ஆரம்பக் கட்டத்தில் ஆங்கிலத்தில் பொருள் தருவதுதான் ஒரு முக்கியத் தேவையாகக் கருதப்பட்டது. ஆனால் தொகுதி இரண்டிலிருந்து ஆங்கிலப்பொருள் எந்த அளவிற்கு விளக்கமாக உள்ளதோ அந்த அளவுக்குத் தமிழ்ப் பொருளும் சமநிலையில் தரப்பட்டிருக்கின்றன" என்று கூறப்பட்டுள்ளது. இக்கூற்று தமிழ் அகராதியின் எல்லாச் சொற்களுக்கும் பொருந்துவதாக இல்லை என்பதற்குப் 'பினாமி' முதலான சொற்கள் உதாரணமாகும்[9]

என்கிறார். அதுபோல் 'தமிழர்' என்ற சொல்லுக்கு 'விளிம்பில்லாத தீர்த்தப் பாத்திரம்' என்று பொருள் தரப்பட்டுள்ளது.

தமிழர் tamilar, n, < E. Tumbler, drinking cup; விளிம்பில்லாத தீர்த்தபாத்திரம். ப. 1757

தமிளர் tamilar, n. See தமிழர் ப. 1757

டம்ளர் tamilar, n. பாத்திரவகை ப. 1695

> தமிழர், தமிளர் என்ற இரு ஒலிப்பு வடிவங்களும் போக 'டம்ளர்' என்ற வடிவத்திலும் இந்தச் சொல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு இத்தனை தர வேண்டியது அவசியம்தானா? 96,000 சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் எழுதி, அவற்றை முறைப்படுத்தி உரிய மேற்கோள்களாகத் தேர்ந்தெடுத்துத் தரும் பெரும் முயற்சியில் இது போன்ற பிழைகள் நேர்ந்துவிடுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது[10]

என்று பா.ரா. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு மொழியும் இயற்கைச் சூழல், பண்பாட்டுச்சூழல், நாகரிகச்சூழல், உலகப்பொருட்சூழல் என்னும் பலகூறுகளில் வேறுபட்டனவாய் உள்ளன. இவ்வேறுபாடுகள் இருமொழிகளிலும் ஒத்த சொற்கள் இருக்க வாய்ப்பு இல்லை என்பதை வெளிப்படையாக உணர்த்துகின்றன. அதேபோல் தாவரம், விலங்கு போன்றவற்றிலும் வீட்டு உபயோகப் பொருட்கள், உணவு, உடை, உலகப்பொருட்கள், மதம், சமூகப்பண்பாடு போன்ற பலவற்றிலும் வேறுபாடு உண்டு. இவற்றையெல்லாம் ஒன்று சேர்ந்த நிலையில்தான் அகராதியில் சொற்பொருட்கள் தரப்படவேண்டும்.

சொற்பொருள் கூறும் முறை குறித்து இதன் பதிப்பாசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகையில்,

> சொல்லின் வரலாற்றினை உணர்த்தும் இலக்கியங்களில் சொற்பொருள் வந்துள்ள வரலாற்றினை உணர்த்தும் பொருள்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்திக் கொடுத்தல் வேண்டும். சொற்பொருள்களையும் வியுத்பத்தி முதலியனவற்றையும் நன்றாக ஆராய்ந்து செய்யக்கூடுமானால் அது ஒவ்வொரு சொல்லுக்கும் ஜாதகம் கணிப்பதுபோலாகும். இன்ன காலத்தில் இன்ன இடத்தில் ஒரு சொல் பிறந்தது. இன்ன காலத்தில் இன்ன காரணத்தால் இன்ன வகையில் பொருள் மாறுபட்டது, இன்ன காலத்திற்குப்பின் மறைந்துவிட்டது; என ஒரு சொல்லின் ஜீவிய சரித்திரம் முழுதும் அகராதியில் காணவேண்டும். நூதன ஆங்கில அகராதியில் இவ்விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[11]

என்று குறிப்பிடுகிறார். ஆனால் சொற்பொருள் கூறும் முறை குறித்து பா.ரா. சுப்பிரமணியன் சில கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார். அவை:

> சொற்களுக்குப் பொருள் எழுதுவது குறித்தும் பொருள் எழுதுவதற்கான மொழி நடை பற்றியும் அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை. சொல்லுக்குப் பொருள் எழுதும் மொழிநடையைத் தேர்ந்தெடுப்பது அகராதி உருவாக்குபவர்களுக்குக் கிடைக்கும் குறைவான சுதந்திரங்களுள் ஒன்று. பொருள் எழுதும் மொழியானது அகராதியைப் பயன்படுத்துபவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியாக இருக்க வேண்டும். புரியக்கூடிய மொழியில் இருந்தால்தான் அகராதியின் பயன் அதிகரிக்கும். வையாபுரிப்பிள்ளை, பொருள் எழுதும் மொழியைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்காதது சற்று வியப்பாகவே இருக்கிறது.[12]

> மேலும் சில சொற்களுக்குத் தமிழில் தரப்பட்டிருக்கும் சொற்கள் அல்லது தொடர்கள் எளிதில் புரியக் கூடியதாக இல்லை. பொருளாகத் தரப்பட்டிருக்கும் சொல் பண்டைய இலக்கியச் சொல்லாகவோ கடினமான வடமொழிச் சொல்லாகவோ இருக்கிறது[13]

“பிறளியெண்ணெய்” என்பதற்குக் ‘குழந்தைகட்குக் கொடுக்கும் விரேசன மருந்தெண்ணெய் வகை’ என்ற விளக்கத்தில் ‘விரேசனம்’ என்ற கடினமான வடசொல்லுக்குப் பதில் ‘பேதி’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ‘பேதி’ என்ற சொல்லும் லெக்ஸிகனில் இடம் பெற்றிருக்கும் சொல்தான் என்கிறார்.

ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல் பொருளாகத் தரப்படும்போது, பொருளாகத் தரப்பட்டிருக்கும் சொல் எளிய சொல்லாக இருக்கவேண்டும். எளிய சொல்லாக இல்லையென்றால் அந்தச் சொல்லுக்கு என்ன பொருள் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக,

பினாமி	பெ. பேரிரவலான மலரணை	ப. 2729
மலரணை	malaranai, n, Benami, see பினாமி.	ப. 3103

இங்கு ‘மலரணை என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்று பார்த்தால் ‘மலரணை see பினாமி’ என்று தரப்பட்டிருக்கக் காணலாம். ‘பினாமி’ என்ற சொல்லும் ‘மலரணை’ என்ற சொல்லும் விளக்கப்படாமல் உள்ளன. இத்தகைய நிலையினை அகராதி உருவாக்குபவர்கள் தவிர்க்கலாம்.

4. வினைப்பதிவில் பொருள் தருமுறை

வினைப்பதிவில் பொருள் தருமுறையில் கீழ்க்கண்ட பல்வேறு சிக்கல்கள் தமிழ்ப் பேரகராதியில் உள்ளதாக பெ. மாதையன் குறிப்பிடுகிறார். பொதுவாக இருமொழி அகராதிகளில் வினைகளுக்கான பதிவுச்சொற்கள் வெவ்வேறு நிலைகளில் தரப்பட்டுள்ளதைப் போலப் பொருட்சொற்களும் வெவ்வேறு நிலைகளில் தரப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்ப் பேரகராதியில்,

- ஒரே வகைப்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட வினைகளைக் கொண்ட கிராலின் வகைப்பாட்டில் உள்ள 12 வினைகளையும் 12 வகைப்பாடாய்க் கொள்ளுதல், எஞ்சியவற்றை 13ஆம் வகையாய்ச் சுட்டுதல்.
- பிறவினைக் குறிப்பை அனைத்துப் பதிவுகளிலும் முறையாய்த் தருதல்.
- சொற்பொருள் தொடர்பு, தொடர்பின்மை அடிப்படையில் தனித்தனிப் பதிவுகள் அமைத்துப் பதிவுச்சொற்களுக்குப் பதிவெண் தருதல்.
- வினையடியை அடுத்து –தல் --த்தல் என வினைக்குறியீடு காட்டிப் பதிவமைத்தல்.
- பதிவுச்சொல்லை அடுத்து எழுத்துப்பெயர்ப்புத் தருதல்.
- தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற இனமொழிச் சொற்களை இலக்கணக்குறிப்பை அடுத்து அடைப்புக்குறிக்குள் தருதல்

முதலான நெறிமுறைகளே பின்பற்றப்பட்டுள்ளன[14]

தமிழ்ப் பேரகராதியில் வினைப்பதிவுக் குறைபாடாக, பெ. மாதையன் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அவை:

பொருள் தரும் நிலையிலும் தலைச்சொல் தெரிவிலும் கவனம் செலுத்துவதைப் போல் வினைப்பதிவுகளில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சில வினைப்பதிவுகளில் பொருத்தமற்ற நிலையில் மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன. பெயர்ச்சொற்கள் சில இவ்வகராதியில் வினைப்பதிவுகளில் மேற்கோளாய்த் தரப்பட்டுள்ளன. தனிப்பதிவாய்த் தரப்படவேண்டிய பெயர்கள் சிலவும் இவ்வகராதியில் வினைப்பதிவுகளில் மேற்கோள்களாய் இடம்பெற்றுள்ளன.

ஒரு வினையடியில் வா என்னும் வினையடி வந்தான், வருகிறான், வருவான், வர, வந்து, வரின், வந்தால், வரும், வருகின்றன, வருபவள், வருதல் எனப் பலவகையில் திணை, பால், எண், இடம் என்னும் அடிப்படையில் விரியும். இதனைச் “சொல்விரிவு” என்பர். இவ்வாறன்றிப் புதுச்சொற்களாகி வருகை, வரவு என வருவன “ஆக்கச்சொற்கள்” என்பர்.

இவற்றில் ஆக்கச்சொற்கள் அகராதிகளில் தனிப்பொருளாய்த் தரப்படும். சொல்விரிவுகள் அனைத்தும் பதிவுகளாய்த் தரப்படமாட்டா. இச்சொல்விரிவுகளை எளிதில் பெற வினையடியோ வேறு பிற வடிவங்களோ தலைச்சொல்லாய்த் தெரிவு செய்யப்படும். இவையே அகராதிகளில் பதிவுச்சொற்களாகத் தரப்படும்.

வினையின் சொல்விரிவுகள் மேற்கோள் பகுதியில் இடம்பெறும். அகராதியின் இயல்பைப் பொறுத்து மேற்கோள் தரப்பெறும். ஆக்கச்சொற்கள் தனிப்பதிவுகளாய்த் தரப்படுவதால் அவற்றை மேற்கோள் பகுதியில் தரக்கூடாது. இது தமிழ்ப் பேரகராதியில் பின்பற்றப்பட்டிருந்தாலும் சில வினைப்பதிவுகளில் ஆக்கச்சொற்களும் மேற்கோள்களாய் இடம்பெற்றுள்ளன.

நமை --த்தல் 11 v.tr. To vex, trouble வருந்துதல்:

நமைப்புறு பிறவிநோய்(சூளா. முத். 1.32) ப. 2158

சிமிழ் - த்தல் 11 v.tr To tie, bind; கட்டுதல்

பாசப்பிணிப்பினாற் சிமிழ்ப்புண்டு (பிரபோத. 5.5) ப. 1425

விதிர் - த்தல் 11 v.intr. To treble; நடுங்குதல்

மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற (பரி.பா. 1047) ப. 3673

மேற்கண்ட உதாரணங்களில் நமைப்புறு, சிமிழ்ப்புண்டு, விதிர்ப்புற என்னும் மேற்கோள்கள் நமைப்பு, சிமிழ்ப்பு, விதிர்ப்பு எனப் பெயர்களாகவே உள்ளன. இப்பதிவுகளில் நமை முதலான வினையடியாகத் தோன்றும் நமைக்கிறது, விதிர்த்தான் என்பன போன்ற சொல்விரிவுகளே மேற்கோள்களாய்த் தரப்பட்டிருக்க வேண்டும்.

நமைப்பு n. வருத்தல். நும்மானமைப்புண்ணேன் (தேவா.717,3) ப. 2158

சிமிழ்ப்பு n. Bondage, tie; பந்தம்.

காதலின் வரு சிமிழ்ப்பணைத்தும்(கூர்மபு. இந்திர.30) ப. 1425

விதிர்ப்பு n. Trembling, shivering; நடுக்கம்

என்போற் பெருவிதிர்ப்புறுக (புறநா,255) ப. 3673

மேற்கண்ட ஆக்கச்சொற்கள் இவ்வகராதியிலேயே தனிப்பதிவுகளாய் அமைந்துள்ளன. சிரி என்னும் வினைப்பதிவில் சிரிப்பு என்பதை எவ்வாறு மேற்கோளாய்த் தருவதில்லையோ அதைப்போலவே நமை முதலான வினைப்பதிவுகளிலும் நமைப்பு முதலான ஆக்கச்சொற்களைத் தந்திருக்கவேண்டாம்.

சில இடங்களில் தனிப்பெயர்கள்கூட வினைப்பதிவில் மேற்கோள்களாய்த் தரப்பட்டுள்ளன.

குறை[1] – தல் 4 v –intr. 3.to ve wanting, to prove insufficient;

பற்றாமல் போதல். **சாமான் வாங்கப் பணம் கையிற் குறைவாயுள்ளது.** 4.To be inperfect. Unfinished; அரைகுறையாதல். **இது குறைவேலை.**

ப.1058

குறை[3] n. 1. Deficiency, imperfection, want, default; குறைபாடு. **குறை தவிர் நிலைமையாற் குயிற்றுஞ் சாலையுள்** (கந்தபு. வரைபுனை. 20)

ப.1058

குறைவு n. < குறை. 1. Lack, want, deficiency. குறைபாடு. **நாடக நடித்ததோ குறைவில்லை.** (தாயு. எங்குநிறை. 5)

ப.1060

மேற்கண்ட பதிவுகளில் முதலாவதான குறை என்னும் வினைப்பதிவின் 3, 4 ஆம் பொருள்களுக்குக் குறைவு, குறைவேலை என்னும் பெயர்கள் மேற்கோளாய்த் தரப்பட்டுள்ளன. இவை பொருத்தமான மேற்கோள்களாக இல்லை. வினையின் சொல்விரிவுகளே இங்கு மேற்கோளாய்த் தரப்பட்டிருக்கவேண்டும். 'பணம் குறைவாயுள்ளது' என்னும் மேற்கோளுக்குப் பதிவில் 'சாமான் வாங்கப் பணம் குறைகிறது' என்பது போலத் தரப்பட்டிருக்கவேண்டும்.

தன்வினைகளினின்றும் வேறுபட்டுக் கூடுதல் பொருட்பரிமாணத்துடனும் புதுப்பொருட்பேற்றுடனும் செயற்படுபவை கூட்டுவினைகள். கம்பிநீட்டு, கைகழுவு, தலைமுழுகு, தூபம்போடு என மரபுப்பொருட்கூறுடன் மரபுத்தொடர்களாகவும் திரையிடு, தூபம்போடு, வெளியிடு, தாலிகட்டு, அஞ்சல்செய், அடித்துக்கொள், அடிபட்டுப்போ முதலான புதுப்பொருளை வெளிப்படுத்துவனவாகவும் மொழியில் பயன்படுவதால் இவையும் அகராதிப் பதிவுகளாய்க் கொள்ளப்படுகின்றன. இவற்றைப் பதிவுகளாய்த் தருகையில் கூடுதல் கவனத்துடன் பொருளையும் மேற்கோளையும் தரவேண்டும். ஆனால் தமிழ்ப் பேரகராதியில்,

தட்டு[1] –தல் 2. மோதுதல். **மரக்கலம் கரை தட்டிப்போயிற்று.** ப. 1720

பிடி[1] –த்தல் 11 To take Photograph; சாயாபடமெடுத்தல்.
அவன் படம் பிடித்தான் 14.To grasp, understand
தெரிதல். **ஆசிரியன் கற்பித்ததை மாணவர்**
பிடித்துக்கொள்வதில்லை. ப. 2652

முடி[1] –தல் 7.சண்டை மூட்டுதல். **அவனுக்கும் இவனுக்கும் முடிந்துவிட்டான்.**

ப. 3243

வாங்கு[4] -தல் 4. மூச்சு முதலியன உட்பொள்ளுதல **மூச்சு வாங்குகிறான்.**

21. அடித்தல். **பிரம்பால் அவனை நாலு வாங்கு வாங்கினான்.**

ப. 3575

வை[2] –த்தல் 10. ஊடைத்தாயிருத்தல். **நிரம்பப் பணம் வைத்திருக்கிறான்** ப. 3848

இமிழ்[2] -த்தல் - கட்டுதல். **இரண்டுட னிமிழ்க் கொளீஇ (சீவக.1835)**

ப. 299

மேற்கண்ட பதிவுகள் அனைத்திலும் பதிவுச்சொற்கள் தனிவினைச்சொற்களாய் இருக்க மேற்கோள்களோ கூட்டுவினைச்சொற்களாய் உள்ளன. மேற்கோள் பகுதியில் உள்ள கரைதட்டு, படம்பிடி, முடிந்துவிடு, மூச்சுவாங்கு, கால்வாங்கு, வாங்குவாங்கு, வைத்திரு, இமிழ்க்கொள், தட்டிக்கொண்டுபோ என்னும் கூட்டுச்சொற்கள் மட்டுமே பதிவுகளில் தரப்பட்ட சொற்பொருளைத் தருவதாக உள்ளன. எனவே இவற்றையே பதிவுச்சொற்களாய்ப் பயன்படுத்தலாம். இவ்வகராதியினை மேற்கொண்டு செம்மைப்படுத்தும்போது தனிவினைப்பதிவில் உள்ள பொருட்களை நீக்கி அவற்றைக் கூட்டுவினைப்பதிவுகளில் தர வேண்டும்

2. வட்டார வழக்குப் பதிவில் ஏற்படும் சிக்கல்கள்

வட்டார வழக்குப் பதிவில் ஏற்படும் சிக்கல்களாக இரண்டினைக் குறிப்பிடலாம். அவை:

1. வட்டார வழக்குச் சொல் பதிவில் ஏற்படும் சிக்கல்கள்
2. குறிப்பான்களில் ஏற்படும் சிக்கல்கள்

2.1. வட்டார வழக்குச் சொல் பதிவில் ஏற்படும் சிக்கல்கள்

மொழி பன்னெடுங்காலம் அழியாமல் வளர்வதற்கு அதன் சொல் வளமே முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களின் இயல்பான பேச்சுமொழி, ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த மக்களின் வட்டார மொழி, ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களின் சாதி வழக்கு, உலக வழக்கு, இழி வழக்கு, கொச்சை வழக்கு, இலக்கிய வழக்கு முதலானவை மொழியின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிக்கின்றன.

மொழியில் உயர்ந்தது தாழ்ந்தது என்று இல்லை. ஆனால் உயர் வழக்கு, புலவர் வழக்கு, இலக்கிய வழக்கு, பாமரர் வழக்கு, சாதி வழக்கு, கொச்சை வழக்கு, உலக வழக்கு, பேச்சு வழக்கு, இழி வழக்கு எனப் பலவகையாகப் பிரித்து வைத்திருக்கிறோம். உலகத்தில் இன்றுள்ள செழுமையான மொழிகள் எல்லாம் ஒரு காலத்தில் வட்டார மொழிகளாக, பேச்சு மொழிகளாகத்தான் இருந்துள்ளன என்பது வரலாறு. ஒரு மொழியின்

சொல் வளத்தைப் பெருக்குவதற்கு வட்டார வழக்குகள், பேச்சு வழக்குகள் பெரிய பங்களிப்பவை. வட்டார வழக்கு எது என்பது குறித்து,

> பொதுச்சொல், உச்சரிப்பில் முற்றிலுமாகத் திரிந்து வேறு சொல்போலத் தோற்றம் கொண்டிருந்தால் மட்டும் அதனை வட்டார வழக்காகக் கொள்ளலாம். மற்றபடி பொதுச்சொல்லின் பேச்சு வடிவம் வட்டார வழக்காகாது[15]

என்று பெருமாள்முருகன் குறிப்பிடுகிறார். வட்டார வழக்கின் முக்கியத்துவம் குறித்து ஜெயமோகன் குறிப்பிடுகையில்,

> ஒரு மொழியில் தோன்றும் படைப்புகள் யாவும் தனது உயிர்ப்பைப் பேச்சு வட்டார வழக்கிலிருந்துதான் பெறுகின்றன[6]

என்கிறார். மேலும் வட்டார வழக்குக்கான வரையறையை முந்தைய இயலில் கண்டோம். எனவே மொழிக்கு உரமாக விளங்குவது வட்டார வழக்காகும். மொழிக்கு அரணாக விளங்கும் அகராதிகளில் இத்தகைய வட்டார வழக்குச் சொற்களும் இடம்பெற வேண்டும் என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

> அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகின்ற கருவி நூல் என்ற கொள்கை மாறி ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரை உள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆதாரமாகவும் அது விளங்க வேண்டும் என்ற கொள்கை இப்போது நிலைபெற்றுவிட்டது. ஆனால், இந்த நோக்கம் நிறைவேறுவதில் பல இடையூறுகள் உள்ளன. கொச்சைச் சொல் முதலியவற்றை நீக்குதல் கூடாது. இவற்றால் விளையும் நன்மைகள் மிகப்பல. மேலும் எல்லாச் சொற்களையும் ஒருவரே, ஒரு சில கூட்டத்தாரே தெரிந்து கொள்ளுதல் இயலாது. ஒரு மொழியிலே பயின்று வரும் எல்லா பிரதேசத்தாரும் இனத்தாரும், ஜாதியாரும், தொழிலாரும், பருவத்தாரும் அகராதியின் மேன்மையான நோக்கங்களையும், முறைகளையும் உணர்ந்து ஒத்துழைத்தாலன்றி ஒரு உத்தம அகராதியை இயற்ற முடியாது.[17]

பல்வகைச் சிறப்புகளை உடைய தமிழ்ப் பேரகராதியிலும் வட்டார வழக்குச் சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை:

உலகவழக்கு	- Colloquial
உள்ளூர்	- Local
வட்டாரம்	- Dialectal

இழிசொல்	- Vulgar
கொச்சை வழக்கு	- Slang usage
பிராமணர் வழக்கு	- Brāhmin usage
செம்படவர் வழக்கு	- Cempaṭavar usage
இருளர் வழக்கு	- Iruḷar usage
கள்ளர் வழக்கு	- kaḷḷar usage
காடர் வழக்கு	- kāṭar usage
கோமுட்டி வழக்கு	- kōmuṭṭi usage
குறவர் வழக்கு	- Kuṟava usage
மறவர் வழக்கு	- Maṟavar usage
பரவர் வழக்கு	- Paravar usage
பறையர் வழக்கு	- Paṟiah usage
புலையர் வழக்கு	- Pulaiyar usage
சுமந்திரா பிராமணர் வழக்கு	- Smārata Brahmin usage
வள்ளுவர் ஜாதி வழக்கு	- Vaḷḷuvar caste usage
வில்லி ஜாதி வழக்கு	- Villi caste usage
நெசவாளர் ஜாதி வழக்கு	- Weaver caste usage

இவற்றில் மிகக் குறைந்த அளவிலேயே ஜாதி வழக்கில் சொற்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதற்குக் காரணமாக எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகையில்,

> சொற்கள் பற்றிய அளவில் பெருங்குறை உள்ளது. பேரிலக்கியங்கள், பேரிலக்கணங்கள் முதலிய அனைத்தும் உவின்ஸ்லோவின் காலத்திற்கு மிகமிகப் பிற்பட்டுத்தான் பதிப்பிக்கப்பட்டன. எனவே, இவற்றிலுள்ள பண்டைச் சொற்கள் பெரும்பாலான உவின்ஸ்லோ அகராதியில் இடம் பெறவில்லை. சூடாமணி நிகண்டு தவிர ஏனைய நிகண்டுகள் திருந்திய பதிப்பாக வெளிவரவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பிராதேசிகச் சொற்கள் சேர்க்கப்பட்டனவேயன்றி, தமிழ்நாட்டில் வழங்கிய பிராதேசிகச் சொற்கள் பெரும்பாலும் சேர்க்கப்படவில்லை. பல்வேறு தொழில் பற்றிய சொற்களும் பல சாஸ்திரங்களுக்குரிய சங்கேதபதங்களும் இதிலே பெரும்பாலும் காணக்கிடையா.[18]

என்று பல சொற்கள் சேர்க்கப்படாமைக்கு விளக்கம் கூறியுள்ளார்.

தமிழ்ப் பேரகராதியில் சேர்க்கப்பட்டுள்ள வட்டார வழக்குச் சொற்களைப் புரிந்துகொள்வதிலேயே சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவை:

1. வட்டார வழக்குக்கான வரையறை என்ன? என்று பேரகராதியின் உருவாக்கத்தில் வரையறை செய்யப்படவில்லை.
2. Colloquial (உலகவழக்கு), Local (உள்ளூர்), Dialectal (வட்டாரம்),Vulgar (இழிசொல்) Slang. (கொச்சை வழக்கு) முதலான குறிப்பான்களுக்குரிய சரியான விளக்கமும் இவற்றிற்கான வேறுபாடுகளும் வரையறைகளும் அகராதி உருவாக்கத்தில் தரப்படவில்லை. குறிப்பாக வட்டாரம் சார்ந்த சொல்லுக்கும் உள்ளூர் சார்ந்த சொல்லுக்கும் வேறுபாடு தரப்படவில்லை. பதிவாகவுள்ள சொற்களை வைத்தும் இவற்றைப் பிரித்தறிய இயலவில்லை. உலக வழக்கினைப் பொது வழக்காகக் கொள்ளலாமா? என்றே தோன்றுகிறது. ஏனென்றால்,

அகப்பைசொருகி	- அகப்பை சொருகிவைக்கும் சட்டம்.	ப.12
அசடு	- மூடன்.	ப.27
இன்னார்இனியார்	- இத்தன்மையுடையவர்	ப.369
எட்டாக்கை	- தூரமான இடம்	ப.513
ஏமாந்துபோ-தல்	- ஏமாறுதல்	ப.562
		(Colloq)

மேற்கண்ட உலக வழக்குச் சொற்கள் யாவும் எல்லா வட்டாரங்களிலும் உள்ள மக்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் பொருள் தெரிந்த சொற்களாகும். எனவே உலக வழக்குச் சொல்லைப் பொதுப் பேச்சு வழக்காகக் கருதலாம். அதேபோல் உள்பிர் வழக்குச் சொற்களை ஆராய்ந்துபார்த்தால்,

அப்பி	- தலைவி	ப. 86
அரங்கணி	- நீர் வற்றிய கால்	ப. 116
அலக்குத்தடி	- வேலியடைக்கும் மரக்கிளை	ப. 142
ஆயம்	- சூது கருவி	ப. 237
உத்தி	- விளையாட்டில் எதிர்ப்பக்கத்தில் ஒருவனுக்கு நிகரான துணைவன்	ப. 410
		(Local)

மேற்கண்ட சொற்களைப் பார்க்கும்போது இவை எந்த ஊரில் குறிப்பாக வழங்கும் சொற்கள் என்று அறியமுடியாததால் இவ்வகைச் சொற்களை Local என்ற குறிப்பானில் பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிறது.

3. இவ்வகராதியில் எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறவேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை. கடல் பயணம் தொடர்பான சொற்களின் தெளிவான பொருளை அறிய அருட்தந்தை ஜே.எஸ். சான்ட்லர், துறைமுக அலுவலர்கள், மாலுமிகள் முதலியோரைப் பாம்பனில் சந்தித்தார். மேலும் யாழ்ப்பாணத் (Jaffna) தமிழ் அறிஞர்களான குமாரசாமிப்பிள்ளை, முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணக்கல்லூரிப் பேராசிரியர் டி.பி.வுட்சன் ஆகியோரையும் சந்தித்துப் பல சொற்களைச் சேகரித்தார். இவருக்குப்பின் பொறுப்பேற்றவர்கள் இதில் கவனம் செலுத்தவில்லை.
4. ஊர், ஜாதி வழக்குச் சொற்கள் தெளிவாகத் தெரிந்ததாலும் எந்த வித எதிர்ப்பும் இச்சொற்களுக்கு ஏற்படாத காரணத்தாலும் இவை குறிப்பான்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் பல ஊர் தொடர்பான குறிப்பான்களுக்குச் சொற்கள் சேகரித்துச் சேர்க்கப்படவில்லை.

பேச்சு வழக்கு, வட்டார வழக்கு இரண்டுக்கும் உள்ள வேறுபாடு பிடிபடாமையே இதற்குக் காரணம். வட்டார வழக்குகள் குறித்துப் பேசுகிற நமக்கு எது எழுத்து வழக்கு, எது பேச்சு வழக்கு, எது வட்டார வழக்கு என்ற தெளிவு இருப்பதாகத் தெரியவில்லை. எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்குமான இடைவெளி எது, அதனை எப்படி இனம் காண்பது, எந்த அலகால் வரையறை செய்வது, தீர்மானிப்பது, இதற்கு நடைமுறை சார்ந்த அணுகுமுறை என்ன, விஞ்ஞானப்பூர்வமான அணுகுமுறை என்ன என்பது குறித்த தெளிவோ அக்கறையோ நமக்கு இல்லை. இதில் தெளிவும் அறிவும் ஏற்படாதவரை மொழியின் ஒரு பிரிவான வட்டார வழக்கு குறித்து நாம் எந்த முடிவும் எடுக்கமுடியாது.

வட்டாரம் சார்ந்த குறிப்பான் இந்த வட்டாரத்தைச் சார்ந்தது என்றோ பொதுவான வட்டார வழக்கு என்றோ குறிப்பிட்டிருந்தால் அகராதியை அணுகுபவருக்கு எவ்விதச் சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை. இதனைக் குறித்துப் பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> இந்த அகராதி இலக்கிய அகராதியா? வழக்கியல் அகராதியா? மரபு அகராதியா? குறுநில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றிலும் கொஞ்சமா? என்ற கேள்விகளெல்லாம் அறியாமையால் எழுந்தனவேயாம். லெக்ஸிகன் தொடக்கத்தில் பதிப்பாசிரியராயிருந்தவரும் இந்த நோக்கத்தை அறிந்து அகராதி வேலையில் ஈடுபட்டனர் என்று சொல்வதற்கில்லை. உவின்ஸ்லோவின் அகராதியைச் செவ்விதாக்குதலே நோக்கமாகக் கொண்டவர்க்கு மேலே விவரித்த தற்கால நோக்கம் புறம்பு என்பது கூறவும் வேண்டுமோ? லெக்ஸிகன் 'ஒத்தி' முதலிய ஒரு சில சொற்களைக் கொச்சை என்றும் சிலவற்றைப் பேச்சுவழக்கு என்றும் வேறு சிலவற்றைப் பிராதேசிகம்

என்றும் இன்னும் சிலவற்றைச் சில வகுப்பினர் வழக்கு என்றும் இங்ஙனமாக எழுதி இவ்வகைப் புகாரைத் தணித்து வந்தது.[19]

தற்காலத்தில் தொகுக்கப்படும் வட்டார வழக்கு அகராதிகளிலும் இத்தகைய நிலையே உள்ளதாக ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

> கைமுதல், கைப்பாவை, கையாலாகாதவன், கைநாட்டு, கைமாத்து, கைக்கிளை, கையை விரிச்சிட்டான், அவனுக்குக் கை நீளம் முதலான சொற்களைத் தொகுத்த கழனியூரன்கூட இச்சொற்கள் எந்த வட்டாரத்திற்குரியவை என்பதைக்கூடக் குறிப்பிடவில்லை.[20]

எந்தவித அறிவியல் வளர்ச்சியும் அதிகமாக இல்லாத அக்காலத்திலேயே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சொற்களைச் சேகரித்து அவற்றை அகரவரிசைப்படி பிரித்து, அவற்றிற்கெல்லாம் பொருள் கூறப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு வட்டாரச் சொற்களும் தமிழகத்தில் உள்ள பல ஊர்களின் பெயர்களில் சொற்களைச் சேகரித்தும் தரப்பட்டுள்ளன. இவையன்றி ஜாதி, குழு, துறை, இலக்கணம், மொழி, பொது எனப் பல குறிப்பான்களில் சொற்கள் சேகரிக்கப்படடு சேர்த்திருப்பது சிறப்பான செயலாகும். பத்துக்கும் மேற்பட்ட வட்டார வழக்கு அகராதிகள் தோன்றியுள்ள இக்காலத்தில் அவற்றில் உள்ள சொற்களையெல்லாம் கொண்டு பேரகராதி போன்ற சிறந்த அகராதியினைப் பின்வரும் காலங்களில் உருவாக்கலாம்.

2.2. குறிப்பான்களில் ஏற்படும் சிக்கல்கள்

சொற்பொருளைத் தெளிவுபடுத்தப் பயன்படுத்தப்படுபவை குறிப்பான்களாகும். இராட்லர், வின்சுலோ, புரொயென்சா, ஜி.யு.போப் முதலானோர் அகராதிகளில் மூன்று வகையான குறிப்பான்கள் கையாளப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் சொற்குறுக்கங்களாகக் காணப்படும். வின்சுலோ அகராதியினை முன்மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதியிலும் மூன்று வகையான குறிப்பான்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் குறிப்பான்கள் தலைச்சொல்லினை அடுத்து வழங்கப்பட்டுள்ளன.

மூலமொழி பல்வேறுபட்ட மொழி வேறுபாடுகளை உடையதாய் இருக்கும்போது இலக்கு மொழியாளர்க்குப் பயன்படும் வகையில் குறிப்பான்களைத் தருவது பயனுடையதாகும். வட்டார வழக்கு, பேச்சு வழக்கு, அருகிய வழக்கு, இழி வழக்கு முதலான சொற்களைப் பயன்படுத்தும் அகராதிகள் குறிப்பான்களை மிக அதிமாகக் கையாள்கின்றன.

தமிழ்ப் பேரகராதியில் **இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்களும் பதினொரு குறியீடுகளும்** கையாளப்பட்டுள்ளன. இவ்வகராதியினைப் பயன்படுத்தும்போது முதலில் இக்குறிப்பான்களை விளங்கிக்கொள்ளவே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

K என்ற ஒற்றை எழுத்துக் குறிப்பானுக்கு விளக்கமாக Kanarese என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால் Kanarese என்ற சொல்லிற்கான பொருள் அறிவதில் மிகுந்த சிக்கல் ஏற்படுகிறது. இதைக் குறித்த விளக்கம் எந்த அகராதியிலும் இல்லை. பேரகராதியிலும் குறிப்பிடப்படவில்லை. Kanarese என்றால் கன்னடமொழிச் சொல் என்பது பொருளாகும். இது "ரகளை" என்னும் சொல்லுக்கான பொருளை அறியும்போது குறிப்பிடப்பட்டுள்ளது.

ரகளை n < K. ragale 1.(Mus) A kind of metre in Kanarese; கன்னடப் பாட்டுவகை. ப. 3417

மொழிகளைக் குறிக்கும் குறிப்பானில் Gondi என்பதற்கு G என்றும், Telugu என்பதற்கு T என்றும், Urdu என்பதற்கு U என்றும் குறித்தாற்போல் Hindi என்பதற்கு H என்னும் ஒரு எழுத்துக் குறிப்பானையே பயன்படுத்தியிருக்கலாம். அதுபோல் Slang என்னும் கொச்சை வழக்குச் சொல்லுக்கு Sl. என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானைப் பயன்படுத்தியிருக்கலாம். ஏனென்றால் H என்னும் ஓர் எழுத்துக் குறிப்பானும் Sl என்னும் இரண்டு எழுத்துக் குறிப்பானும் இதில் குறிப்பானாக இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக மொத்த எழுத்துக்களையுமே குறிப்பானாகத் தருதல் தேவையற்ற ஒன்றாகும். இது விளக்கமாக முந்தைய இயலில் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பான்களை இடம், காலம், மதம், வழக்கு, தகுதி, துறை எனப் பல்வேறு வகையில் பாகுபடுத்திக் கொண்டு குறிப்பிட்ட குறிப்பான்களைக் குறிப்பிட்ட இடத்திலேயும் குறிப்பிட்ட நெறியிலேயும் தருதல் வேண்டும். ஆனால் தமிழ்ப் பேரகராதியில் இத்தகைய நெறிமுறை கையாளப்படவில்லை.

ஏனைய பதிவுக் கூறுகளினின்றும் வேறுபட்டுத் தெரியும் வகையில் வெவ்வேறு எழுத்துகளில் குறிப்பான்களை வேறுபடுத்தித் தரலாம். துறைக்குறிப்பான்களைப் பொருளுக்குமுன் தந்துவிடுவது எனவும் எஞ்சிய வழக்குக் குறிப்பான்களைப் பொருட்களின் இறுதியில் தருவது எனவும் தீர்மானித்துக்கொண்டால் இருவேறு இடங்களில் தருவதைத் தவிர்த்துவிடவேண்டும். பொருளின் முதலில் சில இடங்களிலும், நடுவிலும், இறுதியிலும் தரப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். காரணம் இதனால் பயன்பாட்டாளருக்குப் பெரிதும் குழப்பமும் சிக்கலும் ஏற்படுகின்றன என்பதும் முன்னர் விளக்கப்பட்டது.

தமிழ் இருமொழி அகராதிகளில் குறிப்பான்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. குறிப்பான்களைத் தருமுறையில் நிலையான நெறிமுறைகளை உருவாக்கி அவற்றை அகராதி தொகுப்போர் பின்பற்ற வேண்டும்.

ஆதிதிராவிடர் (Adidravidar) என்ற குறிப்பான் இல்லை. ஆனால் ஆதிதிராவிடர் என்ற குறிப்பானில் பிற்சேர்க்கையில் ஒரு சொல் பதிவாகக் காணப்படுகிறது.

அப்பன் பி.இ.ப. 42

அதேபோல் கோயம்புத்தூர் வழக்காக Coim. என்ற குறிப்பான் இல்லை. ஆனால் இரண்டு சொற்கள் பதிவாகக் காணப்படுகின்றன.

மோத்தை	ப. 3385
வாடிவேலி	ப. 3583.

ஜாதி வழக்குச் சொல்லான பரவர் இனத்தைக் குறிக்க ***Parav.*** என்னும் குறிப்பானில் பல சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால்

பிலாக்காய்க்கொத்துமணி	***Parava.***	ப. 2710
பூக்கடுக்கன்	***Parava.***	ப. 2819
முட்டுப்பாந்தை	***Parava.***	ப. 3240

என்னும் இம்மூன்று சொற்கள் மட்டும் ***Parava.*** என்னும் குறிப்பானில் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் பேரகராதியின் குறிப்பான்கள் பட்டியலில் ***Parav.*** என்னும் குறிப்பான்தான் உள்ளது. மற்ற சொற்கள் ***Parav***. என்னும் குறிப்பானில்தான் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்வாறு இரு குறிப்பான்களில் கொடுக்கப்பட்டுள்ளதால் எவற்றைக் குறிப்பானாக எடுத்துக் கொள்வது என்ற குழப்பம் ஏற்படுகிறது.

ஊர் தொடர்பான பல குறிப்பான்கள் (சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி, செங்கல்பட்டு...............) இதில் பதிவாகக் காணப்படுகின்றன. இதனால் ஊர் தொடர்பான குறிப்பான்களுக்கும் வட்டாரம் தொடர்பான குறிப்பான்களுக்கும் வேறுபாடு அறியமுடியவில்லை.

பல ஊர் தொடர்பான குறிப்பான்களுக்குச் சொற்கள் மிகச் சொற்ப அளவிலேயே சேகரிக்கப்பட்டுள்ளன. அவை:

வடஆர்க்காடு (*NA*)

சமோகி	ப. 1303
பில்மத்தா	ப. 2708

தென்ஆர்க்காடு (*SA*)

கஞ்சியில் வடித்தல்	ப. 644
	சேலம் (Sm)
அரைக்கீரைக்காய்	ப. 182
செடில்	ப. 1584
துலுசீட்டு	ப. 1989
பைகி	ப. 2905

ஊர் தொடர்பான குறிப்பான்களில் Cg (Chingleput), *Cg* (*Chingleput Usage*) என்று ஒரே பெயரில் இரு குறிப்பான்களைக் கொடுத்து ஒன்று நேராகவும் மற்றொன்று சாய்ந்த எழுத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபோலப் பல ஊர் தொடர்பான குறிப்பான்கள் பதிவாக உள்ளன. இவ்வாறு ஒரே ஊர்ப் பெயரில் இரண்டு அல்லது மூன்று குறிப்பான்களில் தந்திருப்பதற்கான காரணமும் இவற்றின் வேறுபாடும் தரப்படவில்லை. இதனால் குழப்பம் ஏற்படுகிறது.

தொகுப்புரை

- மொழியில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமே இருக்குமானால் அதற்கு அகராதி இயற்றுவது எளிது. ஆனால் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமே உடைய மொழியாக உலகில் எம்மொழியும் இருப்பதாகத் தெரியவில்லை. பல பொருள் இருப்பதே சிறப்பு எனக் கருதப்படுகிறது. இந்நிலையில் அகராதி இயற்றும்போது பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன.
- தமிழ்ப் பேரகராதியில் பல்வேறு குறைகள் இருப்பதாக ஞா.தேவநேயப்பாவாணர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு என்ற நூலே வெளியிட்டுள்ளார்.
- அகராதியியல் நெறிமுறைப்படி அகராதியில் இவ்வகைச் சிக்கல் ஏற்படுவது இயல்பானது, பின்வரும் காலங்களில் தீர்க்கக்கூடியது என்று பெ.மாதையன், பா.ரா.சுப்பிரமணியம் முதலானோர் குறிப்பிடுகின்றனர்.
- தமிழ்ப் பேரகராதியில் சொற்பொருள் தரும்முறையில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. தமிழில் தனித்தன்மை வாய்ந்த சொற்களான குடம், பூக்குடலை, உடுக்கை, முக்காலி, நாதஸ்வரம், அரைநாண், குத்துவிளக்கு, அங்கவஸ்திரம், தவில், நெற்றிச்சுட்டி, பல்லாங்குழி, பல்லக்கு முதலான பலவகைச் சொற்களுக்கு நேரான சொற்பொருள்கள் தரப்படவில்லை.
- சில சொற்களுக்குத் தமிழில் தரப்பட்டிருக்கும் சொற்கள் அல்லது தொடர்கள் எளிதில் புரியக் கூடியனவாக இல்லை. பொருளாகத் தரப்பட்டிருக்கும் சொல் பண்டைய இலக்கியச் சொல்லாகவோ கடினமான வடமொழிச் சொல்லாகவோ இருக்கிறது. இருமொழி அகராதித் தொகுப்பாளர்கள் சொற்சேகரத்தின்போதே இருமொழிக்கும் இணையான சொற்களைத் தேர்ந்தேடுக்கவேண்டும்.
- தமிழ்ப் பேரகராதியில் பல்வேறு வினைப்பதிவுக் குறைபாடுகள் காணப்படுகின்றன. இவற்றைக் குறித்து ஆராய்ந்து பல்றே குறைகளைப் பெ.மாதையன் குறிப்பிட்டுள்ளார்.
- உலகத்தில் இன்றுள்ள செழுமையான மொழிகள் எல்லாம் ஒரு காலத்தில் வட்டார மொழிகளாக, பேச்சு மொழிகளாகத்தான் இருந்துள்ளன என்பது வரலாறு. ஒரு மொழியின் சொல் வளத்தைப் பெருக்குவதற்கு வட்டார வழக்குகள், பேச்சு வழக்குகள் பெரிய பங்களிப்வை. இவை அகராதியில் இடம்பெறுவது கட்டாயமாகும்.
- வட்டார வழக்குக்கான வரையறை என்ன? என்று பேரகராதியின் உருவாக்கத்தில் வரையறை செய்யப்படவில்லை. இவ்வகராதியில் எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறவேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

- வட்டாரம் சார்ந்த குறிப்பான் இந்த வட்டாரத்தைச் சார்ந்தது என்றோ பொதுவான வட்டார வழக்கு என்றோ குறிப்பிட்டிருந்தால் அகராதியை அணுகுபவருக்கு எவ்விதச் சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை.
- ஊர் தொடர்பான குறிப்பான்களுக்கும் வட்டாரம் தொடர்பான குறிப்பான்களுக்கும் வேறுபாடு அறியமுடியவில்லை. அவற்றிற்கான வேறுபாட்டு விளக்கத்தை அகராதி உருவாக்கத்திலேயே கொடுக்கலாம்.
- பல ஊர் தொடர்பான குறிப்பான்களுக்குச் சொற்கள் மிகச் சொற்ப அளவிலேயே சேகரிக்கப்பட்டுள்ளன. இக்குறையைப் போக்க இப்போது புதிதாகத் தோன்றும் வட்டார வழக்கு அகராதிகளில் இருந்து சொற்களைத் தெரிவு செய்து இதனை மறுபதிப்பு செய்யும்போது தகுந்த இடங்களில் சேர்க்கலாம்.
- ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல் பொருளாகத் தரப்படும்போது, பொருளாகத் தரப்பட்டிருக்கும் சொல் எளிய சொல்லாக இருக்கவேண்டும். எளிய சொல்லாக இல்லையென்றால் அந்தச் சொல்லுக்கு என்ன பொருள் என்று தரப்படவேண்டும்.
- குறிப்பான்களைத் தருமுறையில் நிலையான நெறிமுறைகளை உருவாக்கி அவற்றை அகராதி தொகுப்போர் பின்பற்றச் செய்யவேண்டும்.

குறிப்புகள்

1. சுப்பிரமணியம், பா.ரா., 2009, சொல்வலை வேட்டுவன், பக்.109-110
2. தேவநேயப் பாவாணர், ஞா., 2001, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடு, ப.1
3. மாதையன், பெ., 2009, தமிழ் அகராதிகளில் வினைப்பதிவமைப்பு நெறிமுறைகள், ப.202
4. மணவாளன், அ.அ., 1989, தமிழ்க்கலை, பக்.132-139
5. மேலது, ப.136
6. Zgusta, L., 1971 Manual of Lexicography, p.294
7. மாதையன், பெ., 2009, தமிழ் அகராதிகளில் வினைப்பதிவமைப்பு நெறிமுறைகள், ப.196
8. Zgusta, L., 1971 Manual of Lexicography, p.312
9. சுப்பிரமணியம், பா.ரா., 2009, சொல்வலை வேட்டுவன், ப. 160
10. மேலது, ப.160
11. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1989, தமிழின் மறுமலர்ச்சி, ப. 413
12. சுப்பிரமணியம், பா.ரா., 2009 சொல்வலை வேட்டுவன், ப.159
13. மேலது, பக். 159-160
14. மாதையன் பெ., 2009, தமிழ் அகராதிகளில் வினைப்பதிவமைப்பு நெறிமுறைகள், பக்.33-34.
15. பெருமாள்முருகன்., 2006, செட்டிநாட்டு வழக்குச் சொல்லகராதி, முன்னுரை, ப.7
16. ஜெயமோகன்., www. Kalachuvadu.com/ issue -86
17. வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1989, தமிழின் மறுமலர்ச்சி, ப. 415
18. மேலது, ப. 441
19. மேலது, ப. 413
20. ஜெயமோகன்., www. Kalachuvadu.com/ issue -86

முடிவுரை

முடிவுரை

மொழியின் சிறப்பு அதன் சொல் வளத்தைப் பொறுத்தது. தமிழ்மொழி நீண்ட நெடிய வரலாறு உடையது. காலந்தோறும் தமிழில் பல்வேறு இலக்கண இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. எனவே தமிழ்மொழியின் சொல்வளம் அளவிட முடியாதது. இலக்கணம் தனித்தனிச் சொற்களின் இயல்பு பற்றிப் பேசாமல் குறிப்பிட்ட இலக்கணக்கூறுகள் பற்றிய இலக்கணத்தை வரையறுக்கின்றது. ஆனால் இலக்கியங்கள் மொழியின் பரந்த வளத்தைக் காட்டுகின்றன.

இலக்கணமும் அகராதியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன என்பதைத் தமிழ் மரபிலக்கணங்களில் சொற்பொருள் கூறும் பகுதி தனியாக இடம் பெற்றுள்ளதிலிருந்து அறியமுடிகிறது. இலக்கணம் விதிமுறைகளுக்கு உட்பட்ட எளிதில் சொல் விரிவுகளைப் படைக்கவல்லதாக உள்ளது. ஆனால் இலக்கண விதிமுறைகளுக்கு மாறுபட்ட சொல் விரிவுகளையும் ஆக்கச் சொற்களையும் தலைச்சொற்களாய் அகராதி கொண்டுள்ளது. தமிழில் கிடைக்கப்பெறும் மிகவும் தொன்மையான நூலான தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தில் உள்ள இடையியல், உரியியல், பொருளதிகாரத்தில் உள்ள மரபியல் ஆகியவற்றில் சொற்பொருள் கூறும் அகராதிக் கூறுகள் அமைந்துள்ளன.

பொதுவாக அகராதிகள் சொற்களின் பொருள் வரையறையைத் தரும். இவை மொழிச்சார்புடையன. மொழியில் உள்ள சொற்களையும் அவற்றின் தன்மைகளையும் கொண்ட நோக்கு நூல்களாகும். இவை பொதுவாகப் பதிவுச் சொற்களின் இலக்கணப்பொருள், ஒலிப்பு முறை, எழுத்து முறை, சொல் விரிவு, சொற்பிறப்பு, ஒரு பொருட் பலசொல், எதிர்ச்சொல், மேற்கோள், குறிப்பான்கள் என்ற அடிப்படையில் இடம்பெறும்.

தமிழ் அகராதி வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிலவகை அகராதிகளைத் தவிர எஞ்சிய ஒருமொழி அகராதிகள், பதிவுச்சொல், பொருள், என்னும் இரு கூறுகளை மட்டுமே உள்ளடக்கியதாக உள்ளன. இவ்வகை அகராதிகளில் இன்றுவரை இப்பதிவமைப்பே எல்லாவற்றிலும் பின்பற்றப்படுகிறது.

இருமொழி அகராதி மரபில் 1964இல் வெளிவந்த தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியிலும் தமிழ்ச்சொற்களுக்குப் போர்ச்சுகீசு, இலத்தின் சொற்கள் பொருட்சொற்களாய்த் தரப்பட்டுள்ளன. சொற்பொருளை மட்டுமே விளக்குவது இவற்றின் நோக்கமானதால் வேறு எந்தப் பதிவுக்கூறுகளும் தரப்பெறவில்லை. பின்னர் தோன்றிய இராட்லர், வின்சுலோ, பெப்ரீசியஸ் தமிழ் ஆங்கில அகராதிகள் பல்வேறு அகராதியியல் கூறுகளைக் கொண்டுள்ளன.

தமிழ்ப் பேரகராதி இதுவரை வெளிவந்துள்ள அகராதிகளுள் அளவாலும் தரத்தாலும் சிறந்து விளங்குகிறது. இதனினும் மேம்பட்ட நிலையில் தமிழ் அகராதி வெளிவரவில்லை. இதில் தலைச்சொல், ஒலிபெயர்ப்பு, இலக்கணக்குறிப்பு, சொல் மூலம், இனமொழிச்சொற்கள், மேற்கோளும் அதன் வருகையிடமும், சான்றுத் தொடர் முதலியனவற்றைப் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தலைச்சொல் இணைப்பு இடம் பெற்றுள்ளது. தலைச்சொல்லின் மாற்று வடிவங்கள் பகர அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

பேரகராதியில் பெயர்ப்பொருள், வினைப்பொருள், சொற்பிறப்பு போன்றவற்றின் துணையோடு ஒப்புருச்சொற்கள் தனிப்பதிவுகளாக அமைந்துள்ளன. ஒப்புருச்சொல் பதிவுகளுக்கு எண்கள் தரும் நெறியை முதன்முதலில் தமிழ்ப் பேரகராதி அறிமுகப்படுத்தியது. இருமொழி அகராதிகளில் தொடக்க காலத்தில் ஒப்புருச் சொற்களை வேறுபடுத்திக் காட்டவே ஒலிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது. ஆனால் எல்லாத் தலைச்சொற்களின் பதிவுகளுக்கும் ஒலிபெயர்ப்பு தரப்பட்டுள்ள அகராதி இதுவொன்றேயாகும். மேலும் இதில் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினைப் பொருள்கள் ஒரே பதிவில் தனித்துக் காட்டப்பட்டுள்ளன.

தலைச்சொல்லாய்ப் பதிவுசெய்யப்பட்ட ஒரு சொல் எச்சொல்லின் அடியாய்ப் பிறந்தது என்பதைக் குறிப்புப் பொருள் பகுதியில் தருதல் உண்டு. எல்லா அகராதிகளிலும் இக்குறிப்பு இடம்பெறுவதில்லை. பெரும்பாலான ஆங்கில அகராதிகள் மட்டுமே இந்நெறியைப் பின்பற்றுகின்றன. ஒப்புருச் சொற்களைத் தனிப்பதிவாய்த் தரும் அனைத்து அகராதிகளும் சொல்மூலக் குறிப்பைத் தருவதில்லை. ஆனால் தமிழ்ப் பேரகராதியில் சொல்மூலக் குறிப்பு மிகச் சிறந்தமுறையில் இடம்பெற்றுள்ளது. சொற்பொருளைக் கூறும்போது சொல்லுக்கான பொருளை அறியாத சூழலில் யாவரும் அறிந்த பொருளை விளக்கவேண்டும். ஒருமொழி அகராதிகளில் ஒரு சொல்லுக்கான பொருள் ஒன்று மட்டுமே தரப்பட்டது. ஆனால் தமிழ்ப்பேரகராதியில் ஒரு சொல்லுக்கான பல பொருள்கள் தரப்பட்டுள்ளன. பொருள் விளக்கப் பகுதியில் சொல்லிற்கான பொருளைத் தமிழிலேயே விளக்காமல் பிறமொழிச் சொற்களும் கையாளப்பட்டுள்ளன. தமிழ் அகராதிகளுள் சொற்பிறப்பியல் ஒப்பியல் பண்புகளைக் கொண்ட ஒரே அகராதி இதுவே ஆகும்.

ஒவ்வொரு மேற்கோளும் அதன் வருகையிடமும் மிகச் சிறந்த முறையில் இவ்வகராதியில் தரப்பட்டுள்ளன. மேற்கோள் பகுதியில் வினைகளின் சொல்விரிவுகள் இடம்பெற்றுள்ளன. அசைஇ, அசைஇய, குழீஇ, தொகைஇய என்பன போன்ற சிக்கல் வாய்ந்த சொல்விரிவுகள் அமைந்த தொடர்கள் மேற்கோள் பகுதியில் தரப்பட்டுள்ளன. இதற்குமுன் தோன்றிய அகராதிகளில் சொல்விரிவுகளையும் பதிவுகளாய்த் தந்த முறை இதில் மாற்றம் பெற்றதுடன் வினைப்பதிவிலும் தலைச்சொல் தெரிவிலும் செம்மையான முறை கடைபிடிக்கப்பட்டுள்ளது. வின்சுலோ அகராதியில் துணைப்பதிவுகளாய்த் தரப்பட்ட கூட்டுவினைகள் இதில் தனிப்பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளன.

பொருள் விளக்க உத்திகளுள் ஒன்று சான்றுத்தொடராகும். இதில் சான்றுத்தொடர் இலக்கியம் சார்ந்தவற்றை மேற்கோளாகத் தருதல், ஆசிரியரால் தொகுத்து அளிக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள், பழமொழி, மரபுத்தொடர்கள் எடுத்துக்காட்டாய் இடம் பெறுதல், வழக்குச்சொற்கள், வாக்கியங்கள் எடுத்துக்காட்டாய் இடம் பெறுதல் முதலான நான்கு முறைகளில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் சான்றுத்தொடர்களில் வழக்குச் சொற்களைக் கொண்ட சான்றுத்தொடர்களும் வட்டாரவழக்குச் சொற்றொடர்களும் பழமொழித் தொடர்களும் பதிவு செய்யப்பட்டிருப்பது சிறப்பாகும்.

தமிழ்ப் பேரகராதியில் இருநூற்றுத் தொண்ணூற்று இரண்டு குறிப்பான்களும் பதினொரு குறியீடுகளும் கையாளப்பட்டுள்ளன. அகராதியைப் பயன்படுத்துபவர்களுக்கு எவ்விதக் குழப்பமும் ஏற்படாமல் இருக்கவும் ஒரே எழுத்தில் குறிக்கப்பட்டுள்ள குறிப்பான்களை வித்தியாசப்படுத்தவும் ஒரு எழுத்து பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் சாய்வாகவும் தரப்பட்டுள்ளன.

ஒரு மொழி வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்குச் சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும்கூட அவற்றிடையே ஒரு பொதுத்தன்மையைக் காணலாம். ஆனால் கிளைமொழிகளுக்குள் பெரும்பான்மை ஒற்றுமையும் சிறுபான்மை வேற்றுமையும் உண்டு. பேசுகின்ற இடத்தைப்பொறுத்து வட்டாரக் கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கும். ஒரு சொல்லை உச்சரிக்கும் வகையில் இடத்திற்கு இடம் இவை மாறுபடும். இவற்றையெல்லாம் கிளைமொழிகளின் கூறுகளாகக் கொள்ளலாம். இத்தகைய வட்டாரக் கிளைமொழி வழக்குகள் எதனையும் அகராதி தொகுப்பவர்கள் புறக்கணிக்கக் கூடாது. பேரகராதியிலும் வட்டார வழக்குச் சொற்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் எண்பத்து இரண்டு குறிப்பான்களில் உள்ளன. குறிப்பான்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஒன்றை நேராகவும் மற்றதைச் சாய்வான எழுத்திலும் தந்துள்ளனர். வட்டார வழக்குச்சொல் பதிவில் உள்ளூர் (*Loc.- Local usage)* வழக்குச்சொற்களே தமிழ்ப் பேரகராதியில் மிக அதிகமான சொற்களாகப் பதிவு பெற்றுள்ளன.

Colloquial (உலகவழக்கு), Local(உள்ளூர்), Dialectal(வட்டாரம்), Vulgar (இழிசொல்), Slang. (கொச்சை) முதலான குறிப்பான்களுக்குரிய சரியான விளக்கமும் இவற்றிற்கான வேறுபாடுகளும் அகராதி உருவாக்கத்தில் தரப்படவில்லை. குறிப்பாக வட்டாரம் சார்ந்த சொல்லுக்கும், உள்ளூர் சார்ந்த சொல்லுக்கும் வேறுபாடு தரப்படவில்லை. உலகவழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள இச்சொற்கள் பொதுவான பேச்சு வழக்கா என்று பேரகராதியில் விளக்கப்படவில்லை. உள்பிர்ச் சொற்கள் மிக அதிக அளவில் சேகரித்துச் சேர்க்கப்பட்ட நிலையில் இச்சொற்கள் எந்த உள்பிர்ச் சொற்கள் என்று குறிப்பிடப்படவில்லை.

வட்டாரம் சார்ந்த குறிப்பான் இந்த வட்டாரத்தைச் சார்ந்தது என்றோ பொதுவான வட்டார வழக்கு என்றோ குறிப்பிட்டிருந்தால் அகராதியை அணுகுபவருக்கு எவ்விதச் சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை. இவை விளக்கமாகக் குறிப்பிடப்படாததால் இவற்றை விளங்கிக்கொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது. அகராதி உருவாக்குபவர்கள் இதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வகராதியில் எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறவேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை. கடல் பயணம் தொடர்பான சொற்களின் தெளிவான பொருளை அறிய அருட்தந்தை ஜே.எஸ். சான்ட்லர், துறைமுக அலுவலர்கள், மாலுமிகள் முதலியோரைப் பாம்பனில் சந்தித்தார். மேலும் யாழ்ப்பாணத் (Jaffna) தமிழ் அறிஞர்களான குமாரசாமிப்பிள்ளை, முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணக்கல்லூரிப் பேராசிரியர் டி.பி. வுட்சன் (T.P. Hudson) ஆகியோரையும் சந்தித்து பல சொற்களைச் சேகரித்தார். இவருக்குப் பின் பொறுப்பேற்றவர்கள் இதில் கவனம் செலுத்தவில்லை.

ஊர், ஜாதி வழக்குச் சொற்கள் தெளிவாகத் தெரிந்ததாலும் எந்த வித எதிர்ப்பும் இச்சொற்களுக்கு ஏற்படாத காரணத்தாலும் இவை குறிப்பான்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் ஊர்கள் தொடர்பான பல குறிப்பான்களுக்குச் சொற்கள் சேகரித்துச் சேர்க்கப்படவில்லை.

எனவே தற்போதைய சூழலில் இலக்கிய நயம் வாய்ந்த வட்டார வழக்குச் சொற்களை நாம் இழந்துவிடக்கூடிய நிலையில் உள்ளோம். இதனைத் தவிர்க்க பல வட்டார வழக்குச் சொல்லகராதிகள் தோன்ற வேண்டும். இதற்கு முன்னோடியாக கி.ராஜநாராயணின் வட்டார வழக்குச் சொல்லகராதி, பெருமாள் முருகனின் கொங்கு வட்டாரச் சொல்லகராதி, அ.கா. பெருமாளின் நாஞ்சில் வட்டாரச் சொல்லகராதி, கண்மணி குணசேகரனின் நடுநாட்டுச் சொல்லகராதி, பழநியப்பா சுப்பிரமணியனின் செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி, பா.முருகையாவின் நெல்லை வட்டார வழக்குச் சொல்லகராதி முதலான வட்டார வழக்குச் சொல்லகராதிகள் போல ஒவ்வொரு பகுதியிலும் வழங்கும் வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்து, பல அகராதிகள் தோன்ற வேண்டும். இதுவே மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கும் என்பது திண்ணம். மேலும் அகராதி உருவாக்க நெறிமுறைகள் குறித்த நூல்கள் இயற்றப்பட்டு புதிய அகராதிகள் உருவாகச் செய்யவேண்டும்.

இன்றைய சூழலில் தமிழ்ப் பேரகராதியை மற்ற அகராதிகளைக் காட்டிலும் சிறந்த அகராதியாகக் கருதலாம். வட்டார வழக்குச் சொற்களைத் தனியாகத் தொகுத்தால், பேரகராதியில் விடுபட்ட வட்டார வழக்குச் சொற்களை அதில் சேர்க்கலாம். மேலும் தமிழ்ப் பேரகராதியினைச் செம்மையான அகராதியாக உருவாக்கலாம். வளமான தரவுச் சொற்களும், அகராதிக் கலைஞரின் செம்மையான உள்ளுணர்வும் சிறந்த அகராதித் தொகுப்பிற்கான அடிப்படைகளாகும். ஓர் அகராதிக் கலைஞர் தன் மொழியின்

அனைத்துப் பரிமாணங்களையும் அறிந்திருக்க முடியாது. அவரது உள்ளுணர்வு சொல்லின் அனைத்துப் பொருட்பரிமாணங்களையும் அவர் மனதில் தோற்றுவித்துவிடாது. அதற்குத் தரவுகளும் பெரிதும் கைகொடுக்கும். சொற்பொருளைச் செம்மையாய் உணர்ந்து கொள்ளத்தக்க மனப்பாங்கும் மொழித்திறனும் ஒரு அகராதிக் கலைஞருக்கு அவசியம். இவ்விரண்டும் இருக்கும் நிலையில்தான் சிறந்த அகராதி உருவாகும்.

அகராதிப் பணி எவ்வாறு முடிவற்ற செயலோ அவ்வாறே அகராதி ஆய்வுகளும் முடிவற்ற செயலாகும். தமிழ்ப் பேரகராதியில் வட்டார வழக்குச் சொற்கள் பதிவு மட்டுமல்லாமல் கட்டிடக் கலை, தாவரவியல், கணிதம், இசை, ஜோதிடம் முதலான துறை சார்ந்த சொற்களையும் சைவம், வைணவம், முகமதியம், கிறித்தவம் முதலான சமயம், தத்துவம் சார்ந்த சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் அனைத்துக் குறிப்பான்களையும் ஆய்வு செய்யலாம்.

துணைநூற் பட்டியல்

துணைநூற் பட்டியல்

முதன்மை நூல்

வையாபுரிப்பிள்ளை, எஸ்., 1982 தமிழ் லெக்ஸிகன் (ஏழு தொகுதிகள்) சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம்.

துணைமை நூல்கள்

இன்னாசி. சூ., 1976 சதுரகராதி ஆராய்ச்சி, மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சக்திவேல். சு., 2000 தமிழ்மொழி வரலாறு, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

சரளா ரங்கநாதன்., 2009 தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப் போக்கும் அமைப்பு வேறுபாடும், செஞ்சிக்கோட்டை, அமைதி இல்லம்.

சற்குணம், மா., 2002 தமிழ் நிகண்டுகள் ஓர் ஆய்வு, சென்னை, இளவழகன் பதிப்பகம்.

சித்திரபுத்திரன், எச்., 2002 தமிழ் அகராதியியல், தஞ்சாவூர், அனன்யா பதிப்பகம்.

சுந்தர சண்முகனார் 2001 தமிழ் அகராதிக் கலை, சிதம்பரம், மெய்யப்பன் தமிழாய்வகம்.

சுப்பிரமணியன், ச.வே., 1999 தொல்காப்பியம், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

சுப்பிரமணியம், பா.ரா., 2009 சொல்வலை வேட்டுவன், சென்னை, கயல்கவின் புக்ஸ்.

தேவநேயப்பாவாணர் ஞா., 2001 சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள், சென்னை, தமிழ்மண் பதிப்பகம்.

பூபதி. எஸ்., 1998 தமிழ்நாட்டின் மொழிச்சூழல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

மாதையன் பெ., 1997 அகராதியியல், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

2009 தமிழ் அகராதிகளில் வினைப்பதிவமைப்பு நெறிமுறைகள், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

விஜயபாஸ்கரன், வ., (தொஆ) 1962 சரஸ்வதி களஞ்சியம், சென்னை, கலைஞன் பதிப்பகம்.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., 1982 தமிழின் மறுமலர்ச்சி தொகுதி - II , சென்னை, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்.

ஜெயதேவன். வ., 1985 தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, சென்னை, ஐந்திணைப் பதிப்பகம்.

அகராதிகள்

சுப்பிரமணியன், பா.ரா., (மு.ஆ.) 2008 க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, பெங்களூர், க்ரியா வெளியிடு.

பழநியப்பா சுப்பிரமணியன்., (தொ.ஆ.) 2006 செட்டிநாட்டு வழக்குச் சொல்லகராதி, தமிழினி பதிப்பகம், சென்னை.

பெருமாள்முருகன்., (தொ.ஆ.) 2000 கொங்கு வட்டாரச் சொல்லகராதி, குருத்து வெளியீடு, கோபிசெட்டிப்பாளையம்.

வின்சுலோ. எம்., 1991 தமிழ் ஆங்கில அகராதி, New Delhi, Asoan Educational Service.

வீராசாமி, தா.வே., (மு.ப.) 1988 பெருஞ்சொல்லகராதி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

சிதம்பரநாத செட்டியார், (மு.ப.) 1992 ஆங்கிலத் - தமிழ்ச் சொற்களஞ்சியம், சென்னை சென்னைப் பல்கலைக்கழகம்,

------------------------- 2002 Mega Lifco Dictionary, Chennai, The Little Flower Co.

ஆங்கில நூல்கள்

Bloom Field .L.,	1993	Language, Hendry Holt, New Youk.
Shing, R̀.A.,	1982	Introdution to Lexicography Central Institute of Indian Languages, Mysore.
Yesudhasan. ,	1976	Kanyakumari Tamil as a Reginoal Dialect. Mysore.
Zgusta, L.,	1971	Manual of Lexicography, Mouton, The Hague

இணையம்

www. Kalachuvadu.com/ issue – 86

www. wikipedia.org.,

பின்னிணைப்புகள்

1. தமிழ்ப் பேரகராதி உருவான வரலாறு
2. தமிழ்ப் பேரகராதியில் உள்ளபடி குறிப்பான் அட்டவணை
3. எழுத்து எண்ணிக்கைப்படி குறிப்பான் அட்டவணை
4. வட்டார வழக்குக் குறிப்பான்கள்
5. குறிப்பான் வகைப்பாட்டு அட்டவணை
6. உள்ளூர் வழக்குச் சொல் அட்டவணை
7. உலக வழக்குச் சொல் அட்டவணை

1. தமிழ்ப் பேரகராதி உருவான வரலாறு

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் சேகரித்த தகவல்களின் துணையுடன் 1862ஆம் ஆண்டிற்கு முன்னரே டாக்டர். வின்சுலோவால் உருவாக்கப்பட்ட தமிழ்அகராதி முழுமையாக உருப்பெறவேண்டுமெனச் சென்னை மாகாண அரசுக்கு 1905ஆம் ஆண்டு பெட்ரிக் நிக்கல்சன் விடுத்த வேண்டுகோளே இன்றைய தமிழ்ப்பேரகராதி உருவாக வித்தானது.

மேலும் இப்பணி சென்னை மாகாண அரசின் நிதியுதவியுடன் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றம் மூலம் மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் பரிந்துரைத்தார். இக்கருத்தினை அப்போதைய ஆட்சிமன்ற உறுப்பினர்களான அருட்தந்தை. கெனான் செல் (**Canon Sell, D.D**) திவான் பகதூர் சர் சுப்பிரமணிய ஐயர் ஆகியோரும் ஆதரித்தனர். பல்வகைச் சிறப்புப் பெற்ற தமிழ்மொழிக்கு வின்சுலோ (**Winslow**) உருவாக்கிய அகராதி முழுமையானது அன்று எனவும் புதிய அகராதியின் தேவை காலத்தின் கட்டாயம் எனவும் அவர்கள் கூறினர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியாக இதனைக் கருதித் தமிழ் ஆர்வலர்களும் இலக்கியவாதிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டுப் புதிய அகராதி உருவாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு கல்வி பயிலும் அனைவருக்கும் தம் மொழியறிவு வளர்க்கவும் சுவைக்கவும் அகராதியின் துணை அவசியம் என்னும் கருத்து வலுப்பெற்றது.

ஜி.யு.போப் வைத்திருந்த தொகுப்புகள் சென்னையில் சரிவரப் பயன்படுத்தப்படாததால் ஒரு சில நிபந்தனைகளுடன் ஆக்ஸ்போர்டில் உள்ள கிளாரன்டன் பிரஸ் அப்பணியை நிறைவேற்ற விருப்பம் தெரிவித்தது. மேலும் இப்பணிக்காக ஜி.யு.போப் அவர்களுக்கும் இவ்வகராதி உருவாகத் தேவையான செலவு போகத் துணையாசிரியருக்கும் அவரது உதவியாளருக்கும் 2000 பவுண்ட் அளிப்பதாக அப்போதிருந்த சென்னை மாகாண அரசு கூறியது.

கிளாரண்டன் பிரஸ் இப்பணியைச் சரிவரச் செய்யமுடியாத காரணத்தால் 1907 ஆம் ஆண்டு இப்பேரகராதி உருவாகும் பணி தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. அதே ஆண்டில் ஜி.யு.போப் இறந்ததால் அவர் சேகரித்த தொகுப்பு மீண்டும் சென்னைக்கே கொண்டுவரப்பட்டது.

1911 சனவரி மாதம் மீண்டும் இப்பணியை நிறைவேற்ற ஜே.எஸ். சான்ட்லர் (J.S. Chandler) அவர்களால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவரின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை மாகாணம் இதற்கென ஒரு குழு அமைக்க உத்தரவு பிறப்பித்தது. இம்முதற்குழுவில்,

1. சென்னை மாகாணத்தின் பிரதிநிதியாக இராவ்பகதூர் எம். ரங்காச்சாரியா,எம்.ஏ.,
2. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதியாக இராவ்சாகிப் ராமகிருஷ்ணபிள்ளை,

பி.ஏ.,

3. அகராதிக்குழுத் தலைவராகத் தென்னிந்திய தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதியாக அருட்தந்தை. ஜே.எஸ். சான்ட்லர்,

4. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பிரதிநிதியாகப் பாண்டித்துரைத் தேவர்

ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இக்குழுவின் தலைவராக இருப்பவர் இப்பணியில் முழுநேரம் ஈடுபடுபவராகவும் தேர்ந்த மொழியியல் வல்லுனராகவும் ஐரோப்பியராகவும் இருக்கவேண்டும் எனச் சென்னை மாகாண அரசு கருதியதால் அருட்தந்தை ஜே.எஸ். சான்ட்லர் இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இக்குழு இப்பணியை விரைவாக முழுமையாக நிறைவேற்ற அரசு போதுமான நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்தது. இப்பணியை ஐந்து ஆண்டு காலத்திற்குள் செய்து முடிப்பதற்கு ஒரு லட்ச ரூபாயும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையில் உறுப்பினர்களை நியமிக்கவும் இக்குழு அரசைக் கேட்டுக்கொண்டது.

இக்குழு அளித்த திட்டத்தைச் சென்னை மாகாண அரசு ஏற்று தமிழ் அகராதியின் தேவையை உணர்ந்து இந்திய அரசு இதற்கு அனுமதியும் நிதியும் வழங்க வேண்டும் என்று 1912 ஜூலை 11 அன்று திட்ட அறிக்கை அனுப்பியது. இந்திய அரசும் இதை ஏற்றுக்கொண்டது. அதைத் தொடர்ந்து சென்னை மாகாணச் செயலர், சென்னைப் பல்கலைக்கழகத்திடம் அரசு இத்திட்டத்தை ஏற்று இத்திட்டத்திற்கான தேவையின் அடிப்படையில் ஒரு லட்ச ரூபாய் நிதியுதவி தருவதாகத் தெரிவித்தார். மேலும் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மிகாமலும் இப்பிரதியின் உரிமை சென்னை மாகாண அரசுக்கே உரியது எனவும் தெரிவித்தார்.

சென்னை மாகாண அரசின் உத்தரவினை (G.O.NO.991-Dated 9.11.1912) ஏற்றுச் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் இப்பணியை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தது. இப்பணி குறித்த ஆண்டறிக்கையையும் செலவினங்களையும் ஒவ்வொரு ஆண்டும் அளிக்க வேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டது. இக்குழுவில் அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களைப் பல்கலைக்கழகமே நிரப்பிக்கொள்ளலாம் என அரசு தெரிவித்தது. தமிழையும் அதன் பண்பாட்டையும் கற்றுக்கொள்வதற்குச் சிறந்த இடம் மதுரை என்பதாலும் இலங்கைத் தமிழுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவும் இக்குழுவின் அலுவலகம் மதுரையில் 1913 சனவரியில் முதன்முதலில் நிறுவப்பட்டது.

ஆனால் நிர்வாகத் தேவைக்காக இக்குழுவின் அலுவலகம் மதுரையிலிருந்து சென்னைக்கு 1915 மே மாதம் மாற்றப்பட்டது. இக்குழுவின் முதல் தலைவராகவும் ஆசிரியராகவும் அருட்தந்தை ஜே.எஸ். சான்ட்லரும், மூன்று பண்டிதர்களும் அமர்த்தப்பட்டனர். மேலும் ஒரு பண்டிதர் 1915இல் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் உறுப்பினரான M.R.Ry. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் இறந்தபின் M.R.Ry. ராவ் பகதூர் எம். ரங்காச்சார்யா அவர்கள் உறுப்பினராகப் பதவியேற்றார். இவரும் பதவி விலக, ஆட்சிமன்றம்

மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாதையர் M.R.Ry. குப்புசாமி சாஸ்திரி ஆகியோரை நியமித்தது.

தமிழ் லெக்ஸிகன் குழுக் கூட்டம் முதன்முதலில் 1912 டிசம்பர் 17 மாலை 3 மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரவையில் நடந்தது. இந்த ஆட்சி மன்றம் தங்களுக்குள்ளேயே ஒரு குழு அமைத்துக்கொண்டது. இக்குழுவின் முதல் அமைப்பாளராக பிட்டன் ரிக் (Rev. Geo Pittendrigh), அதன் உறுப்பினர்களாக மார்க் ஹண்டர் (Messrs. Mark Hunter), ஜெ.எச். ஸ்டோன்(J.H. Stone) மற்றும் மாண்புமிகு நீதிபதி ஆர்.ஆர். சுந்தர ஐயர் ஆகியோர் இருந்தனர்.

ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவர் தமிழ் லெக்ஸிகன் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அக்குழு தொடர்ந்து செய்யும் வேலைகளைக் கண்காணித்தார்.

இக்குழுவின் முக்கியமான முதல்வேலை அகராதி பற்றித் திட்டமிடலாகும். முதலில் சில மாதிரிப் பக்கங்கள் அச்சிடப்பட்டு தலைசிறந்த மேற்கத்திய வல்லுநர்களின் ஆலோசனைக்காகவும் கருத்துக்களுக்காகவும் வினியோகம் செய்யப்பட்டது. அதில்,

Dr. (later Sir) W.A. Craigie , Oxford English Dictionary,

Mr. D.E. Z. Wickramasinghe, Indian Instutyte, Oxford,

Prof. A.A. Macdonell,

Prof. A. F. Rudolph Hoernle and

Mr. F. E. Pargiter, Oxford,

Mr. R. Sewell, Royal Asiatic Society,

Dr. L. D. Barnett, British Museum,

Dr. F. W. Thomas, Library of India Office,

Prof. E. J. Rapson and

Prof. J. L.. Wyatt, Cambridge University,

Prof. A. B. Keith, Edinburgh University and other scholars in Universities of the United States of America – Yale, Harved, Columbia, Pennsylvania, Callifornia etc.

இவ்வல்லுநர்கள் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்த்தல், திராவிட மொழிச் சொற்களுக்குத் தொடர்புடையதாக வகைப்படுத்தல், தனிச்சொல்லிற்கும் கூட்டுச்சொல்லிற்கும் சரியான பொருளை வரிசைப்படுத்தல், ஒருபொருட் சொல் ஆகியவற்றைப் பற்றியும் கலந்தாலோசித்தனர்

இவ்வல்லுநர்கள் மூன்று கருத்துக்களை வெளியிட்டனர். அவை:

1. **இந்த லெக்ஸிகன் பழமையானவற்றில் ஊறித் திளைக்கும் தமிழ் வல்லுநர்களின் மனநிறைவுக்கு ஏற்ப, அரிதான வாா்த்தைகளைத் தெளிவாக விளக்கவேண்டும். இது சமணம், மருத்துவம், ஜோதிடம் போன்ற மற்ற இலக்கியத்துறையில்**

பயன்படவேண்டும். சிறிதும் ஆங்கில அறிவு இல்லாத தமிழ் அறிஞர்களுக்கும் இவ்வகராதி பயன்படும் வகையில் அமைய வேண்டும்.

2. **இது வடமொழிப் புலமையாளர்க்கு மனநிறைவு தருவதாக அமையவேண்டும். எவ்வாறென்றால் தமிழ்மொழி மற்ற மொழிகளுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை விளக்கவேண்டும்.**
3. **இது ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவர்க்குத் தெளிவான முழுமையான, பேச்சுவழக்கு, இலக்கியவழக்கு, மரபு வழிப்பட்ட நவீன அகராதியாகத் திகழவேண்டும்.**

இக்குழு பல பக்கங்களையும் பரந்த கருத்துக்களையும் அறிவியல் கொள்கைகளையும் உடைய ஒரு அகராதியைப் பரிந்துரைத்தது. சொற்களைச் சேகரிக்கப் பதிப்பாசிரியர் குழு அகராதிக்குழுவைத் துரிதப்படுத்தியது. அவர்கள் இதற்காக வின்சுலோ அகராதி, தமிழ்ச்சங்க அகராதி, மற்றும் உ.வே. சாமிநாதையர், ஜி.யு. போப் ஆகியோர் தொகுத்த சொற்களையும் பயன்படுத்திக்கொண்டனர். மேலும் இப்புலவர்குழு சென்னை மாகாண கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்குத் தேவையான அருஞ்சொல் அகராதி ஒன்றையும் தயாரித்தது.

இப்பணிக்காக இவ்வகராதிக்குழு தமிழ் மக்களுக்கும் பல்வேறு துறை வல்லுநர்களுக்கும் அழைப்பு விடுத்தது. மேலும் மதுரை, தஞ்சை, சிதம்பரம், யாழ்ப்பாணம் சென்னை ஆகிய ஊர்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கும் பாளையங்கோட்டை சைவ சபாவிற்கும் கடிதம் அனுப்பியது. இவ்வகராதிக்குத் தேவையான தெளிவான தகவல்களான பேச்சு வழக்கு, சாதி, சாதி உட்பிரிவு, சமூகப் பழக்கவழக்கங்கள், தொழில், வியாபாரம், கருவிகள், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள், மருத்துவம், மூலிகை, இசை, மதச்சடங்கு, நம்பிக்கைகள், ஓலைச்சுவடி ஆவணங்கள் உள்ளிட்ட பிற துறைகளில் உள்ள வார்த்தைகளை அறியக் கடிதம் அனுப்பியது. சைவசித்தாந்தத்தைப் பற்றியும் அதன் விரிவான பாரம்பரியத்தையும் மரபு வழிப்பட்ட சிறப்பான வார்த்தைகளையும் அறியப் பழமை வாய்ந்த மத நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இவ்வகராதிக் குழுவிற்குத் தமிழில் தேர்ந்த அறிவுப் புலமையாளர்களின் ஆலோசனை அவ்வப்போது தேவைப்பட்டது. அதற்காகத் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள் கௌரவ ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர்.

சொற்களுக்குச் சரியான பொருள் கூற அதிகக் கவனம் எடுத்துக்கொண்டனர். கடல் பயணம் தொடர்பான சொற்களின் தெளிவான பொருளை அறிய அருட்தந்தை ஜே.எஸ். சான்ட்லர், துறைமுக அலுவலர்கள், மாலுமிகள் முதலியோரைப் பாம்பனில் சந்தித்தார். மேலும் யாழ்ப்பாணத் (Jaffna) தமிழ் அறிஞர்களான M.R. Ry. A.குமாரசாமிப்பிள்ளை, Ry. முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணக்கல்லூரிப் பேராசிரியர் டி.பி. வுட்சன் (T.P. Hudson) ஆகியோரையும் சந்தித்தார்.

23.2.1914 அன்று சென்னை மாகாண கவர்னர் லார்டு பென்ட்லன்ட் மதுரையில் உள்ள லெக்ஸிகன் குழு அலுவலகத்தினைப் பார்வையிடச் சென்றார். அங்குப் பொதுமக்கள் இந்நூல் உருவாக்கத்திற்குக் காட்டும் ஆர்வத்தைக் கண்டு தன் நூலில், “தமிழ் லெக்ஸிகன்” உருவாவதற்குக் கிழக்கிந்திய வல்லுநர்களின் முழு ஈடுபாட்டையும், அவர்கள் ஜே.எஸ்.

சான்ட்லர் மீதும் அவருடன் பணியாற்றுவோர் மீதும் வைத்துள்ள நன்றியுணர்வையும் கேட்கவும் பார்க்கவும் உதவிய இந்த நாளை நான் பெருமைக்குரியதாகக் கருதுகிறேன் என்று எழுதியுள்ளார்.

நிறைய வல்லுநர்களும் உயர்ந்த நிலையிலும் செல்வாக்கிலும் உள்ள ஐரோப்பியர்களும் இந்தியர்களும் இந்த லெக்ஸிகன் அலுவலகத்திற்கு வந்து பார்வையிட்டுச் சென்றனர். இந்நிலையில் பிரதிநிதிகளின் குழு நிர்வாக ரீதியாகவும் இலக்கிய ரீதியாகவும் ஆய்வு செய்து கருத்துக் கூறிற்று.

1916ஆம் ஆண்டின் முடிவில் 80,000 சொற்கள் சேகரிக்கப்பட்டன. இதில் 8,800 சொற்கள் வரையறுக்கப்பட்டு அச்சிடத் தயாராக இருந்தன. அதற்காக ஆன செலவு ரூ.38,000 ஆகும்.

இப்பணியைப் பிரதிநிதிகள் பார்வையிட்டு சில கருத்துக்களைத் தெரிவித்தனர். அதில் ஓர் ஆண்டிற்கு ஆகும் செலவு ரூ. 13,000- த்தைத் தாண்டக்கூடாது. வருகிற நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் இப்பணிக்காக ஆகும் செலவு ரூ. 1 லட்சம் வரை செலவாகலாம். ஆனால் அகராதி அச்சிடும் செலவு இதில் அடங்காது. எல்லாக் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் நிதி ஒதுக்கீடு மட்டும் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை என்றும் இந்த நிதி நெருக்கடிக்கு நாம் தீர்வு கண்டாலும், இப்போது உள்ள அறிஞர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட சொற்களைக் கொண்டு இவ்வகராதியைத் தயாரித்தால் அது முழுமையடையாது என்றும் பிரதிநிதிகள் கூறினர். இப்பிரதிநிதிகளின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் அதிகாரமும் பொறுப்புகளும் சரியாக வரையறுக்கப்படவில்லை. மேலும் இப்பிரதிநிதிகள் கூறிய கருத்துக்களைப் பார்க்கும்போது இவ்வகராதி தரமானதாகவும் முழுமையானதாகவும் இருக்கும் எனத் தோன்றுகிறது. இவ்வகராதி தயாரிக்கும் திட்டத்திற்கான சரியான வரையரைகள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படாததால் இதற்கான முழுப் பொறுப்பும் பல்கலைக்கழகத்திற்கே உரியதாகும் என நினைத்தனர்.

11.4.1917 அன்று பிரதிநிதிகள் அரசுக்கு ஒரு கடிதம எழுதினர். அதில் பிரதிநிதிகளின் பொறுப்பும், அதிகாரமும் சரியாக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் இப்பிரதிநிதிகளின் சபையை மாற்றியமைக்காவிட்டால் இவ்வகராதி தயாரிக்கும் பணியிலிருந்து விலக நேரிடும் என்றும் தெரிவித்தனர்.

பின்னர் இவ்வகராதிக் குழு ஒரு முடிவுக்கு வந்தது. அது இப்போதுள்ள அறிஞர்கள் மூலம் சேகரித்த சொற்களைக் கொண்டு அகராதியைத் தயாரித்தால் தமிழிலக்கியமும் மொழியும் படிக்கும் மாணவர்களுக்கு ஏமாற்றமே அளிக்கும் என்று கருதியது.

இது குறித்து 3.7.1917 அன்று அரசு ஒரு அரசாணை (G.O. NO.879) வெளியிட்டது. அதில் அகராதி வெளியிடுவதற்கான முழுப் பொறுப்பும் பிரதிநிதிகள் குழுவிற்கே உரியது என்றும் எதிர்காலத்தில் நடைபெறும் பணிக்கான திட்டங்களை இக்குழுவே தீர்மானித்துக்கொள்ளலாம் என்றும் அறிவித்தது.

இவ்வரசாணையைப் பிரதிநிதிகள் குழு ஏற்றுக்கொண்டது. இப்பிரதிநிதிக் குழு உறுப்பினரான **மார்க் ஹண்டர்** ஒரு குறிப்பாணை தயாரித்தார். இவ்வகராதியின் நோக்கம்,

அறிஞர்களின் தேவை, லெக்ஸிகன் குழுவின் அமைப்பு, அதிகாரம் முதலியவற்றைப் பற்றியும் தற்போதுள்ள குழுவைக் கலைத்துவிட்டுப் புதிய உறுப்பினர்களை நியமிக்கலாம் என்றும் முடிவெடுத்தது. இதைப் பிரதிநிதிகள் குழுவும் ஏற்றுக்கொண்டு அரசுக்குப் பரிந்துரைத்தது. இப்புதிய குழுவில்,

சர்.பி.எஸ். சிவசாமி ஐயர், K.C.S.I., CIE., B.A., B.L., - தலைவர்

மகோமகா உபாத்தியாய உ.வே.சாமிநாதையர் அவர்கள்

M.R.Ry. எஸ்.அனவரதவிநாயகம் பிள்ளை, M.A., L.T.,

M.R.Ry.எஸ். குப்புசாமி சாஸ்திரி, M.A.,

M.R.Ry. T. ராமகிருஷ்ண பிள்ளை, B.A., F.R.H.S.,

மார்க் ஹண்டர், M.A., ஆகியோர் இடம்பெற்றனர்.

மேற்கூறிய அறிஞர்களோடு இன்னொரு கோரிக்கையாக இக்குழுவில் மூன்று பேர் அடங்கிய தலைமைப் பதிப்பாசிரியர் குழு ஒன்று அமைக்கவேண்டும்; அதில் ஜே.எஸ். சான்டலர், ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், மற்றும் ஒரு பட்டதாரி இருக்கவேண்டும்; இவர்களுக்குத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் போதிய அறிவு இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

1919 சனவரி 15 -ஆம் நாள் அன்று அரசு ஒரு குறிப்பாணை (G.O. NO. 1625.B2 Home (Education)) வெளியிட்டது. அதில் தெளிவான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டது. அதற்குப் பிரதிநிதிகளின் சபை, இப்பணி முழுமையாக முடிவதற்கு ஆகும் செலவு ரூ.1,13,542 என்பது நம்பக்கூடியதாக இல்லை என்று அரசுக்குப் பதிலளித்தது. பின்னர் ஏற்கனவே முந்தைய குழுவால் முடிக்கப்பட்ட பணிகள், முழுமையாகத் தற்போது உருவாக்கப்படும் குழுவால் ஆராயப்படவேண்டும். மேலும் இந்த லெக்ஸிகன் உருவாக்கும் பணி முழுமையடைந்து, இந்தத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அச்சிடப்படும் என்பது நம்பக்கூடியதாக இல்லை. அரசு இப்பணிக்காக ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கியது. நிதியாண்டின் முடிவில் ரூ. 47,500 இருப்பு இருக்க வேண்டும். மேலும் தேவைப்படும் நிதியான ரூ. 66,042-யை ஆட்சிமன்றமே சமாளித்துக்கொள்ளும் என்றது. ஆட்சிப்பேரவை ஒதுக்கிய ரூ. 36,000 தென்னிந்திய மொழிகளின் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்டது. மேலும் இந்த ஆட்சிமன்றம், உலகளவில் பெருமையாகப் பேசப்படக்கூடிய தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்படும் இப்பணி பொருளாதாரத்தால் தடைபடக்கூடாது என்று மிகவும் கவலைப்பட்டது.

1918 பிப்ரவரி 16 அன்று அரசு ஓர் ஆணை (1918 Home-கல்வி) வெளியிட்டது. அது மேற்கூறிய அனைத்துக் கருத்துக்களையும் அரசு ஏற்றுக்கொண்டது என்றும் ஆனால் மேற்கொண்டு ஆகும் செலவினங்களை அரசு ஏற்றுக்கொள்ளாது என்றும் அறிவித்தது. பின்னர் 31.3.1918 அன்று அப்போது இயங்கிவந்த லெக்ஸிகன் குழு கலைக்கப்பட்டு அன்றிலிருந்தே புதுக்குழு இயங்க ஆரம்பித்தது. அதுபோல் ஆட்சிமன்றக் குழுவும் கலைக்கப்பட்டது.

தமிழ் லெக்ஸிகன் தயாரிக்கும் பொறுப்பையும் அதற்காகும் செலவினங்களையும் சென்னைப் பல்கலைக்கழகத்திடமே மாற்றிக் கொடுக்கப்பட்டது. புதியதாக உருவாக்கப்பட்ட

லெக்ஸிகன் குழு ஏற்கனவே கூறியபடி, முன்னர் முடிக்கப்பட்ட பணியை முழு ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு ஆராய்ந்தது.

1920 மார்ச் மாதத்தில் ஆட்சிக்குழு சில கேள்விகளை எழுப்பியது. அதில் இப்பணிக்காக அதிகப்படியாக ஆன செலவு அரசு செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டதா? என்று கேட்டு அவ்வாறு ஆகும் செலவைப் பல்கலைக்கழகமே எற்றுக்கொள்ள இந்திய அரசு சம்மதித்தாலும், இப்பணிக்கான உரிமையைப் பலகலைக்கழகத்திற்கு மாற்றித்தர இயலாது என்றும் தெரிவித்தது. லெக்ஸிகன் தொடர்பான அனைத்தையும் மீண்டும் இப்புதிய குழு பார்வையிட்டது. பின்னர் ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்தது. அதில் இப்பணி மீண்டும் 1921 ஏப்ரல் மாதம் தொடங்கி ஆறு ஆண்டுகளில் முடிவடையும் என்றும் அதற்கு ஏற்கனவே செலவான ரூபாய் ஒரு லட்சத்தோடு இன்னும் ஒரு லட்சத்து 61 ஆயிரம் செலவாகும் என்றும் கூறியது. அதன்படி ஆட்சிக்குழு இப்பணியை நிறைவு செய்வதற்காக ஆகும் கூடுதல் செலவான ரூபாய் ஒரு லட்சத்து 61 ஆயிரத்தைச் சென்னை மாகாணத்தின் வழி இந்திய அரசு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டது. இதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு ஓர் அரசாணை (G.O. NO.159) 21.12.1921 அன்று வெளியிட்டது. அதில் அக்குழு கேட்டுக்கொண்ட தொகையில் ஒரு லட்சத்திற்கு மேல் செலவானால் அதை வைப்புத்தொகை சேமிப்பிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்றது. மேலும் ஒரு நிபந்தனையுடன் லெக்ஸிகன் பதிப்புரிமையைச் சென்னைப் பல்கலைக்கழத்திற்கே வழங்கி அரசுக்கு 250 பிரதிகள் தரவேண்டும் என்றும் கூறியது.

அதே நேரத்தில் 1919 -இல் சர் பி.எஸ். சிவசாமி ஐயர் லெக்ஸிகன் குழுத் தலைவர் பணியிலிருந்து விலகினார். அக்காலியிடத்தைப் பூர்த்தி செய்ய மாண்புமிகு நீதிபதி டி.வி. சேஷகிரி ஐயர் நியமிக்கப்பட்டார். 1921 டிசம்பரில் அருட்தந்தை ஜெ.எஸ். சான்ட்லரும் பதவி விலகினார். 1922 சனவரியில் திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். முதன்முறையாக லெக்ஸிகன் கையெழுத்துப் பிரதி அச்சுக்கூடத்துக்கு அனுப்பப்பட்டது. ஆனால் 1923-ஆம் ஆண்டின் இறுதியில் 16 பாரம் அச்சடிக்கப்பட்டது. அப்போது எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையும் பதவி விலகினார்.

1924 பிப்ரவரியில் திரு.சி.பி. வெங்கட்ராம ஐயர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் மீண்டும் தன் நிரந்தரப் பணியான கல்வித்துறைக்கே (அக்டோபர் 1926-இல்) சென்றுவிட்டார். 1926 நவம்பரில் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இந்த இடைவெளியில் நீதிபதி டி.வி. சேஷகிரி ஐயர் 1926 பிப்ரவரியில் இறந்துவிட்டார். அதனால் ஆட்சிக்குழு மூலமாக ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் மார்ச் 1926இல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் இப்பணியில் முழு ஈடுபாடு கொண்டு விரைவாகத் தமிழ்ப் பேரகராதி வெளிவர முனைந்தார். இதைக் கண்ட பல வல்லுநர்கள் மனம் இரங்கி எந்தவித நிதி எதிர்பார்ப்புமின்றித் தாமே அகராதி தயாரிக்கும் பணிக்கு உறுதுணையாய் விளங்கினர். முதலில் அச்சு மாதிரிகளை ஆசிரியர் குழு சரிபார்த்து, கௌரவ நடுவர்களுக்கு அனுப்பி

அவர்களுடைய கருத்துக்களையும் அச்சு மாதிரிகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பியனுப்புமாறு கேட்டுக்கொண்டது. அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளும்படியிருந்தால் அதை இக்குழு ஏற்றுக்கொண்டது.

ஆசிரியர் குழு மறுபடியும் மாற்றியமைக்கப்பட்டது. அதில் தமிழில் சிறந்த ஓர் ஆசிரியரும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றில் சிறந்த துணையாசிரியரும் ஒரு தலைமைத் தமிழ்ப்புலவரும் துணைத் தமிழ்ப்புலவரும் தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தில் சிறந்த ஒரு புலவரும் தமிழ்ப் பட்டதாரி ஒருவரும் இக்குழுவில் நியமிக்கப்பட்டனர்.

லெக்ஸிகன் குழு இதுவரை இப்பணிக்கான திட்ட அறிக்கையை ஒருமுறைகூட முழுமையான எழுத்து வடிவில் தரவில்லை. டயோசீசன் அச்சுக்கூடத்துடன் போடப்பட்ட ஒப்பந்தம் ஏப்ரல் 1927 இல் முடிவுக்கு வந்தது. உடனடியாக சென்னை சட்ட இதழ் அச்சுக்கூடம் அச்சாளர்களை நியமித்தது. இவர்களின் மூலமாக லெக்ஸிகன் அச்சுப்பணி 1927 ஜுலை முதல் தொடங்கியது. இந்தக்காலத்தில் லெக்ஸிகன் உருவாக்க ஏற்படுத்தப்பட்ட குழு குறிப்பு அட்டைகளை முழுக்கவனத்துடன் ஆராய்ந்தது. இதனுடன் மேலும் பல புதிய சொற்களைச் சேகரித்தனர். மேலும் பலதுறை வல்லுநர்களுக்கும் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள செல்வாக்குப் பெற்றவர்களுக்கும் ஆர்வமுள்ள பொதுமக்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினர். அதில் ஒரு சொல்லுக்கான பொருள், வகைப்பாடு, பயன்பாடு, போன்றவற்றைச் சேகரித்துத் தருமாறு கேட்டுக்கொண்டனர். இதற்கிணங்க நிறைய புதிய சொற்களும், இலக்கியம், பேச்சு, வட்டார வழக்கு, தொழில் சார்ந்த சொற்களும் கிடைத்தன. அதை எங்கெங்கு லெக்ஸிகனில் சேர்க்க முடியுமோ அங்குச் சேர்த்துக்கொண்டனர். மேலும் உயில் தொடர்பான சொற்கள், சட்டச்சொற்கள், நிலக்குத்தகை நிபந்தனைகள், கட்டிடக்கலை, இசை, ஓவியம், நாட்டியம், மருத்துவம் குறித்த சொற்கள் கள்ளர், நெசவாளர் முதலிய பல சாதிச்சொற்களும் சேகரிக்கப்பட்டு அந்தச் சொற்களும் சேர்க்கப்பட்டன.

ஏற்கனவே உள்ளதுபோல் அல்லாமல் ஒரு அருஞ்சொல் அகராதியையும், கல்வெட்டுக்களில் உள்ள செய்திகளையும், சொற்களையும் சேகரித்தனர். சைவ, சமண, சித்தாந்த, இந்தியத்தத்துவப் புத்தகங்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றிலுள்ள சொற்களையும் சேகரித்தனர்.

இப்பொழுது உள்ள முழு லெக்ஸிகனில் 1,04,405 சொற்கள் உள்ளன. வின்ஸ்லோ அகராதியில் 67,542 சொற்களே இருந்தன. இதில் 80 ஆயிரம் சொற்கள் ஜே.எஸ். சான்ட்லரும், அவரது குழுவும் சேகரித்தவை.

1913 சனவரியிலிருந்து லெக்ஸிகன் தயாரிக்கும் பணிக்கும் அச்சிடும் பணிக்குமான செலவு நான்கு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாயில், அரசு ஒதுக்கிய ஒரு லட்சம் இல்லாமல் மேற்கொண்டு செலவான மூன்று லட்ச ரூபாயைப் பல்கலைக்கழகமே ஏற்றுக்கொண்டது.

தமிழ் லெக்ஸிகனில் சேகரிக்கப்பட்டுள்ள சொற்களைப் பற்றி கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

	பதிப்பித்த தேதி	பக்கங்களின் எண்ணிக்கை	சொற்களின் எண்ணிக்கை
தமிழ் லெக்ஸிகன், தொகுதி I பகுதி			
1	08.10.1924	266	7511
2	20.10.1925	240	6318
3	26.06.1926	126	3186
		632	**17015**
II			
1	20.10.1926	160	4312
2	16.02.1927	160	4419
3	24.09.1927	160	4067
4	17.02.1928	96	2448
		576	**15246**
III			
1	17.02.1928	64	1769
2	15.06.1928	160	4571
3	22.10.1928	160	4381
4	20.03.1929	160	4136
5	28.10.1929	182	4816
		726	19673
IV			
1	27.03.1930	162	4157
2	16.11.1930	160	4247
3	15.06.1931	160	4097
4	28.10.1931	160	4054
		642	**16555**
V			
1	21.03.1932	162	4394
2	20.10.1932	158	4268
3	20.03.1933	160	4019
4	06.10.1933	160	4359
		640	**17040**

VI			
1	19.04.1934	160	4165
2	24.10.1934	160	4050
3	29.03.1935	160	4119
4	15.10.1935	160	4112
5	20.03.1936	72	2430
		712	**18876**
		3928	**1,04,405**

ஏற்கனவே பதிப்பிக்கப்பட்ட சொற்களுடன் தாமதமாகச் சேகரிக்கப்பட்ட 20,000 சொற்கள் தமிழ் லெக்ஸிகனில் குறிப்பிட்ட இடங்களில் சேர்க்கப்பட இருந்தன. ஆட்சிக்குழு இதை பிற்சேர்க்கையாகப் பதிப்பித்து வெளியிடத் தீர்மானித்தது.

தமிழ் லெக்ஸிகன் குழு

M.R.Ry. Rao Bahadur K.V. Krishnaswami Aiyar Avl., B.A., B.L.,Advocate, and member of the Syndicate (Chairman).

" S.Anavaratavinayakam Pillai Avl., M.A.,L.T., Reader in Tamil, Oriental Research Institute, University of Madres .

" A.Chakravarti Nainar Avl., M.A., L.T., I.E.S., Principal, Government College, Kumbakonam.

" Mahamahopadhyaya Vidyavacaspati Pandit S. Kuppuswami Sastri Avl, M.A., formerly Professor of Sanskrit and Comparative Philology, Presidency College, Madras.

" Rao Bahadur A. Lakshmanaswami Mudaliar Avl., B.A., M.D., F.C.O.G., V.H.A.S., Second Obstetric Physician and Gynoecologist, Ag. Superintendent, Government Hospital for Women and Children, Madres and member of the Syndicate

The Rev. Gordon Matthews, M.A., B.Litt., Professor, Madras Christian Collage, Madras

M.R.Ry. Pandit C .R.Namasivaya Mudaliar Avl., formerly Tamil Pandit, Presidency College, Madras.

" Diwan Bahadur S.E. Ranganathan Avl., M.A., L.T., formerly member of the syndicate of the University of Madras and later, Vice-Chancellor, Annamalai University, Annamalainagar.

" Rao Bahadur P. Sambanda Mudaliar Avl., B.A., B.L., formerly Judge, Small Causes Court, Madras.

" T. Sivaramasetu PillaiAvl., M.A., B.L., Assistant Accountant-General and member of the Syndicate.

" C.K. Subramania Mudaliar Avl., B.A., Pleader, Coimbatore.

" Mahamahopadhyaya Dakshinatyakalanidhi Pandit V. Swaminatha Aiyar Avl., D.LITT., formerly Tamil Pandit, Presidency College, Madras.

W.H. Warren. Esq., Secretary, Christian Literaure Society, Par Town, Madras.

M.R.Ry. S. Vaiyapuri Pillai Avl., B.A., B.L., (Editor and Correspondent).

II

The Editorial Staff of the Tamil Lexicon

Editor: M.R.Ry. S. Vaiyapuri Pillai Avl., B.A., B.L., from 25-11-1926.
Assistant Editor: M.R.Ry. V. Narayana Aiyar Avl., M.A., M.L., from 27-1-1932.
Chief Pandit (Tamil): M.R.Ry. Pandit M. Raghava Aiyangar Avl., from 1-2-1913.
Sanskrit and Tamil Pandit: M.R.Ry. Pandit. V. M. Gopalakrishnamachariar Avl., from 14-8-1915.
Additional Tamil Pandit: M.R.Ry. Pandit S. Somasundara Desikar Avl., from 26-11-1927.
Assistant: M.R.Ry. P. R. Minakshisundara Mudaliar Avl., B.A., B.L., from 14-10-1929.

III

The Syndicate Lexicon Committee (Abolished from 1-4-1918)

The Rev. G. Pittendrigh, M.A.,
Mr. Mark Hunter, M.A.,
Dr. J. H. Stone, M.A., C.I.E., D.LITT.
The Hon'ble Mr. Justice P. R. Sundara Aiyar, B.A., B.L.,
Sir K. Ramunni Menon, Kt., M.A., LL.D., Diwan Bahadur.
The Rev Dr. E. Monteith Macphail, C.I.E., C.B.E., MaA., D.D., LL.D.

IV

Succession list of Chairmen of the Tamil Lexicon Committee

The Rev. J.S. Chandler, M.A., D.D. (January 1913 to April 1918)
Sir P.S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E., B.A., B.L., LL.D., D.LITT. (April 1928 to March 1919).
The Hon'ble Mr. Justice T.V. Seshagiri Aiyar. B.A., B.L., (April 1919 to February 1926)
Rao Bahadur K. V. Krishnaswami Aiyar, B.A., B.L., (from March 1926).

V

Quondam members of the Tamil Lexicon Committee

M.R. Ry. Pandit E.V. Anantarma Aiyar Avl., Tamil Pandit, Presidency College and later, Fellow, Orientel Research Institute, University of Madras.
The Rev. J. S. Chandler, M.A., D.D., of the American Mission, Madura, Editor and chairman of the Tamil Lexicon Committee.
M.R.Ry. Rao Bahadur K. Chinnatambi Pillai Avl., B.A., L.T., member of the Syndicate and Principal, Pachiappa's College, Madras.
The Rev. A. C. Clayton, Kodaikkanal.
Dr. Mark Collins, M.A., Ph.D., Professor of Sanskrit and Comparative Philology, University of Madras.
Ferrand E. Corley, Esq., M.A., member of the Syndicate and Professor, Madras Christian College, Madras.

S. J. Crawford, Esq., M.A., B.Litt., Professor, Madras Christian College, Madras.
M.R.Ry. B.V. Kameswara Aiyar Avl., M.A., Pudukottah.
The Rev. Francis Kingsbury, B.A., Additional Editor, Tamil Lexicon, now University Professor of Tamil, University College, Colombo.
M.R.Ry. Rao Bahadur S. Krishnaswami Aiyangar Avl., MaA., Ph.D., F.R.H.S., M.R.A.S., member of the Syndicate and Professor of Indian History and Archaeology, University of Madras.
Dr. E. Monteith Macphail, C.I.E., C.B.E., M.A., B.D., LL.D., member of the Syndicate and later, Vice- Chancellor, University of Madras.
The Rev. W. Meston, M.A., D.D., D.Litt., member of Syndicate and Principal, Madras Christian College, Madras.
The Rev. A. Moffat, M.A., B.Sc., F.R.S.E., member of the Syndicate and Professor, Madras Christian College, Madras.
M. R. Ry. Rao Sahib T. Ramakrishna Pillai Avl., B.A, F.R.H.S., Chairman, Dravidian Board of Studies, University of Madras.
" Rao Bahadur M. Rangacharya Avl., M.A., Professor of Sanskrit and Comparative Philology, Presidency College, Madras.
The Hon'ble Mr. Justice T.V. Seshagiri Aiyar, B.A., B.L., Judge, Madras High Court and Chairman, Tamil Lexicon Committee.
Sir. P. S. Subramania Sastri, M.A., L.T., Ph.D., Ag. Editor, Tamil Lexicon, now Principal, Rajah's College of Tamil and Sanskrit Studies, Tiruvadi, Tanjore District.
M.R.Ry. Diwan Bahadur L. D. Swamikannu Pillai Avl., M.A., B.L., LL.B., I.S.O., C.I.E., Secretary to Government and later, President, Legislative Council, Madras.
" C. P. Venkatarama Aiyar Avl., M.A., L.T., F.R.H.S., Madras Educational Service, and Editor, Tamil Lexicon.

VI

Succession list of Editors

The Rev. J. S. Chandler, M.A., D.D. (January 1913 – April 1918).
The Rev. J. S. Chandler, M.A., D.D. and Dr. Mark Collins, M. A., Ph.D., (Joint) (April, 1918 – August 1919).
The Rev. J. S. Chandler, M.A., D.D.(August 1019 – January 1922)
M. R. Ry. S. Anavaratavinayakam Pillai Avl., M.A., L.T., (January 1922 – Deceber 1923).
" C. P. Venkatarama Aiyar Avl., M.A., L.T., F.R.H.S. (February 1924 – October 1926).
Dr. P. S. Subrahmania Sastri, M.A., L.T., Ph.D., (October 1926 – November 1926).
M. R. Ry. S. Vaiyapuri Pillai Avl., B.A., B.L., (from November 1926).

VII

Revision Committee

The Rev. J. S. Chandler, M.A., D.D., Editor (ex-Officio).
M.R. Ry. S. Anavaratavinayakam Pillai Avl., M.A., L.T. (January 1920 – December 1921).
" B. V. Kameswara Aiyar Avl., M.A., (January 1920 – November 1920).
" Diwan Bahadur L. D. Swamikannu Pillai Avl., M.A., B.L., LLB., I.S.O., C.I.E., (December 1920 – December 1921).

VIII

Quondam members of the Editorial Staff

Additional Editor

The Rev. Francis Kingsbury, B.A., (January 1924 – June 1926).

Assistant Editors

M.R. Ry. T. Kanakasundaram Pillai Avl., B.A., (February 1919 – May 1920).
" N. Srinivasacharya Avl. (February 1919 – May 1920).
Dr. P. S. Subrahmania Sastri, M.A., L.T., Ph.D., (September 1926 –October 1926 and November 1926 – January 1932).

Assistant to the Editor

M.R. Ry. R. Vasudeva Sarma Avl., M.A., B.L., (November 1922 – November 1923).

Assistant

M.R. Ry. R. E. S. Varadaraja Aiyar Avl., B.A., (July 1926 – June 1929).

Sanskrit Pandits

M.R. Ry. S. Sesha Sastri Avl., (January 1913 – May 1913).
" Subbarama Sastri Avl., (July 1913 – January 1915).
" Sivarama Sastri Avl., (January 1915 – May 1915).

Tamil Pandits

M.R. Ry. A. Shanmuga Pillai Avl., (July 1913 – November 1913).
" C. K. Subramania Aiyar Avl., (August 1913 – March1919).
" Satyavageeswara Aiyar Avl., (September 1913 – January 1913).
" V. Chidambarararamalingam Pillai Avl., (1st to 12th October 1927).

Tamil and Urudu Pandit

M.R. Ry. S. A. Chakrapani Aiyar Avl., (July 1914 – December 1914).

Telugu Pandit

M.R. Ry. A. N. Murthi Avl., (August 1916 – December 1922).

Urudu Munshi

Janab Abdul Rahiman Sahib Bahadur (August 1916 – November 1916).

Saiva Siddhanta Pandit

M.R. Ry. A. Singaravelu Mudaliar Avl., (September 1926 – September 1927).

IX

Those who have helped in the preparation of the Lexicon with matrial

M.R. Ry. Abraham Pandithar Avl., - Two copies of Icao-Tamil entitled Karunamirutasagaram.

The Rev. D. Bexell, Madura – Amanuscript of Tamil words.

M.R. Ry. T. Chelvakesavaraya Mudaliar Avl., M.A., - A copy of Adayavalanjan Arumpatam containing numerous new Tamil Words.

" Diwan Bahadur Sir. T. Desikachariar Avl., Kt., B.A., B.L., - Words regarding temple usage.

" S. Desikavinayakam Pillai Avl., Trivandrum – Local terms, etc.

R. Foulkes Esq. of Madura – Manuscript in 17 volumes of dictionary of law terms compiled by R. Fischer.

Major-General G.G. Gifford, C.I.E., Surgeon-General-Lists of Tamil names of diseases, collected from the District Officers.

M.R. Ry. T. Govinda Aiyangar Avl., of Tinnevelly, Vishnu Temple Committee-Words relating to temple usage.

J.R. Henderson Esq., and M.R. Ry. K. Rangachariar Avl. – List of names of reptiles and plants.

M.R. Ry. Pandit Iyodhi Doss Avl., A collection of words.

" K. Kasturiranga Aiyangar Avl., Trichinopoly Devasthanam – Words relating to temple usage.

Janab N. Mahammad Sahib Bahadur, M.L.C. – Words relating to Mahammadan usage and customs.

M.R. Ry. V. Manikkavacakam Pillai Avl., Tinnevelly – Local Terms.

" Muttutambi Pillai Avl., of Ceylon – A collection of new words.

" S. R. Muttukumaru Mudaliar Avl., of Ceylon – Words in use in Ceylon.

